விலை ரூபா: 15.00

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

பக்கங்கள்: இருபது — Valampurii

சங்கு 12 வள்ளுவர் ஆண்டு 2042 ஆவணி 24 சனிக்கிழமை (10.09.2011) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 265

ரா ம் கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
RAMCO
SLS 107 தரம் கொண்டதும் 100 வீத சாதாரண போட்லான் சீமெந்து (O.P.C.) ராம்கோ சீமெந்து

# இலங்கைக்கு எதிரான பிரசாரத்தை முறியடிக்கும் முயற்சியில் அரசாங்கம்

## மன்னிப்புச் சபையின் அறிவிப்பால் கலக்கம்

(கொழும்பு)

ஐ.நா.மனித உரிமைகள் சபைக் கூட்டத்தில் அரசுக்கு எதிரான பிரசாரங்களை முறியடிப்பதற்கான ஆதரவைத் திரட்டும் பேச்சுக்களில் அரசாங்கம் ஈடுபட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டது. நல்லிணக்க ஆணைக் குழுவிற்கு எதிராக விசேட அறிக்கை வெளியிட மன்னிப்புச்சபை திட்டமிட்டுள்ள நிலையில் அரசு இம் முயற்சியில் ஈடுபட்டுள்ளது. (20ஆம் பக்கம் பார்க்க)

## 40 ஆயிரம் பேர் இன்னமும் மீள்குடியேற்றப்படவில்லை

(கொழும்பு)

உயர்பாதுகாப்பு வலயங்களைச்சேர்ந்த 40 ஆயிரம் பேர் இன்னமும் மீள்குடியேற்றப் படவில்லை என அரசாங்கம் தெரிவித்துள்ளது.

யாழ்ப்பாண மாவட்ட செயலாளரினால் உச்சநீதிமன்றில் இந்தத் தரவுகள் முன்வைக்கப் பட்டுள்ளன.

உயர் பாதுகாப்பு வலயங்களில் மீள்குடியேற்றப்படவில்லை என தெரிவித்து உச்ச நீதிமன்றில் தாக்கல் செய்யப்பட்ட அடிப்படை உரிமை மீறல் மனு தொடர்பான விசாரணைகளின் போது இந்தத் தரவுகள் வெளியிடப் பட்டுள்ளன.

யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த விவசாயிகளினால் உச்ச (20ஆம் பக்கம் பார்க்க)

## ஏழாலையில் நேற்றிரவும் மர்ம மனிதனால் பீதி!

### பொலிஸார் சம்பவ இடத்துக்கு விரைவு

(யாழ்ப்பாணம்)

ஏழாலை தெற்கு மயிலங்காட்டுப்பகுதியில் நேற்று இரவு 9.30 மணியளவில் மர்ம மனிதர்களின் நடமாட்டம் இருந்ததாக மக்கள் தெரிவித்தனர்.

தென்னை மரம் ஒன்றிலிருந்த மர்ம மனிதன் ஆட்கள் இல்லாத வீட்டினுள் பாய்ந்து ஓடியதாக பொதுமக்கள் கண்டுள்ளனர்.

இதனையடுத்து அவர்கள் சுன்னாகம் பொலிஸாருக்கு தகவல் கொடுத்துள்ளனர். உடனடியாக பொலிஸார் சம்பவ இடத்துக்குச் சென்ற (20ஆம் பக்கம் பார்க்க)

## கேணல் கடாபிக்கு இன்டர்போல் பிடியாணை

(திரிபோலி)

இன்டர்போல் எனப்படும் சர்வதேச பொலிஸாரின் மிக முக்கியமாகத்தேடப்படும் நபர்களின் பட்டியலில் லிபிய அதிபர் கேணல் கடாபி உட்பட அவரது புதல்வர் சைப் அல் இஸ்லாம் மற்றும் இராணுவப் புலனாய்வுப் பிரிவின் முன்னாள் தலைவர் அப்துல்லா அல் செனவ்ஸி ஆகியோரின் பெயர்கள் உள்ளடக்கப்பட்டுள்ளன.

நேற்று (20ஆம் பக்கம் பார்க்க)

## அரசு சார்பானவனாக இருந்தாலும் இனத்தைப் பாதிக்க விடமாட்டேன்

### இராதாகிருஷ்ணன் எம்.பி தெரிவிப்பு

(கொழும்பு)

அரசு சார்பானவனாக இருந்தாலும் தமிழ் இனம் பாதிக்கப்படுவதை பார்த்துக்கொண்டிருக்க முடியாது என நுவரேலியா மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் வி.எஸ்.இராதாகிருஷ்ணன் தெரிவித்துள்ளார். நானு ஓயா செல்னிமா எலிய தோட்டத்தில் நடைபெற்ற பொதுக் கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்துள்ளதாவது, நான் அரசு சார்பான ஒருவன். ஆனால் எமது இனம் மற்றும் சமூகத்தை பாதிக்கும் அல்லது அதற்கு அச்சுறுத்தல் ஏற்படும் எந்த விடயத்தையும் கண்மூடித்தனமாக ஏற்றுக் கொள்ளமாட்டேன். மக்கள் ஆணையால் பதவிக்கு வந்த நாம் இவ்வாறான விடயத்தை எதிர்ப்பது (20ஆம் பக்கம் பார்க்க)

## பொன்சேகாவின் கூற்றுக்கு போதிய சாட்சிகள் இல்லை

### வெள்ளைக்கொடி வழக்கு ஒத்திவைப்பு

(கொழும்பு)

முப்படைகளின் முன்னாள் பிரதானி சரத் பொன்சேகா தொடர்பில் சண்டே லீடர் பத்திரிகை வெளியிட்ட வெள்ளைக்கொடி விவகாரத்தை இதுவரை பெற்ற சாட்சிகளின் மூலம் உறுதிப் படுத்த முடியவில்லை என சட்டமா அதிபர் கொழும்பு மேல் நீதிமன்றிற்கு தெரியப்படுத்தியுள்ளார்.

வெள்ளைக்கொடி விவகார வழக்கு நேற்று கொழும்பு மேல் நீதிமன்றில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டபோது அரச பிரதி வழக்கறிஞர் புவனெகா அலுவிஹாரே இது குறித்து அறிக்கை சமர்ப்பித்து விளக்கமளித்துள்ளார்.

சரத் பொன்சேகாவினால் கூறப்பட்டதாகச் சொல்லப்படும் (20ஆம் பக்கம் பார்க்க)

## இலங்கை நிலைமை குறித்து ஜோர்தானுடன் பீரிஸ் பேச்சு

(கொழும்பு)

ஜோர்தானின் பிரதமர் மரூப், வெளிவிவகார அமைச்சர் ஜூதா ஆகியோரை இலங்கை வெளிவிவகார அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ் சந்தித்து கலந்துரையாடியுள்ளதாக வெளிவிவகார அமைச்சு தெரிவித்துள்ளது.

ஜோர்தான் அரசின் உதவியுடன் இலங்கையில் இடம்பெற்றுவரும் அபிவிருத்தித் திட்டங்கள் குறித்து பீரிஸ் இதன்போது விளக்கமளித்துள்ளார்.

ஐ.நா. மனித உரிமை கவுன்ஸிலில் ஜோர்தானும் அங்கம் வகிக்கின்றது. இதேவேளை, இலங்கைக்கு வருமாறு பீரிஸ் விடுத்த அழைப்பை ஜோர்தானின் வெளிவிவகார அமைச்சர் ஏற்றுக் கொண்டுள்ளார்.

இதன்படி அவர் எதிர்வரும் ஒக்டோபர் அல்லது நவம்பர் மாதத்தில் இலங்கை வரவுள்ளார்.

இலங்கைவரவுள்ள ஜோர்தான் வெளிவிவகார அமைச்சருடன் மேலும் இரு அமைச்சர் களும் ஜோர்தானின் வர்த்தக தலைவர்களும் வருகைத் தரவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ-1)




உலகத் தரம் வாய்ந்த டைல்களை யாழ். நகரில் பெற்றுக்கொள்ள...

நவீன் செரமிக்

No.212, Palaly Rd, Jaffna. 021 222 0033 / 021 222 0044

No.05, Stanly Rd, Jaffna. 021 222 4777 / 021 222 4888

Metro Engineering (Pvt) LTD


## தேசியமட்ட விளையாட்டுப் போட்டி

### உடற்பயிற்சிப் போட்டியில் மானிப்பாய் மகளிர் கல்லூரி சம்பியன்

(பதுளை)

தேசியமட்ட பாடசாலைக்களுக்கு இடையிலான பெரு விளையாட்டுப் போட்டிகளில் பெண்கள் பிரிவு உடற்பயிற்சி போட்டியில் மானிப்பாய் மகளிர் கல்லூரி சம்பியனானது.

அத்துடன் மேற்படி பிரிவில் வவுனியா ரம்பைக்குளம் மகளிர் மகாவித்தியாலயம் இரண்டாமிடத்தைப் பிடித்தது.

தேசியமட்ட பாடசாலைகளுக்கு இடையிலான 2011ஆம் (20ஆம் பக்கம் பார்க்க)

## அமைச்சர் பசில் இன்று யாழ்.வருகை

(யாழ்ப்பாணம்)

பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பசில் ராஜபக்ஷ இன்று யாழ்ப்பாணம் வருகை தரவுள்ளார்.

யாழ்ப்பாணத்திற்கு வருகை தரும் அமைச்சர் (20ஆம் பக்கம் பார்க்க)

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# பொன்சேகாவின் பாதுகாப்பை உறுதிசெய்ய நீதிமன்றம் உத்தரவு

(கொழும்பு)

வெள்ளைக்கொடி விவகார வழக்கில் பிரதான சந்தேக நபராக குறிப்பிடப்பட்டுள்ள முப்படைகளின் முன்னாள் பிரதானி சரத் பொன்சேகாவின் பாதுகாப்பை உறுதி செய்ய நடவடிக்கை எடுக்குமாறு சிறைச்சாலைகள் ஆணையாளர் நாயகத்திற்கு கொழும்பு மேல் நீதிமன்ற மூன்று நீதியரசர்கள் கொண்ட குழு உத்தரவிட்டுள்ளது.

வேறு சிறைச்சாலையில் இருந்து விடுதலைப்புலிகள் இயக்க சந்தேக நபர்கள் வெலிக்கடைச் சிறைச் சாலைக்கு கொண்டு வரப்பட்டுள்ளதாக வெள்ளைக்கொடி விவகார வழக்கு நேற்று விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டபோது சந்தேகநபர் சார்பில் நீதிமன்றில் ஆஜரான சட்டத்தரணி நலின் லத்துஹெட்டி தெரிவித்தார்.

அதேபோன்று சரத் பொன்சேகா வைக்கப்பட்டுள்ள பகுதிக்கும் புலிச் சந்தேக நபர்கள் அழைத்து வரப்படவுள்ளதாக தகவல் கிடைத்துள்ளது என சட்டத்தரணி நீதிமன்றில் குறிப்பிட்டார்.

இந்தக் கருத்துக்களை ஏற்றுக் கொண்ட கொழும்பு மேல் நீதிமன்ற 3 நீதியரசர்கள் கொண்ட குழு சரத் பொன்சேகாவின் பாதுகாப்பை உறுதிசெய்ய நடவடிக்கை எடுக்குமாறு சிறைச்சாலைகள் ஆணையாளர் நாயகத்திற்கு உத்தரவிட்டது.

மேலும் சரத் பொன்சேகா சிறையில் உள்ள பகுதிக்கு புலிச் சந்தேக நபர்களை அழைத்துச் செல்வதை நிறுத்துமாறும் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. (எ-5)

# கிளி.கண்ணன் ஆலய பகுதியிலிருந்து இராணுவம் முற்றாக வெளியேறியது

(கிளிநொச்சி)

கிளிநொச்சி நகர் கிராம சேவையாளர் பிரிவில் உள்ள கண்ணன் ஆலயப் பகுதியில் பாரிய முகாம் அமைத்து நிலை கொண்டிருந்த இராணுவம் அப்பகுதியை விட்டு வெளியேறியுள்ளது.

அத்துடன் கிளிநொச்சி திருநெறிக் கழகக் காணி, கட்டிடங்களிலும் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்திற்கு சொந்தமான காணிக் கட்டிடங்களிலும் பொதுமக்களுக்குச் சொந்தமான சில காணிகள் வீடுகளிலும் வன்னி யுத்தத்தின் பின்னர் காவலரண்கள் மற்றும் பாரிய மண் அணைகளையும் அமைத்து இராணுவம் இதுவரை தங்கியிருந்தது.


இதேவேளை தற்போது இம் முகாமைக் கைவிட்டு இராணுவம் வெளியேறியுள்ள போதும் பொதுமக்களின் காணிகள், வீடுகள் உத்தியோகபூர்வமான முறையில் கையளிக்கப்படவில்லையென தெரிய வருகிறது.

ஏற்கெனவே, பிரசித்திபெற்ற கண்ணன் ஆலயத்திலும் இச்சூற்றாடலில் உள்ள கட்டிடத் திணைக்களம், உள்ளூராட்சித் திணைக்களம், கிளி நொச்சி மரண விசாரணை அதிகாரி அலுவலக வளாகம், தனியார் வீடுகள் முதலானவற்றில் தங்கியிருந்த இராணுவத்தினர் தாம் மேற்கொண்ட நடவடிக்கையினால் அங்கிருந்து வெளியேறியுள்ளதாக கிளிநொச்சி அரசாங்க அதிபர் திருமதி ரூபவதி கேதீஸ்வரன் தெரிவித்துள்ளார்.

இதேவேளை கிளிநொச்சி நகரில் யுத்தத்திற்குப் பின்னர் வருடாந்த மகோற்சவம் இடம்பெற்று வரும் கிளிநொச்சி அருள்மிகு கந்தசாமி ஆலய வளாகப் பகுதிகளில் இன்னமும் இராணுவம் நிலை கொண்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ச-5)

# ஈழக் கவிஞர் ஜெயபாலனுக்கு இந்திய தேசிய விருது

## ஜனாதிபதி வழங்கி வைத்தார்



(புதுடில்லி)

ஈழத்தின் பிரபல கவிஞரும், எழுத்தாளரும், நடிகருமான வ.ஐ.ச. ஜெயபாலனுக்கு ஆடுகளம் திரைப் படத்துக்காக சிறப்பு தேசிய விருது கிடைத்தது. இவ்விருதினை இந்திய ஜனாதிபதி பிரதீபா பட்டேல் வழங்கி கௌரவித்தார்.

அத்துடன், இந்திய சினிமாவின் வளர்ச்சிக்கு பாடுபட்டமைக்காக இயக்குனர் கே. பாலசந்தருக்கு ஜனாதிபதி பிரதீபா பட்டேல் நேற்று தாதா சாகிப் பால்கே விருதை வழங்கினார்.

இந்தியாவின் சிறந்த சினிமா கலைஞர்களுக்கு தேசிய விருதுகள் வழங்கும நிகழ்ச்சி டில்லியில் உள்ள விஞ்ஞானபவனில் நேற்று நடைபெற்றது. இந்த நிகழ்ச்சியில் இந்திய ஜனாதிபதி பிரதீபா பட்டேல் கலந்து கொண்டு விருதுகளை வழங்கினார்.

அத்துடன், சிறந்த நடிகருக்கான விருது தனுஷுக்கும், சிறந்த நடிகைக்கான விருது சரண்யா பொன்வண்ணனுக்கும், சிறந்த இயக்குனருக்கான விருது வெற்றிமாறனுக்கும், சிறந்த திரைக் கதைக்கான விருது வெற்றி மாறனுக்கும சிறந்த எடிட்டருக்கான விருது டி.ஈ. கிஷோருக்கும் சிறந்த நடன அமைப்பாளருக்கான விருது வி. தினேஷ்குமாருக்கும் வழங்கப்பட்டன. (ச-5)

# 30 ஆண்டு கால யுத்தத்தில் 23 ஆயிரம் படையினரே காயம்

## அரசு தெரிவிப்பு

(கொழும்பு)

கடந்த 30 வருட காலம் இலங்கையில் தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கத்திற்கு எதிராக இடம்பெற்ற யுத்தத்தில் 23 ஆயிரத்து 287 படையினர் காயமடைந்ததாகவும் அவர்களில் ஊனமுற்ற 3 ஆயிரத்து 303 படையினருக்கு வீடுகள் கட்டிக் கொடுக்கப்பட்டுள்ளதாகவும் ஆளும் கட்சி பிரதம கொறடா அமைச்சர் தினேஸ் குணவர்த்தன தெரிவித்துள்ளார்.

இலங்கை யுத்தத்தில் ஊனமுற்ற எத்தனை படையினருக்கு வீடுகள் கட்டிக் கொடுக்கப்பட்டுள்ளன என ஐ.தே.க பாராளுமன்ற உறுப்பினர் தயாசிறி ஜயசேகர சபையில் நேற்று கேள்வி எழுப்பினார்.

அதற்கு பதிலளிக்கும் முகமாவே அமைச்சர் தினேஸ் குணவர்த்தன மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

புலிகளுடனான யுத்தத்தில் 21 ஆயிர்த்து 327 இராணுவத் தினரும், 430 கடற்படையினரும், 234 விமானப் படையினரும் ஆயிரத்து 296 பொலிஸாரும் காயமடைந்ததாக அமைச்சர் தினேஸ் குணவர்த்தன மேலும் குறிப்பிட்டார். (எ-5)


## உடன்தேவை

மடப்பள்ளி அனுபவமுள்ள உத[illegible]தணர் ஒருவர் உடனடியாகதேவை. சுறுசுறுப்பும் விவேகமுமுள்ள ஒருவர் விரும்பத்தக்கது. சம்பளம் பேசித்தீர்மானிக்கப்படும். திறமைக்குத் தகுந்த ஊதியம் வழங்கப்படும்.

தொடர்பு கொள்ள வேண்டிய தொலைபேசி இலக்கங்கள் :- 0776248780, 077315[illegible]7

(6099)

## வேலை ஆட்கள் தேவை

யாழ். நகரில் உள்ள எமது புடைவை நிறுவனத்துக்கு ஆண்,பெண் விற்பனையாளர் தேவை. அனுபவமுள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

தொடர்புகளுக்கு: 0212225578,0777488093

(6104)

## கேள்வி அறிவித்தல்

### யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

1. பிரதான உணவகம் - திருநெல்வேலி
2. மருத்துவபீட உணவகம் - திருநெல்வேலி
3. ஆனந்தக்குமாரசுவாமி பெண்கள் விடுதி உணவகம்-திருநெல்வேலி
4. பாலசிங்கம் ஆண்கள் விடுதி உணவகம்-திருநெல்வேலி
5. இராமநாதன் நுண்கலைக்கழக உணவகம் -மருதனார்மடம்
6. சித்தமருத்துவத்துறை உணவகம் - கைதடி

மேற்படி உணவகங்களை நடத்துவதற்கு யாழ்ப்பாணப் பல்கலைக்கழக பதிவாளர் பணிமனையில் 2011-09-23ஆம் திகதி முற்பகல் 10.00 மணி வரை பொறியிடப்பட்ட கேள்விகள் ஏற்றுக்கொள்ளப்படும்.

மீளளிக்கப்படும் கேள்வி வைப்பு பணமாக ரூபா 1000/= உம் மீளளிக்கப்படாத கட்டணமாக ரூபா 200/=உம் தனித்தனியாக பல்கலைக்கழக நிதிக்கிளையில் செலுத்தி பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டினைச் சமர்ப்பித்து கேள்விப் படிவங்களை இப் பல் கலைக் கழக நலச் சேவைகள் கிளையிலிருந்து பெற்றுக் கொள்ளலாம். ஒவ்வொரு உணவகத்திற்கும் தனித்தனி கேள்விப் படிவங்கள் அனுப்பப்படல் வேண்டும்.

மேற்குறிப்பிட்ட கேள்விப் படிவங்களில் அனுப்பப்படாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கும் உணவகத்தின் பெயர் தெளிவாகக் குறிப்பிடப்படுதல் வேண்டும்.

மேலதிக விபரங்களை அலுவலக நேரங்களில் நலச் சேவைகள் கிளையில் இருந்து பெற்றுக் கொள்ளலாம்.

பதிவாளர் 09.09.2011
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

(அ-4376)

## தவறிவிட்டது

முத்துக்குமார்- உருத்திரானந்தா ஆகியவருடைய சாரதி அனுமதிப் பத்திரம் (DLA00113957) மற்றும் இன்சுரன்ஸ், ரைக்ஸ் என்பன யாழ் இந்து ஆரம்பப் பாடசாலைக்கு அண்மையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவுடன் ஒப்படைக்கவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும்.

T.P.: 075 0395005

802, பலாலி வீதி, திருநெல்வேலி (கொமர்சல் வங்கி அருகாமை) (6102)



## கேதார கௌரி விரதம்

### அருள் மிகு காளியம்பாள் தேவஸ்தானம் திருவண்ணை கன்னாதிட்டி யாழ்ப்பாணம்

விரதாரம்பம்: 06-10-2011 வியாழக்கிழமை

விரத பூர்த்தி: 26-10-2011 புதன்கிழமை

கௌரி விரதம் அனுஷ்டிக்கும் அடியார்களே!

தங்கள் பெயர், நட்சத்திரங்களை இன்று 10.09.2011 சனிக்கிழமை முதல் பதிவு செய்து கொள்ளலாமென்பதை அன்புடன் தெரிவித்துக் கொள்கின்றோம்.

தேவஸ்தான
ஆதீனகர்த்தாக்கள்

## அதிர்ஷ்ட லாப சீட்டிழுப்பு முடிவுகள்

யாழ்.அச்சுவேலி மத்திய கல்லூரியின் விளையாட்டுத் துறை வளர்ச்சிக்காக நடத்தப்பட்ட சீட்டிழுப்பு முடிவுகள்:

1-ம் பரிசு சீட்டு இலக்கம் 2437
2-ம் பரிசு சீட்டு இலக்கம் 451
3-ம் பரிசு சீட்டு இலக்கம் 2944

ஆறுதல் பரிசுக்குரிய சீட்டிலக்கங்கள்

2974, 1474, 1030, 2945, 2682.

குறிப்பு: 30.09.2011 ஆம் திகதிக்கு முன் பற்றுச்சீட்டு இலக்கத்தை உறுதிப்படுத்தி பரிசினைப் பெற்றுக்கொள்ளவும்.

- அதிபர், யாழ்.அச்சுவேலி மத்திய கல்லூரி

(6105)

## கண்ணீர் அஞ்சலி

### அமரர் திருமதி சுகிர்தலக்ஷ்மி சுப்பிரமணியம்

(சுகிர்தா ரீச்சர்)



எமது கல்லூரியில் 42 வருட காலமாக ஆசிரியராகவும் பிரதி அதிபராகவும் கடமையாற்றி, தற்போது கனடாவில் வசித்து வந்தவரும் எமது கல்லூரியின் பழைய மாணவியும் கனடாப் பழைய மாணவர் சங்க முன்னாள் தலைவரும் ஆயுட்கால உப தலைவருமாகிய திருமதி சுகிர்தலக்ஷ்மி சுப்பிரமணியம் அவர்கள் கடந்த வியாழக்கிழமை (08.09.2011) அன்று கனடா ஜோக் மத்திய வைத்திய சாலையில் காலமானதையிட்டு எமது கண்ணீர் அஞ்சலியைக் காணிக்கையாக்கி, அன்னாரின் மறைவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினரின் துயரில் நாமும் பங்கு கொள்வதுடன், அவரின் பிரிவால் வாடும் எண்ணற்ற இதயங்களுடன் எம்மையும் இணைத்துக் கொள்ளுகின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!

அதிபர், ஆசிரியர்கள்,
மாணவர்கள், கல்விசாரா ஊழியர்கள்
S.D.S., S.D.C
கொக்குவில் இந்துக் கல்லூரி, கொக்குவில்

(அ-4374)

# இன்று ஒரு தகவல்

## மாறுவது மனம்!

புத்தர் அமைதியான ஓர் இடத்திலே அமர்ந்திருந்தார். அவர் அருகிலே சீடர் ஒருவன் நின்று கொண்டிருந்தான்.

அப்பொழுது கோபத்துடன் வந்த ஒருவன் புத்தருக்கு முன்னால் போய் நின்று அவர் முகத்திலே துப்பினான். அவன் அவ்வாறு செய்தமைக்கான காரணம் என்னவென்று தெரியவில்லை.

இதனால் புத்தருடைய முகத்தில் எதுவித மாறுதலும் ஏற்படவில்லை. தனது முகத்தை எதுவும் பேசாமல் துடைத்துக் கொண்டார்.

இதனைப் பார்த்துக் கொண்டிருந்த சீடன் ஆனந்தனுக்கு பயங்கரமான கோபம் வந்தது. அவன் புத்தரைப் பார்த்து நீங்கள் சிறிது சம்மதம் கொடுங்கள். இந்த மனிதனை நான் கவனித்துக் கொள்கின்றேன். இவன் இப்பொழுது செய்த இந்தச் செயலுக்கு என்ன தண்டனை என்பதை புரியவைக்கின்றேன் என்று சொன்னான்.

உடனே சீடனைப் பார்த்து புத்தர் பொறுமையாக பதில் சொன்னார். ``ஆனந்தா! நீ ஆத்திரப்படாதே! நான் என்னுடைய கடந்த கால வாழ்க்கையிலே இவனுக்கு ஏதாவது கெடுதல் செய்திருப்பேன். இப்பொழுது அவன் அதைத் திருப்பிக் கொடுத்து விட்டான்! எங்களுக்குள்ளே கணக்கு தீர்ந்து விட்டது என்றார். அதன் பின்னர் அந்த மனிதனைப் பார்த்து ``ஐயா! மிகவும் நன்றி! நான் உமக்கு ஏதாவது கெடுதல் செய்திருப்பேன். சில நேரம் எனக்குத் தெரிந்தும் இருக்கும். தெரியாமலும் இருக்கலாம். எப்படியிருந்தாலும் காரணம் இல்லாமல் எதுவும் நடப்பதில்லை! நான் உமக்கு எதிராக எதுவும் செய்யப்போவதில்லை! அப்படிச் செய்தால் அது மீண்டும் தொடரும். உமக்கு மிகவும் நன்றி. நீங்கள் ஏதாவது எனக்கு சொல்ல வேண்டியுள்ளதா?'' என்று கேட்டார்.

இதனைக் கேட்ட அம் மனிதனுக்கு எதுவும் புரியாமல் குழம்பிப் போய் நின்றான். ஏனென்றால் புத்தர் இவ்வாறு சொல்லுவாரென்று அவன் எதிர்பார்க்கவில்லை! நிச்சயமாக தனக்கு அடிவிழும் என்றுதான் அவன் நினைத்திருந்தான்.

அதன் பின்னர் எதுவுமே கதைக்காமல்! அமைதியாக தனது வீட்டிற்கு சென்று உறங்கினான். அவனுக்கு உறக்கமே வரவில்லை. மாறி மாறி புரண்டு கொண்டே இருந்தான்.

மறுநாள் காலையில் எழுந்து மறுபடியும் புத்தரிடம் சென்றான். அவர் காலடியிலே வீழ்ந்து ஐயா... என்னை மன்னித்துக் கொள்ளுங்கள்! என்றான். அப்பொழுது புத்தர் அவனைத் தூக்கி நிறுத்தி ``இதோ பாரப்பா! எல்லாவற்றையும் மறந்து விடு! நேற்றைய பொழுதை நினைக்காதே... அது நேற்றோடு போய்விட்டது'' என்று கூறினார்.

கங்கை இருக்கின்றதே... அது காலங்காலமாக ஓடிக் கொண்டேதான் இருக்கின்றது. ஆனால் நேற்றைக்கு ஓடிய தண்ணீர் இன்றைக்கு இல்லை! அது மாறிக் கொண்டேதான் இருக்கும்.

அதுபோலதான் மனிதர்களும் மாறிக் கொண்டே இருப்பார்கள். நேற்றைய மனிதன் இன்றைக்கு இல்லை. அது புத்தராக இருந்தாலும் சரி... அவர் முகத்திலே உமிழ்ந்த அந்த மனிதனாக இருந்தாலும் சரி. எல்லோரும் மாறத்தான் மாறுவார்கள்!

நேற்றைய கோபம் இன்றைக்குக் கிடையாது. அதனுடைய சுவடு கூட இல்லாமல் போய்விட்டது. அது புத்தருடைய மனோபலம்.

உங்களை யாராவது இழிவுபடுத்த முனைந்தால் நன்றி சொல்லுங்கள். அதுதான் பெரியவர்கள் நமக்கு கற்றுத் தந்த பாடம்.

இவ்வாறான செயலை புத்தரைப் போல் உயர்நிலையில் உள்ளவரே புரிந்து கொள்ள முடியும். சாதாரண நிலையிலே இருக்கின்ற நமக்கு இது எந்த அளவுக்குச் சரிப்பட்டு வருமென்பது வேறு விடயம்!

ஒருவன் அப்பாவித்தனமாக வீதியிலே நின்று கொண்டிருந்தான். அப்பொழுது அவ் வீதியாலே வந்த வேறொருவன் அவன் அருகிலே வந்து அவனை முறைத்துப் பார்த்தான். பின்னர் அவனை ஓங்கி ஒரு அறை அறைந்தான். அறை வாங்கியவனுக்கு ஒன்றுமே புரியவில்லை. கன்னத்தை தடவிய படி பொறுமையாக ``ஏற்கனவே உனக்கு நான் ஏதாவது கெடுதல் செய்திருக்கின்றேனா? என்று அவனைப் பார்த்து கேட்டான்.

அதற்கு மற்றையவன் ``நேற்றைக்கு இதே இடத்திலே என்னை ஒருவன் பலமாக அறைந்துவிட்டான். அதைத் திருப்பிக் கொடுப்பதற்கு இன்றைக்கு நான் வந்தேன். இப்போது அவனை இங்கே காணவில்லை... அதனாலே அவனுக்குக் கொடுக்க வேண்டியதை உங்களுக்கு கொடுத்து விட்டேன். எப்படியோ என் கணக்கு தீர்ந்தது! என்று சொல்லிக் கொண்டு அவன் பாட்டுக்கு போய்க் கொண்டேயிருந்தான்.

*தென்கச்சி கோ. சுவாமிநாதன்*

# இலங்கையில் முதல் முறையாக சமாதான நீதிவான்கள் குறித்து ஆய்வு

(கொழும்பு)

இலங்கையில் முதல் தடவையாக சமாதான நீதிவான்கள் தொடர்பில் ஆய்வு நடத்தப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. நாடு முழுவதிலும் உள்ள சமாதான நீதிவான்களின் செயற்பாடுகளை வினைத்திறனாக்கும் நோக்கில் இந்த ஆய்வு நடத்தப்படவுள்ளதாக நீதி அமைச்சின் சிரேஷ்ட செயலாளர் கே.டி.அரான்தார தெரிவித்துள்ளார்.

சமாதான நீதிவான்களுக்கு உரிய மரியாதை ஏற்படுத்திக் கொடுக்கவும் அவர்களின் உரிமைகளை பாதுகாக்கவும் இந்த ஆய்வு வழிகோலும் என அவர் நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.

1802 ஆம் ஆண்டு முதல் இலங்கையில் சமாதான நீதிவான்கள் கடமையில் ஈடுபட்டு வருகின்றனர். எனினும் இதுவரையில் இலங்கையின் சமாதான நீதிவான்களின் எண்ணிக்கை தொடர்பில் தனியான ஆய்வுகள் எதுவும் நடத்தப்படவில்லை.

இதேவேளை, அரசியல் ரீதியான காரணங்களுக்காக சில மொழித்திறனற்ற பொருத்தமற்ற நபர்களுக்கு சமாதான நீதிவான் பதவி வழங்கப்பட்டுள்ளதாக அரசியல் அவதானிகள் குற்றம் சுமத்தியுள்ளனர்.

அதேவேளை, வருமானத்தை எதிர்நோக்கும் சில சட்டவிரோதமான செயல்களில் ஈடுபட்டு சமாதான நீதிவான்கள் சிலர் தமது பதவியை துஷ்பிரயோகம் செய்வதாகவும் குற்றஞ்சுமத்தப்படுகிறது.

இதனால் சமாதான நீதிவான்களுக்கு காணப்படும் சமூக அந்தஸ்து, மரியாதை என்பன வீழ்ச்சியடைந்துள்ளன எனவும் மக்கள் தெரிவித்துள்ளனர். (ஸ்ரீ-2)

# கண்டாவளை பிரதேச செயலாளர் பிரிவில் நடமாடும் சேவை

தேசிய மொழிகள் மற்றும் சமூக ஒருமைப்பாட்டு அமைச்சினால் ஐக்கிய நாடுகள் அபிவிருத்தித்திட்ட நீதி நியாயத்தை சமமாக அணுகும் கருத்திட்டத்தின் அனுசரணையுடன் கண்டாவளை பிரதேச செயலாளர் பிரிவில் நடமாடும் சேவை ஒன்று எதிர்வரும் 13 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 9 மணி தொடக்கம் மாலை 4 மணிவரை நடை பெறவுள்ளது.

இதில் ஆட்பதிவுத்திணைக்களம் மற்றும் பதிவாளர் ஆணையாளர் திணைக்களம் ஆகியவற்றின் உயரதிகாரிகள் கொழும்பில் இருந்து வருகை தரவுள்ளனர்.

எனவே, கண்டாவளைப் பிரதேச செயலகப் பிரிவிலுள்ள மக்கள் புதிய அடையாள அட்டை எடுத்தல், அடையாள அட்டை தொடர்பான ஏனைய பிரச்சினைகள் மற்றும் பிறப்பு, இறப்பு, விவாகப்பத்திரம் தொடர்பான பிரச்சினைகளுக்கு தீர்வினைப் பெற்றுக் கொள்ள முடியும்.

அத்துடன் தேசிய அடையாள அட்டைக்கு புகைப்படம் பிடித்தல், அதற்குரிய முத்திரைக்கட்டணம், ஆவணங்களுக்குரிய முத்திரைக்கட்டணம் என்பன இலவசமாக செய்யப்படும் என கண்டாவளை உதவி அரசாங்க அதிபர் அறிவித்துள்ளார். (ஸ்ரீ)

# குடாநாட்டு சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | நெல்லியடி | திருநெல்வேலி | சாவகச்சேரி |
|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 80 | 100 | 80 |
| உருளைக்கிழங்கு | 105 | 140 | 80 |
| பச்சைமிளகாய் | 90 | 120 | 60 |
| தக்காளி | 30 | 40 | 40 |
| மரவள்ளிக் கிழங்கு | 30 | 50 | 50 |
| கோவா | 30 | 60 | 60 |
| கரட் | 50 | 80 | 40 |
| பூசணி | 25 | 40 | 30 |
| புடோல் | 30 | 40 | 40 |
| வாழைக்காய் | 40 | 30 | 40 |
| சின்ன வெங்காயம் | 80 | 100 | 90 |
| பெரிய வெங்காயம் | 55 | 60 | 80 |
| பாகற்காய் | 80 | 120 | 70 |
| வெண்டிக்காய் | 70 | 40 | 60 |
| கருணைக் கிழங்கு | -- | 130 | 90 |
| பயற்றங்காய் | 90 | 80 | 70 |
| லீக்ஸ் | 50 | 60 | 50 |
| பீற்றூட் | 15 | 20 | 20 |
| கறிமிளகாய் | 60 | 40 | 50 |
| முருங்கைக்காய் | 80 | 160 | 100 |
| போஞ்சி | -- | 90 | 90 |
| கத்தரிதம்புள்ள | 60 | 70 | 60 |
| கீரை - 1 பிடி | 08 | 20 | 20 |
| தேசிக்காய் | 150 | 160 | 110 |
| தேங்காய் (ஒன்று) | 20-40 | 30 | 30 |

# இராசி பலன்

*10.09.2011*
*(ஆவணி 24, சனிக்கிழமை)*
*சூரிய உதயம் காலை 6.02 மணிக்கு*
*திரயோதசி பிற்பகல் 12.53 மணிவரை*
*அவிட்டம் பின்னிரவு 3.53 மணிவரை*
*இராகுகாலம் 9.03-10.33 மணிவரை*
*சுபநேரம் 3.03-4.33 மணிவரை*
*நடேசர் அபிஷேகம்.*

**மேடம்** தொழில் வளர்ச்சி மேலோங்கும் நாள், நீங்கள் எதிர்பாராத ஒருவர் உங்களை தொலைபேசியில் தொடர்பு கொண்டு பேசலாம், புதிய பொருட் சேர்க்கையுண்டு.

**இடபம்** கூட்டுத் தொழிலில் ஏற்பட்ட குழப்பங்கள் அகலும், தந்தை வழியில் தனலாபம் உண்டு, தூர தேசச் செய்திகள் வந்து சேரலாம், உடல் நலம் சீராகி உற்சாகமடைவீர்கள்.

**மிதுனம்** வழிபாட்டால் வளர்ச்சி கூடும் நாள், எதிலும் அவசரத்தை தவிர்ப்பது நல்லது, வியாபாரத்தில் ஏற்பட்ட இழப்புக்களை ஈடு செய்ய முன்வருவீர்கள், பகையொன்று நட்பாகலாம்.

**கடகம்** காலையில் கலகலப்பும் மாலையில் சலசலப்பும் ஏற்படும் நாள், ஆரோக்கியத்தில் அச்சுறுத்தல்கள் தோன்றி மறையும், எடுத்த காரியங்கள் தாமதமாகும், போசன சுகமுண்டு.

**சிங்கம்** உடல் நலம் சீராகி உற்சாகமாக செயற்படும் நாள், குடும்பத்தில் பெரியவர்களினால் ஏற்பட்ட பிரச்சினைக்கு முற்றுப்புள்ளி வைப்பீர்கள், குடும்பத்தில் அந்நியோன்னியம் அதிகரிக்கும்.

**கன்னி** பிள்ளைகளால் பெருமை சேரும் நாள், குடும்பத்தில் உங்கள் செல்வாக்கு மேலோங்கும், மருத்துவச் செலவுகள் குறையும், அரைகுறையாக இருந்த பணியை மீண்டும் தொடர்வீர்கள்.

**துலாம்** தாய் வழி ஆதரவு பெருகும், சுப காரியப் பேச்சுக்கள் நல்ல முடிவுக்கு வரும், பூர்வீகச் சொத்துக்களால் நன்மையுண்டு, வியாபார விருத்தியுண்டு, நல்லவர்களின் தொடர்புகள் அதிகரிக்கும்.

**விருச்சிகம்** எடுத்த காரியத்தில் எளிதில் வெற்றி கிடைக்கும் நாள், செல்வாக்கை பெருக்க சிவனை வழிபட வேண்டிய நாள், பயணங்களால் பலனுண்டு, பாராட்டும் புகழும் அதிகரிக்கும்.

**தனுசு** தாராளமாக செலவு செய்து மகிழும் நாள், குடும்பத்தில் பெருமை தரும் வகையில் சில நிகழ்வுகள் நடக்கலாம், தொலைபேசி வழித் தகவல் தொழில் வளர்ச்சிக்கு உறுதுணை புரியும்.

**மகரம்** முன் கோபமும் அலைச்சலும் ஏற்படலாம், உடல் நலம் சீராகும், சொன்ன சொல்லை காப்பாற்றி மகிழ்வீர்கள், பக்குவமாகப் பேசி காரியம் சாதிக்க வேண்டிய நாள்.

**கும்பம்** முருகப் பெருமான் வழிபாடு முன்னேற்றம் தரும், புதிய பொறுப்புக்களால் வேலைச்சுமை கூடும், உறவினருக்காக ஒரு தொகையை செலவு செய்ய வேண்டி வரலாம், தேவையற்ற கற்பனைகள் குடிகொள்ளும் நாள்.

**மீனம்** வழிபாட்டால் வளர்ச்சி கூடும் நாள், உறவினர் சிலரின் அன்புக் கட்டளைகளுக்கு ஆட்பட நேரிடலாம், குடும்ப மகிழ்ச்சி அதிகரிக்கும், அந்நிய தேசச் செய்திகள் ஆச்சரியப்படவைக்கும்.

வளவன்

## நிர்வாகசபைத் தெரிவு

(பொற்பதி)

யா/ வெற்றிலைக்கேணி பரமேஸ்வரா வித்தியாலயத்தின் பொதுக்கூட்டமும் புதிய நிர்வாக சபைத் தெரிவும் நேற்றைய தினம் நடைபெற்றது.

இதில் பாடசாலை அபிவிருத்தி சங்கத் தலைவராக த.செல்வக்குமார், செயலாளராக யோ. நெடுஞ்செழியன், பொருளாளராக சிவனேசன் ஆகியோரும்7 நிர்வாக உறுப்பினர்களும் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

இதில் பாடசாலை அபிவிருத்தி தொடர்பான பல விடயங்கள் கலந்தாலோசிக்கப்பட்டதாக பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தினர் தெரிவிக்கின்றனர். (ஸ்ரீ-12-64)

## வேலணை பகுதியில் நீர்நிலைகள் புனரமைப்பு விரைவில் ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

வேலணைப் பகுதிக்கு விஜயம் மேற்கொண்ட பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அப்பகுதியின் முக்கிய நீர் நிலைகளைப் பார்வையிட்டு அவற்றை ஆழமாக்கி மழை நீரை சேமிப்பதுடன் குடிநீர்ப் பிரச்சினைக்குத் தீர்வு காண்பது தொடர்பாகவும் ஆராய்ந்துள்ளார்.

தீவகத்தில் நிலவிவரும் கடும் வரட்சி காரணமாக மக்கள் குடிநீரைப் பெற்றுக் கொள்வதில் பெரும் சிரமங்களை எதிர்நோக்கி வருகின்ற அதேவேளை கால்நடைகளும் குடிதண்ணீரின்றி அவதிப்படுகின்றன.

இந்நிலையில் அப்பகுதியிலுள்ள குளங்களை ஆழப்படுத்தி அவற்றில் மழை நீரைத் தேக்குவதனூடாக குடிநீர்ப் பிரச்சினைக்குத் தீர்வு காண முடியும் என்பதை கருத்தில் கொண்டு அவற்றை ஆழமாக்கும் பணிகள் தற்போது முடுக்கி விடப்பட்டுள்ளன.

இதன்பிரகாரம் குறிகட்டுவான் பிரதான வீதி அண்மையிலுள்ள இடிவிழுந்த குன்றும் அராலிச் சந்திக்கு அண்மையிலுள்ள நன்னீர்த் தேக்கம், வேலணை வெட்டுக்குளம், வேலணை பெருங்குளம் ஆகிய குளங்களை பார்வையிட்ட அமைச்சர் அவற்றை ஆழப்படுத்துவது தொடர்பில் துறைசார்ந்தோரிடம் கேட்டறிந்து கொண்டார்.

இதன்மூலம் வேலணைப் பகுதியில் நிலவும் குடிநீர்த்தட்டுப்பாட்டை நிவர்த்தி செய்ய முடியும் என்பது குறிப்பிடத்தக்கது.

இதன்போது அமைச்சருடன் வடமாகாண ஆளுநர் ஜீ.ஏ.சந்திரசிறி மற்றும் துறைசார்ந்த அதிகாரிகள் பலரும் உடனிருந்தனர். (ஸ்ரீ)

## கும்பாபிஷேகம்

(சாவகச்சேரி)

கொடிகாமம் ஸ்ரீ மகா லாவண்ய காளி அம்மன் ஆலய மகா கும்பாபிஷேகம் எதிர்வரும் 16 ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 5.30 மணிக்கு நடைபெறவுள்ளது.

இதில் எதிர்வரும் 15 ஆம் திகதி வியாழக்கிழமை காலை 7 மணி தொடக்கம் பிற்பகல் 5 மணி வரை பக்தர்கள் எண்ணெய்க் காப்பு சாத்துதல் இடம்பெறும்.

அத்தோடு தென்மராட்சி பகுதியில் முதல் முறையாக 33 யாக குண்டங்கள் அமைத்து குடமுழுக்கு வைபவம் இடம்பெறுவதும் குறிப்பிடத்தக்கது.

இதில் வாழ்த்துரையை மதுரையிலிருந்து வருகை தரவுள்ள சக்தி உபாஷகர் என்.ஆர்.ரவீந்திரசாஸ்திரிகளும், அருளாசியுரையை நல்லை ஆதீனமுதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர பரமாச்சரிய சுவாமிகள் ஆகியோர் நிகழ்த்துவர். (ஸ்ரீ-12-29)

## வித்தகபுரம் மக்களுக்கு...

(யாழ்ப்பாணம்)

என்றிப் திட்டத்தில் முதல் கொடுப்பனவு வழங்குவதற்கான பட்டியலில் கையொப்பமிடாதவர்களின் பெயர்ப்பட்டியல் வித்தகபுரம் கிராம சேவகர் அலுவலகத்தில் காட்சிப்படுத்தப்பட்டுள்ளது.

எனவே கையொப்பமிடாதவர்கள் எதிர்வரும் 13 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 9 மணிக்கு கிராம சேவகர் அலுவலகத்திற்கு சமூகமளிக்குமாறு கிராம அபிவிருத்திச் சங்க செயலாளர் கேட்டுள்ளார்.

அத்துடன் காசுக்கான வேலைத்திட்டம் நடைபெறுகின்றது எனவும் கலந்து கொள்ளாதவர்களை கலந்து கொள்ளுமாறும் அவர் தெரிவித்துள்ளார். (ஸ்ரீ-2)

## 1979 இற்குமுன் காணிகளை ஈடுவைத்து வீடமைப்புக்கடன் பெற்று கொண்டோருக்கு

(யாழ்ப்பாணம்)

வீடமைப்புத் திணைக்களத்தில் கடந்த 1979 ஆம் ஆண்டிற்கு முன் காணிகளை ஈடுவைத்து வீடமைப்பு கடனைப் பெற்றுக் கொண்டவர்கள் வீடமைப்பு அதிகார சபையின் மாவட்ட காரியாலயத்தில் செலுத்த வேண்டிய முழுப்பணத்தையும் செலுத்தி ஈடு [illegible] காணி உறுதிகளை விரைவாகப் பெற்றுக் கொள்ளுமாறு வீடமைப்பு அதிகார சபையின் மாவட்ட முகாமையாளர் ஜெ.நோயல் ஜெயச்சந்திரன் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

இதில் வேலணை, தெல்லிப்பழை, ஊர்காவற்றுறை ஆகிய பிரதேசங்களைச் சேர்ந்தவர்களே கூடுதலாக இக்கடன்தொகையைப் பெற்றுள்ளனர்.

இது தொடர்பான மேலதிக விபரங்களைப் பெற 0770590842 என்ற தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளுமாறும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ஸ்ரீ-3)

## நூற்றாண்டு விழா தொடர்பான கூட்டம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.அராலி சரஸ்வதி மகா வித்தியாலயம் 2012 ஆம் ஆண்டு தனது நூற்றாண்டு விழாவினை மிகக் கோலாகலமாக கொண்டாடவுள்ளது.

இவ்விழா தொடர்பான 2 ஆவது எழுச்சிக் கூட்டம் நாளை ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 4 மணியளவில் பாடசாலை அதிபரும் பழைய மாணவர் சங்கத் தலைவருமாகிய ம.சோமசுந்தரம் தலைமையில் நடைபெறவுள்ளது.

இக்கூட்டத்தில் நூற்றாண்டு விழாவின் முதல் நாள் நிகழ்வுகளாக நடைபெறவிருக்கின்ற கல்விசார் போட்டிகள் மற்றும் இணைபாடவிதான செயற்பாட்டுப் போட்டிகள் போன்ற பல விடயங்களை ஆராயவிருப்பதனால் அனைத்துப் பழைய மாணவர்களையும் பாடசாலை நலன் விரும்பிகளையும் தவறாது கலந்து கொள்ளுமாறு பழைய மாணவர் சங்கத்தினர் கேட்டுக் கொள்கின்றனர். (ஸ்ரீ-12-17)

## யாழ்.மாவட்டத்தின் பாதுகாப்பு தொடர்பான கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டத்தின் பாதுகாப்பு தொடர்பான கலந்துரையாடல் இன்று சனிக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு வடமாகாண சபை கேட்போர் கூடத்தில் வடமாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜீ.ஏ.சந்திரசிறி தலைமையில் நடைபெறும்.

எனவே யாழ். மாவட்டத்திலுள்ள சகல பிரதேச செயலாளர்கள், மேலதிக அரசாங்க அதிபர்கள் ஆகியோரை கலந்து கொள்ளுமாறு வடமாகாண ஆளுநரின் செயலாளர் இ.இளங்கோவன் அறிவித்துள்ளார். (ஸ்ரீ-2)




## இராஜவீதி அகலிப்பு செய்வதற்கான பூர்வாங்க வேலைகள் ஆரம்பம்

(அச்சுவேலி)

யாழ்ப்பாணத்திலிருந்து அச்சுவேலி வரைக்குமான இராஜவீதியை அகலிப்பு செய்வதற்கான பூர்வாங்க வேலைகள் ஆரம்பிக்கப்படவுள்ளன.

இதில் முதற்கட்டமாக இவ்வீதியின் இரண்டு பக்கமும் 5 மீற்றர் அகலமாகக்கப்படவுள்ளது.

இதனையடுத்து வீதி அபிவிருத்தி அதிகாரசபைப் அதிகாரிகள்,அப்பகுதி கிராம அலுவலர்கள், சமுர்த்தி உத்தியோகத்தர்கள் ஆகியோர் இணைந்து காணி உரிமையாளர்களிடம் கலந்துரையாடி சம்மதக் கடிதம் பெறும் நடவடிக்கையில் ஈடுபட்டுவருகின்றனர். (ஸ்ரீ-12-70)

## நீர்வழங்கலுக்கான கால்வாய் சேதமடைந்து தூர்ந்த நிலையில்


### புனரமைத்துத் தருமாறு மக்கள் கோரிக்கை

(அச்சுவேலி)

புத்தூர் நிலாவரை வற்றாத நீர் ஊற்றிலிருந்து 1990 ஆம் ஆண்டு வரை சிறுப்பிட்டி, புத்தூர், நீர்வேலி பகுதிகளுக்கு விவசாய தேவையின் பொருட்டு நீர் வழங்கப்பட்டு வந்தது.அதன்பின் நாட்டில் நிலவிய அசாதாரண சூழ்நிலையினால் அத்தேவை நிறுத்தப்பட்டது.

அத்தோடு நீர் வழங்கலுக்கான கால்வாய்களும் சேதமடைந்து தூர்ந்த நிலையில் காணப்படுகின்றது.

தற்போது வீதி அகலிப்பு நடவடிக்கையை மேற்கொள்ளும் போது நீர் வழங்கல் திட்டத்தையும் புனரமைத்துத் தரும்படி அப்பகுதி விவசாய மக்கள் கோரிக்கை விடுகின்றனர். (ஸ்ரீ-12-70)





கரவெட்டி தபால் அலுவலகத்தினால் தமது சேவையை விஸ்தரிக்கும் நோக்குடன் ஆரம்பித்த பிரசார நடவடிக்கைகள் நேற்று காலை 9 மணிக்கு நெல்லியடி நகரில் இடம்பெற்றது. இதில் கரவெட்டி தபால் அஞ்சல் அலுவலக அதிபர் அ.அருளானந்தசோதி தலைமையில் தபால் உத்தியோகத்தர்கள் பிரசார நடவடிக்கையில் ஈடுபடுவதையும் தபால் உத்தியோகத்தர்கள் மக்களுக்கு துண்டுப் பிரசுரங்களை விநியோகிப்பதையும் படங்களில் காணலாம்.

(படங்கள்:-கரவெட்டிச் செய்தியாளர்)

# அதிபர் பதவி வெற்றிடம்

துணுக்காய்க் கல்வி வலயத்திலுள்ள மு/குழாமுறிப்பு அ.த.க.படசாலை (பாடசாலை வகை -II), மு/தென்னியன் குளம் அ.த.க. (பாடசாலை வகை-II) ஆகிய பாடசாலைகளில் அதிபர் பதவி வெற்றிடமாகவுள்ளது.

இப்பதவிக்கு தகைமையுடையோரிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

விண்ணப்பதாரி ஆகக்குறைந்தது 3 வருடகாலமேனும் சேவையாற்றக்கூடிய வயதெல்லை உடையவராக இருத்தல் வேண்டும்.

அத்தோடு இலங்கை ஆசிரியர் சேவை தரம்-1 அல்லது இலங்கை ஆசிரியர் சேவை-2-I ஐச் சேர்ந்தவராக இருத்தல் வேண்டும்.

மேலும் இலங்கை ஆசிரியர் சேவை -I அல்லது இலங்கை ஆசிரியர் சேவை-2-I ஐச் சேர்ந்த ஆசிரியர்களின் விண்ணப்பங்கள் கிடைக்காதவிடத்து மாத்திரம் இலங்கை ஆசிரியர் சேவை -2-II ஐச் சேர்ந்தவர்களின் விண்ணப்பங்கள் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்படும்.

அத்தோடு இலங்கை அதிபர் சேவையைச் சேர்ந்தவர்களின் விண்ணப்பங்கள் கிடைக்குமிடத்து அவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படுமென துணுக்காய் கல்வி வலயக் கல்விப் பணிப்பாளர் த.மேகநாதன் அறிவித்துள்ளார். (ஸ்ரீ-12-15)

# சாஸ்திரம் கூறுவதாக வீட்டினுள் நுழைந்து சமயோசிதமாக திருட்டு

(மிருசுவில்)

இந்தியாவிலிருந்து இலங்கைக்கு வந்த சாஸ்திரம் கூறும் பெண் ஒருவர் கரவெட்டி தெற்கிலுள்ள வீடொன்றில் இருந்து பல ரூபா பெறுமதியான நகைகளை சமயோசிதமாக திருடியுள்ளார்.

இச்சம்பவம் கடந்த சில நாட்களுக்கு முன்னர் கரவெட்டி தெற்கு யா/ விக்னேஸ்வராக் கல்லூரியை அண்மித்த பகுதியில் இடம்பெற்றுள்ளது.

இது தொடர்பாக மேலும் தெரிய வருவதாவது, இந்தியாவிலிருந்து வருகை தந்த 35 வயது மதிக்கத்தக்க பெண்மணி தனது 8 வயது மகளுடன் அவ்விடத்தில் சில வீடுகளில் புகுந்து சாஸ்திரம் கூறுவதாக கூறி தன்னை இனங்காட்டியுள்ளார்.

அதனைத் தொடர்ந்து அப்பிரதேசத்திலுள்ள வீடொன்றில் தனித்திருந்த பெண் ஒருவரிடம் பல நாட்களாக சென்று அங்கு தன்னை நம்பத்தகுந்த முறையில் பல பொய்களை கூறி அப்பெண்ணை தன் வசப்படுத்தியுள்ளார்.

இது இவ்வறிக்கையில், ஒருநாள் மேற்படி வீட்டிற்கு சென்ற குறித்த பெண் தண்ணீர் தருமாறு கேட்டபோது அவர் தண்ணீர் எடுப்பதற்காக சமையலறைக்குள் சென்ற வேளை நகைகள் இருந்த அறையினுள் புகுந்து 2 1/2 இலட்சம் ரூபா பெறுமதியான நகைகளையும் 8 ஆயிரம் ரூபா ரொக்கப் பணத்தினையும் திருடிச் சென்றுள்ளார்.

மேற்படி பெண்ணை எங்கு தேடியும் காணவில்லையென நகை பறி கொடுத்தவர் தெரிவித்துள்ளதாகக் கூறப்படுகின்றது. (ஸ்ரீ-2-12-85)

# மன்னாரில் இரவில் நடமாடியதாக கைதான கடற்படைவீரர் சரீரப்பிணையில் விடுதலை

(கொழும்பு)

மன்னார் தாழ்வுப்பாட்டுக் கிராமத்தில் நடமாடியதாகக் கூறி பொலிஸாரால் கைது செய்யப்பட்டு நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்ட நிலையில் விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த கடற்படை வீரரொருவருக்கு ஒரு இலட்சத்து 50 ஆயிரம் ரூபாய் சரீரப்பிணையில் செல்ல மன்னார் நீதிவான் அனுமதியளித்துள்ளார்.

இது தொடர்பான வழக்கு விசாரணை கடந்த புதன்கிழமை எடுத்துக் கொள்ளப்பட்டபோதே மன்னார் நீதிவான் ஏ.யூட்சன் இதற்கான அனுமதியை வழங்கினார்.

கடந்த ஓகஸ்ட் மாதம் 24 ஆம் திகதி குறித்த கடற்படை வீரர் தாழ்வுப்பாட்டுச் ரா மத்தில் துப்பாக்கியுடன் நடமாடியதாகவும் இதனை அவதானித்த அப்பகுதி மக்கள் குறித்த நபரை மடக்கிப்பிடித்து மன்னார் ஆயர் இல்லத்தில் ஒப்படைத்த நிலையில் அவர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டார்.

மன்னார் நீதிமன்றத்தில் குறித்த நபரை ஆஜர்படுத்திய போது கடந்த புதன்கிழமை வரை அவரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார்.

இந்த நிலையில் குறித்த நபர் மீதான வழக்கு விசாரணை கடந்த புதன்கிழமை மீண்டும் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டபோதே பிணையில் செல்வதற்கான அனுமதி வழங்கப்பட்டது.

மீண்டும் குறித்த நபரை எதிர்வரும் ஒக்டோபர் மாதம் 12 ஆம் திகதி நீதிமன்றில் ஆஜராகுமாறு நீதிபதி உத்தரவிட்டுள்ளார். (ஸ்ரீ-2)

# பொலிஸாரின் ஊழல் மோசடிகள் தொடர்பில் தகவல் திரட்ட விசேட திட்டம்

(கொழும்பு)

பொலிஸ் உத்தியோகத்தர்களினால் மேற்கொள்ளப்படும் ஊழல் மோசடிகள் தொடர்பில் தகவல் திரட்ட விசேட திட்டமொன்று உருவாக்கப்பட்டுள்ளது.

பொதுமக்கள் முறைப்பாடு செய்யக் கூடிய வகையில் இந்தப் புதிய திட்டம் உருவாக்கப்பட்டுள்ளது என பொலிஸ் பரிசோதர்கள் சங்கம் அறிவித்துள்ளது.

இதுதொடர்பான அறிவித்தல்கள் ஏற்கனவே பொலிஸ் நிலையங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. ஒரு சில பொலிஸ் உத்தியோகத்தர்களின் நடவடிக்கைகளினால் ஒட்டுமொத்த பொலிஸாரின் நடவடிக்கைகளுக்கு களங்கம் ஏற்படுவதாகவும் இதனை தடுக்கும் நோக்கில் விசேட பிரிவு உருவாக்கப்பட்டுள்ளதாகவும் குறிப்பிடப்படுகிறது.

இதேவேளை மோட்டார் போக்குவரத்து ஊழல் மோசடி மற்றும் குற்ற விசாரணை போன்ற பொலிஸ் பிரிவுகளில் கடமையாற்றும் அதிகாரிகளினால் கூடுதலான ஊழல் மோசடி இடம்பெறுவதாகவும் இது தொடர்பில் விசாரணை நடத்தப்படவுள்ளதாகவும் அந்த சங்கம் அறிவித்துள்ளது. (ஸ்ரீ-2)

# நீதிமன்றத்தால் அபராதம்

(கிளிநொச்சி)

மதுபோதையில் மோட்டார் வாகனம் செலுத்திய குற்றச்சாட்டின் பெயரில் நபரொருவர் கிளிநொச்சி பொலிஸாரால் கைது செய்யப்பட்டு நேற்றைய தினம் கிளிநொச்சி நீதிவான் நீதிமன்றில் ஆஜர்ப்படுத்தப்பட்டார்.

வழக்கை விசாரித்த கிளிநொச்சி நீதிவான் நீதிமன்ற நீதிபதி பெ. சிவகுமார் குறித்த நபர் மன்றில் குற்றத்தை ஒப்புக் கொண்டதையடுத்து 5 ஆயிரம் ரூபா அபராதமும் செலுத்தத்தவறின் ஒருமாத சாதாரண சிறைத் தண்டனையும் வழங்கித் தீர்ப்பளித்தார்.

மதுபோதையிலும் சாரதி அனுமதிப்பத்திரம் இன்றியும் மோட்டார் வாகனத்தை செலுத்திய குற்றச்சாட்டின் பெயரில் நபரொருவர் கிளிநொச்சி பொலிஸாரால் கைது செய்யப்பட்டு நேற்றைய தினம் கிளிநொச்சி நீதிவான் நீதிமன்றில் ஆஜர்ப்படுத்தப்பட்டார்.

வழக்கை விசாரித்த கிளிநொச்சி நீதிவான் நீதிமன்ற நீதிபதி பெ. சிவகுமார் குறித்த நபர் மன்றில் குற்றத்தை ஒப்புக் கொண்டமையால் குற்றவாளியெனக்கண்டு 7500 ரூபா அபராதமும் செலுத்தத்தவறின் 2 மாத சாதாரண சிறைத் தண்டனையும் வழங்கித் தீர்ப்பளித்தார்.

ஜெயந்திநகர் கிராமத்தைச் சேர்ந்த நபர் ஒருவர் 6 லீற்றர் கோடாவை தன்வசம் வைத்திருந்த குற்றச்சாட்டில் கிளிநொச்சி மதுவரித்திணைக்களத்தால் கைது செய்யப்பட்டு நேற்றையதினம் கிளிநொச்சி நீதிவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டார்.


வழக்கை விசாரித்த கிளிநொச்சி நீதிவான் நீதிமன்ற நீதிபதி பெ. சிவகுமார் குறித்த நபர் குற்றவாளியெனக் கண்டு 30 ஆயிரம் ரூபா அபராதமும் செலுத்தத்தவறின் 3 மாத சாதாரண சிறைத் தண்டனையும் வழங்கித் தீர்ப்பளித்தார். (ஸ்ரீ-3)






# இலங்கை அரசின் இராஜதந்திர முரண்பாடுகளில் அப்பாவித் தமிழ் மக்களை இழுக்கக்கூடாது

## சம்பிக்கவின் கருத்துக்கு மனோகணேசன் எதிர்ப்பு



(கொழும்பு)

ஐ.நா. மனித உரிமை பேரவையில் இலங்கைக்கு எதிராக தீர்மானம் நிறைவேற்றப்பட்டால் இது இலங்கையிலே வாழும் தமிழர்களுக்கு ஆபத்தாக அமையும் என்ற அமைச்சர் சம்பிக்க ரணவக்கவின் கருத்து பாரதூரமான இனவாத பிரகடனமாகும்.

இத்தகைய கருத்தை சம்பிக்க ரணவக்க உடனடியாக வாபஸ் பெற வேண்டும் என ஜனநாயக மக்கள் முன்னணி தலைவர் மனோகணேசன் கூறியுள்ளார்.

இலங்கை அரசாங்கத் தலைவர்கள் எந்த நாடுகளுடன் இணைந்து யுத்தம் நடத்தினார்களோ அந்த நாடுகளுடனேயே பேசி தமது பிரச்சினைகளை தீர்த்துக்கொள்ள வேண்டும்.

சர்வதேச நாடுகளுடனான இலங்கை அரசாங்கத்தின் இராஜதந்திர முரண்பாடுகளில் இலங்கையில் வாழும் அப்பாவி தமிழ் மக்களை இழுக்கக் கூடாது.

அரசாங்கத்தின் பொறுப்புள்ள அமைச்சர்கள் தமிழ் மக்களுக்கு எதிராக நேரடியாகவும் மறைமுகமாகவும் எச்சரிக்கை விடுக்கக் கூடாது என ஜாதிக ஹெல உறுமயவின் பொதுச் செயலாளரும் அமைச்சருமான சம்பிக்க ரணவக்கவிற்கு பதிலளித்துள்ள மனோ கணேசன் மேலும் தெரிவித்துள்ளதாவது.,

அமெரிக்கா உட்பட மேற்குலக நாடுகளும் இந்தியாவும் இலங்கைக்கு எதிராக செயற்பட்டால் அது இலங்யையிலே வாழும் தமிழர்களுக்கு ஆபத்தாக அமையும் என்பதுவே சம்பிக்க ரணவக்கவின் அடிப்படை கருத்தாக அமைகின்றது. முதலில் இத்தகைய ஒரு ஆபத்தை தமிழர்களுக்கு ஏற்படுத்தப் போவது யார் என்பதை சம்பிக்க ரணவக்க பகிரங்கப்படுத்த வேண்டும்.

யுத்தத்தின் இறுதிக்கட்டத்தில் நடைபெற்றதாகக் கூறப்படும் குற்றங்கள் தொடர்பிலேயே ஐ.நா மனித உரிமை ஆணைக்குழுவின் கவனம் திரும்பியுள்ளது. இந்த யுத்தத்தை நடத்துவதற்கு இலங்கை அரசாங்கத்திற்கு அமெரிக்காவும் மேற்குலக நாடுகளும் இந்தியாவும் பாரிய ஒத்தாசைகளை வழங்கியிருந்தன.

இந்நாடுகளின் ஒத்துழைப்பு இல்லாதிருந்தால் இந்த யுத்தத்தில் இலங்கை அரசாங்கம் வெற்றி பெற்றிருக்க முடியாது. இது தொடர்பாக ஜனாதிபதியும் பாதுகாப்புச் செயலாளரும் பகிரங்கமாக ஏற்கனவே பலமுறை கூறியுள்ளனர்.

தற்போது இதே நாடுகள் இலங்கை அரசாங்கத்தை மனித உரிமை மீறல்கள் தொடர்பில் குற்றம் சாட்டுவதாக சம்பிக்க ரணவக்கவும் அவரது கட்சியினரும் கூறுகின்றார்கள். இது இலங்கை அரசாங்கத்திற்கும் அமெரிக்கா உட்பட மேற்குலக நாடுகளுக்கும் இந்தியாவிற்கும் இடைப்பட்ட பிரச்சினையாகும். சர்வதேச சட்டங்களுக்கு அமைய ஐ.நா. சபை தான் இதை தீர்த்து வைக்க வேண்டும்.

யுத்தத்தின் போது அப்பாவி தமிழ் மக்கள் தான் சொல்லொணாத் துன்பங்களுக்கு உள்ளானார்கள். பெருந்தொகையான உறவுகளை பறிகொடுத்து அங்க அவயவங்களை இழந்து இலங்கையிலும் புலத்திலும் நிலையற்ற வாழ்க்கையை தமிழ் மக்கள் நடத்திக் கொண்டிருக்கின்றார்கள்.

இதை இலங்கை அரசாங்கமும் சம்பிக்க ரணவக்கவும் மறந்து விடக் கூடாது. இப்பின்னணியில் அமைச்சர் சம்பிக்க ரணவக்கவின் கருத்து பாரதூரமானது மட்டுமல்ல மனிதாபிமானமற்றதாகும். சர்வதேச நாடுகளுடனான நட்புறவுடன் யுத்தம் நடத்தும் பொழுது தமிழர்கள்தான் பலிகடா. தற்போது அந்த நட்புறவு முரண்பாடாக மாறிவிட்ட நிலையிலும் தமிழர்கள்தான் பலிக்கடா. இதுதான் அமைச்சர் சம்பிக்க ரணவக்கவின் கருத்தாக இருக்கின்றது.

எந்த நாடுகளுடன் இணைந்து யுத்தம் நடத்தினீர்களோ அந்த நாடுகளுடனேயே பேசி உங்கள் பிரச்சினையை தீர்த்துக் கொள்ளுங்கள். தயவு செய்து சர்வதேச நாடுகளுடனான இலங்கை அரசாங்கத்தின் இராஜதந்திர முரண்பாடுகளில் இலங்கையில் வாழும் அப்பாவி தமிழ் மக்களை இதில் இழுக்காதீர்கள். தமிழ் மக்களுக்கு நேரடியாகவும் மறைமுகமாகவும் எச்சரிக்கை விடுக்காதீர்கள் என்றார். (ஸ்ரீ-2)

## கிராமப்புறங்களில் பாலம் அமைக்கும் பிரித்தானிய கம்பனி

(கொழும்பு)

வடக்கு -கிழக்கு உள்ளடங்கலாக நாடு முழுவதிலும் உள்ள கிராமப்புறங்கள் 2010 பாலங்களை அமைப்பதற்கு கிளிவ்லண்ட் பிறிட்ஜ் யூ.கே லிமிட்டட் என்னும் பிரித்தானிய கம்பனி பொருளாதார அபிவிருத்தி அமைச்சுடன் கடந்த வியாழக்கிழமை ஒப்பந்தம் ஒன்றைச் செய்துள்ளது.

56 மில்லியன் அமெரிக்க டொலர் பெறுமதியான இத்திட்டத்துக்கு பிரித்தானிய அரசாங்கம் உத்தரவாதம் வழங்குகின்றது. எனது கம்பனி இலங்கை அரசாங்கத்துடன் வேலை செய்ய ஆர்வமாகவுள்ளது. கிளிவ்லண்ட் பிறிட்ஜ் கம்பனி பாலம் அமைக்கும் தொழில்நுட்பத்தில் 100 ஆண்டுகளுக்கு மேல் முன்னணியில் உள்ளது.

இலங்கையில் கிராமப்பகுதிகளை நாட்டின் ஏனைய பகுதிகளுடன் இணைப்பதில் பங்களிப்பு செய்ய கிடைத்த வாய்ப்பையிட்டு மிகுந்த மகிழ்சியடைகின்றோம் என கிளிவ்லண்ட் பிறிட்ஜ் கம்பனியின் பொது முகாமையாளர் அண்டி ஹேறால் கூறினார். (ஸ்ரீ-2)

## உலக மயப்படுத்தலுக்கான பாராளுமன்ற குழுக்கள் அமைப்பின் 3 ஆவது அமர்வு

(கொழும்பு)

உலகமயப்படுத்தலுக்கான பாராளுமன்ற குழுக்கள் அமைப்பின் 33 ஆம் வருட அமர்வு கொழும்பில் எதிர்வரும் ஒக்டோபர் மாதம் 28 முதல் 30 ஆம் திகதி வரை நடைபெற உள்ளது. அமைச்சர்களான பேராசிரியர் ஜீ.எல். பீரிஸ் மற்றும் நிமல் சிறிபால டி சில்வா ஆகியோரின் ஒருங்கிணைந்த ஆலோசனைக்கு ஏற்ப அமைச்சரவை இதற்கான முடிவை எடுத்துள்ளது.

105 நாடுகளைச் சேர்ந்த ஆளும் கட்சி மற்றும் எதிர்க்கட்சி பாராளுமன்ற உறுப்பினர்கள் ஆயிரத்து 350 பேர் இதில் பங்குபற்ற உள்ளனர்.

அமைதியை நிலைநாட்டல், அதனைப் பாதுகாத்தல். நிரந்தர அபிவிருத்தி. மக்கள் தொகை. மனித உரிமைகள். நீதி ஆகியன சார்ந்த சர்வதேச பிரச்சினைகள் குறித்து கவனம் செலுத்துவது இந்த அமைப்பின் முக்கிய பொறுப்புக்களில் ஒன்றாகும். (ஸ்ரீ-2)

## அனர்த்த முகாமைத்துவ வேலைத்திட்டங்களை முன்னெடுப்பதற்கான கலந்துரையாடல்

(கிளிநொச்சி)

ஒக்ஸ்பாம் நிறுவனத்தின் அனுசரணையுடனும் டிபிக்கோ நிறுவனத்தின் நிதியுடவியுடனும் கண்டாவளை பிரதேச செயலாளர் பிரிவிற்குட்பட்ட பிரமந்தனாறு கிராம சேவையாளர் பிரிவில் அனர்த்தம் தொடர்பான வரைபடம் தயாரிப்பதற்கான கூட்டம் நேற்று வெள்ளிக்கிழமை காலை 10 மணிக்கு பிரமந்தனாறு கிராம சேவையாளர் தலைமையில் நடைபெற்றது.

இவ்வரைபடம் தயாரிப்பதன் நோக்கமானது கிராமத்தின் எந்த இடத்தில் அனர்த்தம் ஏற்பட்டுள்ளது, எதிர்காலத்திலும் ஏற்பட சந்தர்ப்பம் உண்டா என்பதை இனங்கண்டு அவ்விடத்தில் வேலைத்திட்டங்களை முன்னெடுப்பதற்கு மேற்கொள்ளப்படும் செயற்பாடாகும்.

இக் கூட்டத்திற்கு கிளிநொச்சி மாவட்ட அனர்த்த முகாமைத்துவ உதவி இணைப்பாளர் ப. சுதர்சநாதன், ஒக்ஸ்பாம் நிறுவன நிகழ்ச்சித்திட்ட அலுவலர் ஆகியோர் கிராம மட்ட அனர்த்த முகாமைத்துவ குழுக்களின் அவசியம் பற்றியும் அனர்த்த வேலைத்திட்டங்கள் பற்றியும் கருத்துரை வழங்கினர். (ஸ்ரீ-3)

## தமிழ் மக்களுக்கு மேற்கொள்ளப்பட்டுள்ள நலத்திட்டங்கள் குறித்து சர்வதேசத்துக்கு விளக்கம்

### அமைச்சர் மகிந்த சமரசிங்க தெரிவிப்பு

தமிழ் மக்களுக்காக மேற்கொள்ளப்பட்டுள்ள நலத்திட்டங்கள் தொடர்பில் சர்வதேச சமூகத்திற்கு விளக்கம் அளிக்கப்பட உள்ளதாக அமைச்சர் மஹிந்த சமரசிங்க தெரிவித்துள்ளார்.

போர் காரணமாக பாதிக்கப்பட்ட அப்பாவி தமிழ் மக்களின் நலனை மேம்படுத்துவதற்காக அரசாங்கம் எடுத்து வரும் நடவடிக்கைகள் குறித்து விளக்கமளிக்கப்பட உள்ளது.

ஐக்கிய நாடுகள் மனித உரிமை கவுன்சில் அமர்வுகளின் போது இது குறித்து விளக்கமளிக்கப்படும் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

அவசரகாலச் சட்டம் நீக்கப்பட்டதன் பின்னர் நாட்டில் ஏற்பட்டுள்ள மகிழ்ச்சியான சூழ்நிலை பற்றி சர்வதேச சமூகத்திற்கு தெளிவுபடுத்த வேண்டும்.

இதேவேளை மனித உரிமை பாதுகாப்பு தொடர்பில் நாட்டில் விசேட திட்டமொன்று அறிமுகம் செய்யப்பட உள்ளதாகக் குறிப்பிட்டுள்ளார்.

மனித உரிமைகளை மேம்படுத்தும் நோக்கில் புதிய யோசனைத் திட்டமொன்று உருவாக்கப்பட்டுள்ளதாகவும் இதற்கு அமைச்சரவையின் அங்கீகாரம் கிடைக்கப் பெற்றுள்ளது எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் கவுன்சிலின் யோசனைத் திட்டங்களுக்கு அமைவாகவே இந்த புதிய செயற்றிட்டம் நடைமுறைப்படுத்தப்பட உள்ளது.

இந்த புதிய திட்டம் குறித்து மனித உரிமை பேரவை கவுன்சிலின் விளக்கமளிக்க உள்ளதாக அமைச்சர் தெரிவித்துள்ளார்.

(ஸ்ரீ-2)

## இலங்கைக்கு எதிரான தீர்மானங்கள் தமிழ்-சிங்கள நல்லுறவை பாதிக்கும்

### அமைச்சர் சம்பிக்க விளக்கம்

(கொழும்பு)

ஐக்கிய நாடுகளின் ஜெனீவா மனித உரிமைகள் பேரவையின் மாநாட்டில் இலங்கைக்கு எதிராக சர்வதேச சமூகத்தினரால் தீர்மானங்கள் முன்வைக்கப்படும் பட்சத்தில் அது கடந்த கால கசப்புணர்வுகளை மறந்து புது-யுகத்திற்குள் காலடிவைத்துள்ள தமிழ் மற்றும் சிங்கள மக்களிடையிலான நல்லுறவுகளுக்கு பாதகமாக அமையும் என அமைச்சர் பாட்டலி சம்பிக்க ரணவக்க தெரிவித்தார்.

ஜெனீவா மாநாட்டில் இலங்கைக்கு எதிராக தீர்மானங்கள் நிறைவேற்றும் பட்சத்தில் அது இலங்கையில் வாழும் தமிழர்களுக்கு ஆபத்தாக அமையும் என்ற செய்தி தொடர்பில் விளக்கமளிக்கையிலேயே அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறுகையில், ஜெனீவாவில் நடைபெறுகின்ற ஐக்கிய நாடுகளின் சபையின் மனித உரிமைகள் பேரவையின் 18 ஆவது மாநாட்டில் இலங்கைக்கு எதிரான தீர்மானங்கள் முன்வைக்கப்பட்டால் அது பயங்கரவாதத்தை தோற்கடிப்பதற்காக உலகளாவிய ரீதியில் முன்னெடுக்கப்பட்டு வருகின்ற போராட்ட நட்வடிக்கைகளுக்கு பாதகமாக அமையும்.

அது மட்டுமல்லாது கடந்த கால கசப்பான சம்பவங்கள், இழப்புக்கள், புலிகளால் ஏற்படுத்தப்பட்ட அழிவுகள் ஆகியவற்றை மறந்தவர்களாகவே தற்போது இந்நாட்டிலுள்ள தமிழ் மற்றும் சிங்கள மக்கள் புதுயுகத்திற்குள் பிரவேசித்துள்ளனர்.

இந்நிலையில் இலங்கைக்கு எதிரான தீர்மானங்கள் இந்த இரு இனங்களுக்கிடையிலான நல்லுறவினை பாதிக்கும் அபாயமும் இருக்கின்றது.

இது இவ்வாறிருக்க இந்தியாவின் முன்னாள் பிரதமர் ராஜீவ்காந்தியின் கொலையுடன் தொடர்புடையவர்களுக்கு மரண தண்டனை வழங்க வேண்டாமெனவும் அவர்களுக்கு மன்னிப்பை வழங்குமாறும் கோரி நிற்கின்ற புலம்பெயர் தமிழர்கள் இலங்கையில் மனிதாபிமான பணிகளை மேற்கொண்ட இராணுவத்துக்கு தண்டனையை பெற்றுக்கொடுக்க முயற்சிப்பது நியாயமானதல்ல.

அத்துடன் இவ்வாறான எண்ணம் அவர்களது குரோதமான போக்கையே காட்டி நிற்கின்றது என்றார். (ஸ்ரீ-2)

# சிறுவர் துஷ்பிரயோகத்திற்கு மரண தண்டனை; சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபை ஆலோசனை



(கொழும்பு)

சிறுவர் துஷ்பிரயோகத்துக்கு அதிகபட்சத் தண்டனையாக மரணதண்டனைவிதிக்கும்வகையில் சட்டத்தில் திருத்தங்கள் கொண்டுவரப்படவேண்டுமென்ற ஆலோசனையை முன்வைக்க தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபை ஆயத்தமாகி வருகின்றது.

மேலும், இந்தக் குற்றச்சாட்டின் பேரில் கைது செய்யப்படும் சந்தேகநபர்களுக்கு பிணை வழங்காமல் இருக்கும் வகையில் அதனை பிணை வழங்க முடியாத குற்றமாக சட்டத்தில் திருத்தங்களைக் கொண்டு வருவதற்கும் முன்மொழிவை சமர்ப்பிக்கவுள்ளதாக தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபையின் தலைவி அனோமா திசாநாயக்க தெரிவித்தார்.

இதன் மூலம் சிறுவர்களுக்கு எதிரான வன்முறைகளைக் குறைப்பதற்கு தமது அதிகார சபை எதிர்பார்ப்பதாகவும் அவர் மேலும் கூறினார்.

மஹிந்த சிந்தனை கொள்கைப் பிரகடனத்தின் 22 ஆவது பக்கத்தில் குறிப்பிடப்பட்டுள்ளதன் பிரகாரம் தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபையை பலப்படுத்தல் மற்றும் வலுவூட்டும் நோக்கில் சட்டங்களை தயாரிப்பதற்காக நியமிக்கப்பட்டுள்ள விசேட குழுவின் ஊடாக மேற்படி சட்டங்களை உருவாக்குவதற்கு நடவடிக்கை எடுப்பதாகவும் அனோமா திசாநாயக்க குறிப்பிட்டார். (ஸ்ரீ-2)

# கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

உள்ளூராட்சி மன்றத் தலைவர்களுக்கான டெங்கு நோயை கட்டுப்படுத்துவது தொடர்பான கலந்துரையாடல் ஒன்று இன்று காலை 9.00 மணிக்கு யாழ். பொதுநூலக கேட்போர் கூடத்தில் நடைபெறவுள்ளதாக வடபிராந்திய சுகாதார சேவைகள் பணிமனை அறிவித்துள்ளது. (ஸ்ரீ-6)

# துணுக்காய் வலய பாடசாலைகளுக்கு இடையிலான வினாடிவினாப்போட்டி

(மல்லாவி)

துணுக்காய் கல்வி வலயத்திற்குட்பட்ட பாடசாலைகளுக்கிடையிலான கோட்ட ரீதியான வினாடிவினாப்போட்டி எதிர்வரும் 16 ஆம் திகதி காலை 8.30 மணிக்கு நடைபெறவுள்ளது.

இதில் ஒட்டுசுட்டான் கோட்ட பாடசாலைகளுக்கு மு/ஒட்டுசுட்டான் மகாவித்தியாலயத்திலும் துணுக்காய், மாந்தை கிழக்கு கோட்டங்களைச் சேர்ந்த பாடசாலைகளுக்கு மு/யோகபுரம் மகா வித்தியாலயத்திலும் நடைபெறவுள்ளது.

மேற்படி போட்டிகளுக்கு தரம் 6 தொடக்கம் 11 வரையான மாணவர்களை பங்குபற்றுவதற்கான ஒழுங்கமைப்புக்களை ஏற்படுத்திக் கொடுக்குமாறு பாடசாலை அதிபர்களுக்கு துணுக்காய் வலய கல்விப் பணிப்பாளர் த.மேகநாதன் அறிவித்துள்ளார். (ஸ்ரீ-12-15)

# கிறிஸ்பூத விவகாரத்தால் விவசாயிகளுக்கும் பிரச்சினை

(நவாலி)

நவாலி வடக்குப் பகுதியில் கட்டாக்காலி கால்நடைகள் பயிர்களை மேய்வதனால் அப்பகுதி விவசாயிகள் பெரும் கவலை தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பாக மேலும் தெரியவருவதாவது, நவாலி வடக்குப் பகுதியில் சிறுபோக பயிர்ச்செய்கையில் ஈடுபடுபவர்கள் அதிகமாகவுள்ளனர்.

இவ் விவசாயிகள் கட்டாக்காலி கால்நடைகளைக் கட்டுப்படுத்த இரவில் காவல் காப்பது வழமை.

ஆனால் தற்போது ஏற்பட்டுள்ள கிறிஸ்பூத பிரச்சினையால் இரவில் காவலுக்குச் செல்வதில்லை.

இதனைச் சாதகமாகப் பயன்படுத்தி கால்நடை வளர்ப்போர் தமது கால்நடைகளை அவிழ்த்து விடுகின்றனர். இதனால் பயிர்களை மேய்ந்து நாசப்படுத்தி வருகின்றன.

நேற்று முன்தினம் கூட நவாலி வடக்கைச் சேர்ந்த யோகானந்தன் என்பவரது தோட்டத்தில் ரூபா 12ஆயிரம் பெறுமதியான கீரைப் பயிரினை ஒரே இரவில் இக்கட்டாக்காலி கால்நடைகள் மேய்ந்து நாசப்படுத்தியுள்ளன.

இதனைக் கட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்கப்படாததால் நவாலி வடக்கு சிறுபோக விவசாயிகள் அனைவரும் ஒன்று சேர்ந்து மகஜர் ஒன்றைத் தயாரித்து சகல விவசாயி அமைப்புக்களுக்கும் அனுப்பிவிட்டு முற்றாக சிறுதோட்டப் பயிர்ச்செய்கையை கைவிட எண்ணியுள்ளதாக அப்பகுதி விவசாயிகள் தெரிவிக்கின்றனர். (ஸ்ரீ-12-26)

# ஈரான் தூதுக்குழுவினர் இலங்கைக்கு விஜயம்

ஈரான் இஸ்லாமியக் குடியரசிலிருந்து எட்டு உறுப்பினர்களைக் கொண்ட தூதுக் குழுவொன்று நேற்று இலங்கைக்கு விஜயம் மேற்கொண்டுள்ளது.

இந்தத் தூதுக்குழுவின் உறுப்பினர்கள் இஸ்லாமியத் தத்துவவியல், சமூகவியல், பொருளியல் எனப் பல்வேறு துறைசார் நிபுணர்களாவர்.

இவர்கள் ஒருவார காலம் இலங்கையில் தங்கியிருப்பர். இந்தக் காலப் பகுதியில் இவர்கள் களனிப் பல்கலைக்கழகத்தின் பாலி மற்றும் பௌத்த பீடத்துக்கு விஜயம் செய்து பௌத்த சமயத் தலைவர்களைச் சந்தித்து இருபெரும் சமயங்களுக்கிடையிலான விடயங்கள் குறித்து கலந்துரையாடுவர்.

இவர்கள், கொழும்பில் கிறிஸ்தவ சமயத் தலைவர்களைச் சந்தித்துப் பேசுவதற்கும் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. இரு சமயங்களுக்கிடையிலான பொதுவான புரிந்துணர்வுகள் எனும் தலைப்பில் இந்தச் சந்திப்பு இடம்பெறவுள்ளது.

ஈரான் தூதுக்குழு கிழக்கிலங்கையில் விரிவான விஜயம் ஒன்றையும் மேற்கொள்ளும். தென்கிழக்குப் பல்கலைக்கழகம், அட்டாளைச்சேனை கல்விக் கல்லூரி உட்பட கிழக்கிலங்கையின் பல அரபுக் கல்லூரிகளுக்கும் இந்தக்குழு விஜயம் செய்யும். மட்டக்களப்பு நகரில் இந்தக் குழுவினர் இந்துமத் தலைவர்களையும் சந்தித்து விரிவான கலந்துரையாடல்களை மேற்கொள்வர்.

இவர்கள் அகில இலங்கை ஜம்மிய்யத்துல் உலமா பிரதிநிதிகளையும் சந்தித்து விரிவான கருத்துப் பரிமாற்றல்களில் ஈடுபடுவர். கொழும்பிலுள்ள ஈரான் இஸ்லாமியக் குடியரசு தூதரகத்தின் கலாசாரப் பிரிவு இந்த நிகழ்வுகளை ஏற்பாடு செய்துள்ளதாக ஈரான் இஸ்லாமிய குடியரசின் இலங்கைத்தூதரக மக்கள் தொடர்பு அதிகாரி எம். நௌசாட் முஹிதீன் தெரிவித்தார். (ஸ்ரீ-2)

# ஆசியாவின் அதிசயம் மிக்க நாடாக இலங்கையை மாற்றும் பயணம் ஆரம்பம்

## அமைச்சர் ரஞ்சித் சியம்பலாப்பிட்டிய தெரிவிப்பு



(கொழும்பு)

ஆசியாவின் அதிசய மிக்க நாடாக இலங்கையை மாற்றும் பயணம் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக தொலைதொடர்புகள் மற்றும் தகவல் தொழில்நுட்ப அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய தெரிவித்துள்ளார்.

எட்டியாந்தோட்டை பருஸ்சல்ல பகுதியில் நிர்மாணிக்கப்பட்டுள்ள திண்மக் கழிவு மீள் சுழற்சி நிலையத்தை பார்வையிட்டதன் பின்னர் அவர் இந்த கருத்தை வெளியிட்டுள்ளார்.

மஹிந்த சிந்தனை வேலை திட்டத்தின் கீழ் பாலங்களையும் பாதைகளையும் புனரமைப்பதில் மாத்திரம் நின்றுவிடாது மக்களின் அனைத்து பிரச்சினைகளுக்கும் தீர்வு காணப்பட்டு வருவதாக அவர் தெரிவித்துள்ளார்.

நாட்டில் பிரச்சினை உள்ளதாக சில தரப்பினர் தெரிவிக்கும் கருத்துக்கள் தவறானது எனக் குறிப்பிட்ட அவர் அத்தகைய குற்றச்சாட்டுக்களை சுமத்துவோர் அதனை தெளிவுபடுத்த வேண்டுமெனவும் குறிப்பிட்டுள்ளார்.

கடந்த 2016 ஆம் ஆண்டளவில் ஆசியாவிலுள்ள அதிசயமிக்க நாடாக இலங்கையை மாற்றுவதற்கு மக்கள் ஆரம்பித்துள்ளதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ஸ்ரீ-2)


# யாழ்ப்பாணம் பல்கலைக்கழகம், இலங்கை

# ஊடக வளங்கள் மற்றும் பயிற்சி மையம்

## ஊடகவியல் குறுங்காலப்பயிற்சி III

## "புலனாய்வு மற்றும் அரசியல் இதழியல்"

## "Investigative and Political Journalism"

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் ஊடக வளங்கள் மற்றும் பயிற்சி மையம் பத்திரிகைத்துறை சார்ந்தோரிற்கான குறுங்காலப் பயிற்சி ஒன்றை ஒழுங்கு செய்துள்ளது.

செப்டெம்பர் மாதம் 19 ஆம் திகதி முதல் 30 ஆம் திகதி வரை மாலை 3.00 மணி தொடக்கம் மாலை 6.00 மணிவரை நடைபெறவுள்ளது.

*யார் யார் பங்குபற்றலாம்?*

- செய்தி இதழ் ஆசிரியர்கள்
- அலுவலக மற்றும் பிரதேச செய்தியாளர்கள்
- சிறு சஞ்சிகை ஆசிரியர்கள்
- பருவகால பத்திரிகைகளில் பணிபுரிவோர்
- நிறுவனங்களின் தொடர்பாடல் மற்றும் ஊடக உத்தியோகத்தர்கள்
- பாடசாலைகளில் ஊடகக் கல்வி ஆசிரியர்கள்

பயிற்சிக்கட்டணம் எதுவும் அறவிடப்படமாட்டாது

பயிற்சி முடிவில் சான்றிதழ் வழங்கப்படும்.



சுவீடன் நாட்டின் போயோ (FOJO) நிறுவனத்தின் ஊடகவியல் விரிவுரையாளரும், பயிற்றுவிப்பாளருமான வில்லி ஒலிவர் (Willie Olivier) அவர்கள் பயிற்சிகளை வழங்கவுள்ளார்.

பயிற்சி விரிவுரைகளையும், செயன்முறைப் பயிற்சிகளையும் உள்ளடக்கியதான 30 மணித்தியாலங்களைக் கொண்டதாகும்.

பயிற்சியில் பங்குபற்ற விரும்புபவர்கள் 15.09.2011 இற்கு முன்னதாக நேரடியாகவோ, தொலைபேசியூடாகவோ பின்வரும் முகவரியில் தொடர்பு கொண்டு பதிவுகளை மேற்கொள்ளலாம்.

தொடர்பு முகவரி:-

ஊடக வளங்கள் மற்றும் பயிற்சி நிலையம்,
இல. 84, ஜும்மா பள்ளி லேன்,
யாழ்ப்பாணம் (வின்சர் தியேட்டர் சந்திக்கு அருகாமையில்)
தொலைபேசி இல.021 2229873

மின்னஞ்சல்:- directormrtc@gmail.com

பதிவாளர்
09.09.2011

(சி-4369)

# சுய வருமானத்தை ஈட்டித்தரும் வீட்டுத் தோட்டப் பயிர்ச்செய்கை

15-VIII



பேராசிரியர் கு.மிகுந்தன்
விவசாய உயிரியல்துறை
விவசாய பீடம்
யாழ்.பல்கலைக்கழகம்

## இனியொரு பசுமைப் புரட்சிக்கு...

வீட்டுத் தோட்டத்தினது பலாபலன்களைப் பற்றி நாம் விரிவாக இக்கட்டுரைத் தொடரில் அலசிப்பார்த்திருக்கின்றோம். சுயமான வருமானத்தை தருவதும் அன்றாட வீட்டுத் தேவையைப் பூர்த்தி செய்வதும் வீட்டிலுள்ள குடும்ப உறுப்பினர்களனைவரும் பொழுது போக்கிற்காக அனைவரும் பங்களிக்கின்ற செயற்பாடாகவும் வீட்டில் சேருகின்ற கழிவுகளை மீள்சுழற்சி செய்து கூட்டெருவாக பயன்படுத்தவும் மனவுளைச்சலைப் போக்குகி ்ற ரம்மியமான சூழலாகவும் குறிப்பாக பெண்களை மையப்படுத்திய அவர்கள் தலைமை தாங்குகின்ற குடும்பங்களின் வாழ்வாதாரத்திற்கான அத்திவாரமாகவும் வீட்டுத் தோட்டம் அமைந்திருக்கின்றது என அறிந்தோம்.

இவற்றுடன் சுத்தமான, சுகாதாரமான குறிப்பாக பீடை நாசினி நஞ்சற்ற பயிர்களை உற்பத்தி செய்து பயன்படுத்தும் வசதியும் இங்குண்டு. வீட்டுத் தோட்டத்தில் வளர்க்கும் பயிர்களில் வரும் பீடைகளுக்கு அவற்றைக் கட்டுப்படுத்த பீடை நாசினி ஒரு தெரிவாக இருக்கக்கூடாது. இது விடயத்தில் நாமனைவரும் கவனஞ்செலுத்துதல் அவசியம்.

பொதுவாகவே சந்தையில் விற்கப்படும் மரக்கறிப் பயிர்களை குறிப்பாக இலைக்கறி வகைகளில் அதிகளவு பீடைநாசினி பிரயோகம் மேற்கொள்ளப்பட்டு உடனடியாகவே பீடைநாசினி நஞ்சுடன் விற்கப்படுவதைவும் அதை நாம் பணம் கொடுத்து மரக்கறியுடன் அதிலுள்ள



பீடைநாசினி நஞ்சிற்கும் சேர்ந்து விலை கொடுத்து வாங்கியுண்ணும் நிலையிலிருக்கின்றோம். இந்தப் பிரச்சினைக்கான ஒரு பக்க தீர்வாக முழுக்க முழுக்க சேதன முறையில் உருவாக்கப்படும் வீட்டுத் தோட்டத்தில் பெறப்படும் மரக்கறி, இலைக்கறி மற்றும் பழப்பயிர்களை உதாரணமாக்கலாம்.

இன்னொரு பக்கத்தில் சேதன முறையில் உற்பத்தி செய்யும் பயிர்களை பெறலாம். குறிப்பாக பட்டியடைத்தல் மூலமாக சேதனமுறையிலான பயிர்ச்செய்கை செய்யப்படும் இடங்களில் நஞ்சற்ற மரக்கறி வகைகளை பெறலாம்.



வீட்டுத் தோட்டம் பயிர்வகைகளில் ஏற்படும் பீடைத்தாக்கத்திற்கு தேவை கருதி தாவரச்சாறுகள் மற்றும் இயற்கைவழி பீடை முகாமைத்துவத்தை பயன்படுத்த வேண்டும்.

இங்கே மூலிகைத் தாவரங்களின் பயன்பாடு விசேடமானது. வேப்பம் விதைச்சாறு, உள்ளிக் கரைசல் என்பனவற்றை பயன்படுத்தலாம். இவற்றுடன் நிறப் பொறிகள் (மஞ்சள் மற்றும் மெல்லிய நீலம்)இன்னும் பொறி என்பனவற்றையும் பயன்படுத்தலாம். பலவகைப் பயிர்களை ஓரிடத்தில் வளர்ப்பதனால் பீடைத் தாக்கத்தை ஓரளவிற்கு குறைக்கலாம். அதிகமான பீடைத்தாக்கத்திற்கு உட்பட்ட பயிரை பிடுங்கி அகற்றிவிடுவதும் சிறந்த வழியாகும்.

இன்னொரு பக்கத்தில் வீட்டுத் தோட்டப் பயிர்களுக்கு செயற்கை யுரத்தை பயன்படுத்துவதையும் தவிர்க்கலாம்.

நாம் வாங்கி உணவாக்கும் மரக்கறி வகைகளனைத்தும் செயற்கையுரத்தில் வளர்ந்து பீடைநாசினிகளால் குளிப்பாட்டப்பட்டே விற்பனைக்கு வருவதை நாமறிவோம்.

இந்த நஞ்சுப் பாவனையை தவிர்த்து தினமும் நாம் உட்கொள்வதற்கு நல்ல பயிர்களை பெறவே எமக்கொரு வீட்டுத் தோட்டம் அவசியம்.

ஆனால் அநேகமான வீட்டுத் தோட்டங்களில் அசேதன பசனைகள் பயன்படுத்தப்படுவதும் இன்னும் குறிப்பிட்ட பீடைகளுக்காக பீடைநாசினிகளைப் பயன்படுத்துவதையும் வீட்டுத் தோட்டப் போட்டியின் நடுவராக பங்கு பற்றியதன் மூலமாக அறிந்து கவலை கொண்டோம்.

(தொடரும்)

## பொதுநலவாய விளையாட்டு போட்டியை நடத்துவது தொடர்பில் கடும் போட்டி

எதிர்வரும் 2018 ஆம் ஆண்டில் பொதுநலவாய நாடுகள் விளையாட்டுப் போட்டித் தொடரை நடத்துவதற்கான சந்தர்ப்பத்தை யாருக்கு வழங்குவது என்பதில் கடும் போட்டி நிலைமை ஏற்பட்டுள்ளது.

அவுஸ்திரேலியாவின் கோல்ட் கோஸ்ட் மற்றும் இலங்கையின் அம்பாந்தோட்டை ஆகிய நகரங்கள் இதற்கான சந்தர்ப்பத்தை பெற்றுக் கொள்வதில் கடும் போட்டியில் ஈடுபட்டு வருகின்றன.

அவுஸ்திரேலியாவின் கோல்ட் கோஸ்டிற்கு அதிக வாய்ப்பு காணப்படுவதாக இறுதியாக வெளியான அறிக்கைகளில் குறிப்பிடப்பட்டுள்ளன.

பொதுநலவாய நாடுகள் விளையாட்டுப் போட்டியை நடத்துவதற்கு தேவையான சகல விடயங்களையும் புரிந்து கொண்டு அவுஸ்திரேலியா அறிக்கை சமர்ப்பித்துள்ளதாக சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

குறிப்பாக சுகாதாரம், விளையாட்டுக் கிராமம், போட்டி மைதானங்கள், நிதி, சுங்க மற்றும் குடிவரவு நடைமுறைகள், பாதுகாப்பு மற்றும் ஊடகம்சார் விடயங்கள் தொடர்பில் தெளிவான அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

எனினும் அம்பாந்தோட்டை நகரின் அறிக்கையில் இந்த விடயங்கள் பற்றிய சரியான விளக்கங்கள் அளிக்கப்படவில்லை என சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

கோல்ட் கோஸ்ட் நகரம் ஏற்கனவே ஓரளவு தயார் நிலையில் காணப்படுவதாகவும் அம்பாந்தோட்டை நகரில் அபிவிருத்திப் பணிகள் இடம்பெற்று வருவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அம்பாந்தோட்டை விளையாட்டுப் போட்டிக்குத் பயங்கரவாத அச்சுறுத்தல்கள் எதுவும் கிடையாது என சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

எதிர்வரும் நவம்பர் மாதம் 11 ஆம் திகதி அளவில் பொதுநலவாய போட்டித் தொடரை நடத்தும் சந்தர்ப்பத்தை யாருக்கு வழங்குவது என்பது பற்றிய இறுதித் தீர்மானம் அறிவிக்கப்படவுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

(ஸ்ரீ-2)

## பாலஸ்தாபன கும்பாபிஷேகம்

(மருதங்கேணி)

நாகர்கோவில் மேற்கு கௌத்தந்துறை பிள்ளையார் ஆலயத்தின் பாலஸ்தாபன கும்பாபிஷேகம் நாளை ஞாயிற்றுக்கிழமை அதிகாலை 4 மணி தொடக்கம் 5.30 மணி வரையுள்ள சுபவேளையில் நடைபெறவுள்ளது.

இதில் பிரதமகுரு சிவசிறி ராம் சபாநாதக் குருக்கள் பாலஸ்தாபன நிகழ்வை நடத்தி வைக்கவுள்ளார். (ஸ்ரீ-12-35)

## வடக்கு-கிழக்கு மாகாணங்களுக்கு காணி அதிகாரங்கள் வழங்கப்படவேண்டும்

### அமைச்சர் ஹிஸ்புல்லா தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

வடக்கு-கிழக்கு மாகாணங்களுக்கு காணி அதிகாரங்கள் வழங்கப்பட வேண்டுமென ஆளும் கட்சி அமைச்சர் எம்.எல்.எம். ஹிஸ்புல்லாஹ் தெரிவித்துள்ளார்.

தமிழீழ விடுதலைப்புலிகள் தோற்கடிக்கப்பட்டுள்ள நிலையில் காணி அதிகாரங்களை வழங்குவதில் தவறில்லை என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

ஐக்கிய இலங்கைக்குள் காணி அதிகாரங்களை பகிர்வதில் எந்தவிதமான தவறையும் தாம் காணவில்லை என அவர் குறிப்பிட்டுள்ளார்.

எவ்வாறெனினும் பொலிஸ் அதிகாரங்கள் தற்போதைக்கு வழங்கப்படக்கூடாது என அவர் தெரிவித்துள்ளார்.

வடக்கு-கிழக்கை இணைப்பது தொடர்பான இலங்கைத் தமிழரசுக் கட்சியின் கோரிக்கைக்கு கிழக்கு மக்களே தீர்வு வழங்க வேண்டுமென அவர் குறிப்பிட்டுள்ளார். (ஸ்ரீ-2)

## பொலிஸ் பரிசோதகர்கள் அதிகளவில் சேவையிலிருந்து இடை நிறுத்தம்

அண்மைக்காலமாக உயர் பொலிஸ் உத்தியோகத்தர்கள் அதிகளவில் சேவையில் இருந்து நீக்கப்படுவதாக தெரிவிக்கப்படுகின்றது. குறிப்பாக பொலிஸ் பரிசோதகர்கள் அதிகளவில் பணிநீக்கம் மற்றும் சேவை இடை நிறுத்தத்திற்கு உள்ளாவதாக சுட்டிக்காட்டப்படுகிறது.

பொலிஸ் பரிசோதகர்கள் ஒன்றியத்திற்கும் பொலிஸ்மா அதிபருக்கும் இடையில் நடைபெற்ற சந்திப்பின்போது இந்தத் தகவல்கள் வெளியிடப்பட்டுள்ளன.

ஊழல் மோசடிகள் மற்றும் ஒழுக்க விதிகளை மீறும் செயற்பாடுகள் அதிகரித்துள்ளதாக குற்றஞ்சுமத்தப்படுகிறது. மோட்டார் போக்குவரத்து,போதைப்பொருள் தடுப்பு மற்றும் குற்ற விசாரணைப் பிரிவு போன்றவற்றில் கடமையாற்றிவரும் பொலிஸ் பரிசோதகர்களின் நடவடிக்கைகள் தீவிரமாக கண்காணிக்கப்படவேண்டுமென கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

பொலிஸ் பரிசோதகர்கள் பொறுப்புணர்ச்சியுடனும் முன்னுதாரணமாகவும் செயற்பட வேண்டியது அவசியமானது எனச் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (ஸ்ரீ-2)

# மற்றொரு கோணம்



## மதம் சார்ந்த தீவிரவாதம் துறவிகளை பலியாக்கிவிட்டது

துறவிகள் இந்தியாவில் உள்ளது போல் அயல் நாடுகளில் இல்லாதிருப்பது ஏன்?

துறவியென்ற சொல்லே தவறாகப் புரிந்து கொள்ளப்பட்டிருக்கும் ஒன்று. அவர்கள் உண்மையில் எதையும் துறந்தவர்கள் இல்லை. இன்னும் பெரிதாக எதையோ தேடிச் சென்று இருக்கிறார்கள். உங்கள் அன்றாட வாழ்க்கையில் உங்களுக்குப் பெரிதாகத் தோன்றுகின்ற விடயங்கள் அவர்களுக்குப் பெரிதாகத் தோன்றவில்லை. சிலர் வேலைக்காக அமெரிக்கா செல்கி


**ஆன்மீகம் 37**

றார்கள். அவர்கள் தங்கள் தாய், தந்தை, தேசம் அனைத்தையும் விட்டுவிட்டுப்போவதால் அவர்களைத் துறவியென்று சொல்வீர்களா? இல்லை. இங்கு கிடைப்பதை விட பெரிதாக ஏதோ கிடைக்கிறது என்பதால் அவர்கள் அங்கே செல்கிறார்கள். அதைப்போல ஒரு பெரிய விடயத்திற்காக சிலர் சராசரி வாழ்க்கையை விட்டுவிட்டு ஒரு தேடுதலில் இறங்குகிறார்கள். நீங்கள் சிறிய சொத்து சம்பாதிக்க விரும்புகிறீர்கள். அவர்கள் பெரிய சொத்தைத் தேடிப் போகிறார்கள். தினமும் காலையில் ஒரு பிளேட் பொங்கல் சாப்பிடுவதே சிலரைப் பொறுத்தவரையில் பெரிய சாதனையாக இருக்கிறது. சிலருக்கோ மிகப்பெரிய இலட்சியங்கள் இருக்கின்றன.

இத்தகைய துறவிகள் இந்தியாவில் மட்டுமல்ல. உலகின் பல பகுதிகளிலும் இருந்தார்கள். அவர்கள் கடவுள் நம்பிக்கையையும் மூடப் பழக்க வழக்கங்களையும் கேள்வி கேட்டார்கள். மத வளர்சிக்கு அவர்கள் தடையாக இருப்பார்கள் என்று கருதி அவர்களை உலகின் பல பகுதிகளிலும் அழித்து விட்டார்கள். எனவே இந்தியாவைப்போல் துறவிகள் உலகின் பல பகுதிகளில் இருந்தாலும் மதம் சார்ந்த தீவிரவாதம் வளர்ந்த போது அவர்கள் அதற்குப் பலியானார்கள்.

**ஆராத்தி எடுப்பதன் தத்துவம் என்ன?**

கோயில்களில் ஆராத்தி எடுப்பதில் விஞ்ஞான பூர்வமான காரணம் உண்டு. ஆதிகாலத்தில் கோயில்களுக்குச் செல்கிறபோது நீங்கள் பிரார்த்தனை செய்ய வேண்டுமென்றோ, உங்கள் கோரிக்கைகளை பெரிய பட்டியலாக எழுதிக் கொடுக்க வேண்டும் என்றோ யாரும் சொல்லவில்லை. காலையில் குளித்துவிட்டு கோயில்களில் சென்று சிறிது நேரம் அமர்ந்த பிறகு உங்கள் அன்றாட வேலைகளை நீங்கள் கவனிக்கச் செல்லலாம் என்று சொல்லியிருந்தார்கள். ஏனென்றால் உங்கள் உள்நிலையை சீர்ப்படுத்துவதற்கென்று சக்திமிக்க சூழ்நிலை கோயிலில் உருவாக்கப்பட்டுள்ளது அதற்கு பஞ்ச பூதங்களையும் பயன்படுதத்துகிற விஞ்ஞானம் பின்பற்றப்படுகிறது. தண்ணீர், செருப்பு மட்டுமன்றி மந்திரம் மூலம் எழுகிற சப்தங்கள்



அகியவை இந்த சக்திச் சூழ்நிலைக்கு மிகவும் பயன்படுகிறன. இதனுடைய அங்கம் தான் ஆராத்தி.

**கோயில்களுக்குச் சென்றால்தான் ஆத்மீகவாதி என்று பெயரா?**

ஒருவருக்கு இலாபமாக வருகின்ற விடயம் இன்னொருவருக்கு நட்டம் தருவதாக இருக்கிறது. இந்த சூழல், உள்நிலை சமன் பாடாமல் நீங்கள் என்ன செய்தாலும் அதில் சிக்கல் ஏற்பட வாய்ப்பிருக்கிறது. எனவே கோயில்களில் சென்று அமர்ந்து உள்நிலையைச் சீர்ப்படுத்திக் கொண்டு பிறகு வெளியே செல்வது என்கிற முறையை உருவாக்கினார்கள். இது குடும்பத்தில் வசிப்பவர்களுக்குத் தேவையே தவிர முழுநேர ஆன்மீக வழியில் இருப்பவர்களுக்கு அவசியம் இல்லையென்று சொல்லப் பட்டது. ஏனென்றால் எல்லோரும் வந்து தங்கள் சக்தி நிலையை அதிகரித்துக் கொள்வதற்கான பொது இடம் கோயில் என்றால், ஆன்மீகப் பயிற்சிகள் மூலமாக வீட்டில் இருப்பவர்களே தங்கள் சக்தியைக் கூட்டிக்கொள்ள ஈஷா யோகா வகுப்புகள் பயிற்றுவிக்கின்றன. முன்னொரு காலத்தில் தண்ணீர் வேண்டுமென்றால் நீங்கள் பொதுக் குழாய்க்குப் போகவேண்டியிருக்கும். இப்போது உங்கள் வீடுகளுக்கே தண்ணீர் இணைப்பு தரப்படுகின்றது. அதுபோலத்தான் இதுவும். அதற்காக யோகா மற்றும் தியானப் பயிற்சிகளில் ஈடுபடுபவர்கள் கோயிலுக்குப் போகக் கூடாது என்றில்லை. அதற்கான தேவை அவர்களுக்கு ஏற்படுவதில்லை. அவர்களுக்குள் அந்த சக்தியை மேம்படுத்திக் கொள்ள வழங்கியிருக்கும் கருவிகளை உயிர்ப்புடன் வைத்திருந்தாலேயே அவர்களுக்கு அதனால் மிகுந்த பயன் ஏற்படும்.

(தொடரும்)

**சத்குரு ஜக்கி வாசு தேவ்**

# செவ்வியல் தமிழ் இலக்கியத்தில் பெண் மொழி

**08**

நயமாக எடுத்துக் கூறும் ...

குறுந்தொகையில் தொகுக்கப் பட்டுள்ள பாடல்களில் தலைவி கூற்றே அதிகமாகவுள்ளது. இது பெண்மொழிப் பயன்பாட்டையும் காட்டுகிறது. ஆணின் உணர்வைப் பாடும்போது பயன்படுத்தப்பட்டுள்ள மொழிநடையின் வேறுபாட்டைப் பாடல்களிலே துல்லியமாகக் காணலாம். பெண்பால் ஏற்பட்ட காம உணர்வு ஆணின் கூற்றில் வெளிப்படையாக அமைந்துள்ளது. கீழ் வரும் பாடலை எடுத்துக்காட்டலாம்.

“மால்வரை யிழிதருந் தூவெள்
ளருவி
கன் முகைத் ததும்பும் பன்
மலர்ச் சாரற்
சிறுகுடிக் குறவன் பெருந்
தோட் குறுமகள்
நீரோன்ன சாயல்
தீயோ ரன்னவென் னுரனவித்
தன்றே”

**கலாநிதி மனோன்மணி சண்முகதாஸ்**
**முன்னை நாள் ஆய்வாளர்**
**ஜப்பான்-கக்குசுயின் பல்கலைக்கழகம்**

இப்பாடலைப்பாடிய கபிலர் ஆணின் உளநிலையை ஆண் மொழியலே குறிப்பிட்டுள்ளார். காமத்தின் பாற்பட்ட ஆணின் “என் உரன் அவித்தன்றே“” என்ற கூற்று ஆண் மொழியின் தன்மையைப் புலப்படுத்தி நிற்பதைக் காணலாம். எனவே அகப்பாடல்களில் பயன்படுத்தப்பட்ட பெண் மொழியை இனங்கண்டு கொள்ள முடியும் என்ற கருத்து உறுதி பெறுகிறது. சங்கப் பாடல்களில் பெண்பாற் புலவர்களின் பாடல்கள் தொகையில் குறைவாகவே உள்ளன. தொகுப்பு நிலையில் பெண்பாற் புலவர்களின் பாடல்கள் வகை மாதிரிக்காக மட்டுமே சேர்த்துக் கொள்ளப்பட்டிருக்கலாம். வாய் மொழி நிலையில் இருந்த பெண்பாற் புலவர்களின் பாடல்கள் காலகதியில் பேணப்படாமலும் போயிருக்கலாம். மேலும் பெயர் அறியப்படாத பாடல்களில் பல பெண்பாற் புலவர்களின் பாடல்கள் உள்ளடக்கப்பட்டிருக்கலாம். குறுந்தொகைப்பாடல் தொகுப்பில் 18

“கொழும்பில் நடைபெற்ற சர்வதேச தமிழ் எழுத்தாளர் மாநாட்டில் சமர்ப்பிக்கப்பட்ட ஆய்வுக்கட்டுரை”

பெயர் தெரியாத புலவர் பாடல்கள் உள்ளன. அப்பாடல்கள் பெண் கூற்றாகவே அமைந்தள்ளன. பின்வரும் அட்டவணையில் இதனை விளக்கமாகக் காணலாம்.

| தொடர் எண் | பாடல் எண் | கூற்று | வழங்கப்பட்ட சிறப்புப் பெயர் | நிலம் | ஒழுக்கம் |
|---|---|---|---|---|---|
| 1 | 9,356,378,396 | தோழி,செவிலி, செவிலி,செவிலி | கயமனார் | பாலை | பிரிதல் |
| 2 | 40 | தலைவன் | சம்புலப்பெயல் நீரார் | குறுஞ்சி | புணர்தல் |
| 3 | 41 | தலைவி | அணிலாடுமுன்றிலார் | பாலை | பிரிதல் |
| 4 | 47 | தோழி | நெடுவெண்ணிலவினார் | குறுஞ்சி | புணர்தல் |
| 5 | 54 | தலைவி | மீனெறிதூண்டிலார் | குறுஞ்சி | புணர்தல் |
| 6 | 74 | தோழி | விட்டகுதிரையார் | குறுஞ்சி | புணர்தல் |
| 7 | 131 | தலைவன் | ஒரேருழவனார் | பாலை | பிரிதல் |
| 8 | 224 | தலைவி | கூவன் மைந்தன் | பாலை | பிரிதல் |
| 9 | 267 | தல்லவன் | காலெறிகடிகையார் | பாலை | பிரிதல் |
| 10 | 277 | தோழி | ஓரிற்பிச்சையார் | பாலை | பிரிதல் |
| 11 | 290 | தலைவி | கல்பெருசிறுநுரையார் | பாலை | பிரிதல் |
| 12 | 293 | தலைவி | கள்ளிலாத்திரையனார் | மருதம் | ஊடல் |
| 13 | 305 | தலைவி | குப்பைக்கோழியார் | குறுஞ்சி | புணர்தல் |
| 14 | 323 | தலைவன் | பதடிவைகலார் | முல்லை | இருத்தல் |
| 15 | 324 | தோழி | கவைமகன் | குறுஞ்சி | புணர்தல் |
| 16 | 370 | பரத்தை | வில்லகவிரலினார் | மருதம் | ஊடல் |
| 17 | 387 | தலைவி | கங்குல்வெள்ளத்தார் | முல்லை | இருத்தல் |
| 18 | 394 | தோழி | குறியிறையார் | குறுஞ்சி | புணர்தல் |

(தொடரும்)

# வடக்கில் கணவன்மாரை இழந்த பெண்கள் தொடர்பில் போதிய கவனம் செலுத்த வேண்டும்

## ஐ.நா. இணையத்தளம் சுட்டிக்காட்டு

(கொழும்பு)

இலங்கையில் போர் இடம்பெற்ற பிரதேசங்களில் பெண்களை தலைமைத்துவமாகக் கொண்ட குடும்பங்களின் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கு புதிய கொள்கைகளும் செயற்திட்டங்களும் உருவாக்கப் பட வேண்டும் என மனிதாபிமான விவகாரங்களை ஒருங்கிணைக்கும் ஐக்கிய நாடுகள் அமைப் பின் இணையத்தளமான IRIN வலியுறுத்தியுள்ளது.

வன்னியில் இடம்பெற்ற இறுதிக்கட்டப்போரின்போது இடம்பெயர்ந்து பின்னர் சொந்த விடயங்களில் மீளக்குடியேறிய பெண்களின் பொறுப்பின் கீழியங்கும் குடும்பங்களின் நிலைமைகள் மிகவும் மோசமானதாக இருப்பதாக இந்த இணையத்தளம் சுட்டிக்காட்டியுள்ளது.

இப்பெண்கள் தமது பிள்ளைகளைப் பராமரிப்பது, வீட்டின் நாளாந்த தேவைகளைக் கவனிப்பது மற்றும் குடும்பப் பொறுப்பையும் சுமப்பதுடன் தமது இடிந்த இருப்பிடங்களையும் தனித்து நின்று நிர்மாணிக்க வேண்டியவர்களாக இருக்கின்றனர்.

இவர்களின் தேவைகள் மற்றும் பிரச்சினைகள் குறித்து ஒரு சில நிறுவனங்களே கவனம் கொண்டுள்ளதாக பெண்கள் மற்றும் அபிவிருத்திக்கான நிலையத்தின் இயக்குநர் சரோஜா சிவச்சந்திரன் தெரிவிக்கின்றார்.

வடக்கில் கணவன்மாரை இழந்த 40 ஆயிரம் விதவைப் பெண்களின் பொறுப்பில் அவர்களின் குடும்பம் இருப்பதாக பெண்கள் மற்றும் அபிவிருத்திக்கான நிலையம் கணிப்பிட்டுள்ளது.

இவர்களில் போரின்போது காணாமல் போனமை மற்றும் அரசாங்கத்தின் தடுப்பு முகாம்களில் தடுத்து வைக்கப்பட்டுள்ள கணவன்மாரைக் கொண்ட பெண்களின் விபரங்கள் உள்ளடக்கப்படவில்லை.

உலக வங்கியால் காசுக்காக வேலை என்ற திட்டத்தின் கீழ் சிலர் பயன் பெற்றிருந்தாலும் போர் முடிவுக்கு வந்து இரு வருடங்கள் கழிந்துள்ள நிலையிலும் கணவன்மாரை இழந்த விதவைப் பெண்களின் பிரச்சினைகள் தொடர்பில் போதிய கவனம் செலுத்தப்படவில்லை.


நாட்டில் மேற்கொள்ளப்படுகின்ற அபிவிருத்திப் பணிகள் தொடர்பில் வேலைக்கு நபர்கள் தேவைப்படுகின்ற போதிலும் இக்கடினமான வேலைகளை பெண்களால் செய்ய முடியாதுள்ளதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இந்நிலையில் கணவன்மாரை இழந்த விதவைப் பெண்களின் பிரச்சினைகள் தொடர்பில் புதிய கொள்கைகளும் செயற்றிட்டங்களும் உருவாக்கப்பட வேண்டும் என மனிதாபிமான விவகாரங்களை ஒருங்கிணைக்கும் ஐக்கிய நாடுகள் சபை அமைப்பின் இணையத்தளமான IRIN வலியுறுத்தியுள்ளது.

(ஸ்ரீ-2)

# ரொபர்ட் ஓ பிளேக் ஏன் பல்கலைக்கழக மாணவர்களை சந்திக்க வேண்டும்

## அமைச்சர் விமல் கேள்வி



(கொழும்பு)

அமெரிக்காவின் முன்னாள் தூதுவர் ரொபேர்ட் ஓ பிளேக் ஏன் பல்கலைக்கழக மாணவர்களை சந்திக்க வேண்டும் என தேசிய சுதந்திர முன்னணியின் தலைவர் விமல் வீரவன்ச குறிப்பிட்டுள்ளார்.

தேசிய சுதந்திர முன்னணியின் தலைவர் விமல் வீரவன்ச மஹரகமவில் நடைபெற்ற கூட்டமொன்றின் போது மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

எதிர்வரும் 14 ஆம் திகதி இலங்கைக்கு விஜயம் செய்ய உள்ள ரொபேர்ட் ஓ பிளேக் பல்கலைக்கழக மாணவர்களுடன் சந்திப்பு ஒன்றை நடத்தவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

போரில் தோற்கடிக்கப்பட்ட தமிழ் இனவாதத்தை அரசியல் ரீதியாக வென்றெடுக்க உதவி வழங்கும் வகையில் பிளேக் செயற்பட்டு வருவதாகக் குறிப்பிட்டுள்ளார்.

13 ஆம் திருத்தச் சட்ட மூலத்திற்கு அப்பாலான அதிகாரப் பகிர்வு ஒன்றை வழங்க அரசாங்கத்தை நிர்ப்பந்திக்கும் முயற்சிகளில் ஈடுபட்டுள்ளதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

(ஸ்ரீ-2)

# இந்திய-இலங்கை கடற்படை அதிகாரிகள் கொழும்பில் சந்திப்பு

(கொழும்பு)

இந்திய-இலங்கை கடற்படை அதிகாரிகள் மட்டத்திலான பேச்சுக்கள் கொழும்பில் ஆரம்பமாகியுள்ளன.

கடற்படைத் தலைமையகத்தில் கடந்த புதன்கிழமை ஆரம்பமான இந்தப் பேச்சுக்கள் தொடர்ந்து நடைபெறவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இரு நாடுகளின் கடற்படைகளுக்கு இடையிலான உறவுகளை வலுப்படுத்திக் கொள்வது மற்றும் இரு தரப்பு முக்கியத்துவம் வாய்ந்த விவகாரங்கள் குறித்து இந்தப் பேச்சுக்களின் போது ஆராயப்படுவதாக கடற்படை தகவல் வெளியிட்டுள்ளது.

இந்தியக் கடற்படையின் வெளிநாட்டு உறவுகளுக்கான பிரிவின் உதவித் தலைமை அதிகாரி றியர் அட்மிரல் முருகேசன் தலைமையில் ஆறுபேர் கொண்ட குழு இந்தப் பேச்சுக்களில் பங்கேற்க கொழும்பு வந்துள்ளது.

இலங்கை கடற்படையின் நடவடிக்கைகள் பணிப்பாளர் றியர் அட்மிரல் ஜெயந்த பெரேரா தலைமையிலான குழுவினருடன் இவர்கள் பேச்சுக்களை நடத்தி வருகின்றனர். (ச-5)

# நேட்டோ போர்க்கப்பல் கொழும்பு துறைமுகத்தில்

(கொழும்பு)

நேட்டோவில் அங்கம் வகிக்கும் துருக்கியின் கடற்படைப் போர்க்கப்பல் ஒன்று கொழும்புத் துறைமுகத்துக்கு நான்கு நாட்கள் பயணமாக வந்துள்ளதாக இலங்கைக் கடற்படை அறிவித்துள்ளது.

துருக்கிக்கும் இலங்கைக்கும் இடையில் இராஜதந்திரத் தொடர்புகள் ஏற்பட்டு 104 ஆண்டுகள் கழிந்துள்ள நிலையில் முதல் முறையாக அந்த நாட்டுப் போர்க்கப்பல் ஒன்று கொழும்பு வந்துள்ளதாக கடற்படைப் பேச்சாளர் கொமாண்டர் கோசல வர்ணகுணசூரிய தெரிவித்துள்ளார்.

நேட்டோவில் அங்கம் வகிக்கும் நாடுகளில் இரண்டாவது பெரிய இராணுவத்தைக் கொண்டுள்ள துருக்கி லிபியாவில் மேற்கொள்ளப்படும் நேட்டோ படை நடவடிக்கையிலும் பங்கேற்கிறது.

இந்த நிலையில் துருக்கியக் கடற்படையின் ஜெம்லிக் என்ற போர்க்கப்பல் நேற்று முன்தினம் கொழும்புத் துறைமுகத்துக்கு நான்கு நாட்கள் பயணமாக வந்துள்ளது குறித்து கடற்படை மகிழ்ச்சி வெளியிட்டுள்ளது.

இந்தப் போர்க்கப்பலில் 151 ஆவது கூட்டு அதிரடிப் படையின் தளபதி றியர் அட்மிரல் சினான் எருக்ருல் மற்றும் 30 அதிகாரிகளும் 241 கடற்படையினரும் கொழும்பு வந்துள்ளனர்.

(ஸ்ரீ-2)




★ 1759-பாண்டிச்சேரியில் பிரெஞ்சுக் கடற்படைகளுக்கும் ஜோர்ஜ் போக்கொக் தலைமையிலான பிரித்தானியக் கடற்படைக்கும் இடையில் போர் வெடித்தது. பிரெஞ்சுக் கப்பல் பலத்த சேதத்துடன் பின்வாங்கியது.

★ 1823-சிமோன் பொலிவார் பெருவின் ஜனாதிபதியாக அறிவிக்கப்பட்டார்.

★ 1840-ஓட்டோமான் மற்றும் பிரித்தானியப் படைகள் பெய்ரூட் நகர் மீது தாக்குதலைத் தொடுத்தனர்.

★ 1846-எலியாஸ் ஹோவ் தையல் இயந்திரத்துக்கான காப்புரிமம் பெற்றார்.

★ 1858-55 பண்டோரா என்ற சிறுகோள் கண்டுபிடிக்கப்பட்டது.

★ 1931- பெலீசில் இடம்பெற்ற மிகப் பெரும் சூறாவளியினால் ஆயிரத்து 500 பேர் கொல்லப்பட்டனர்.

★ 1939- இரண்டாம் உலகப் போரில் கனடா ஜேர்மனி மீது போரை அறிவித்தது.

★ 1943- இரண்டாம் உலகப் போரில் ஜேர்மனியப் படையினர் ரோம் நகரினுள் நுழைந்தனர்.

★ 1951- ஐக்கிய இராச்சியம் ஈரான் மீது பொருளாதாரத் தடைகளை அறிவித்தது.

★ 1967- கிப்ரல்டார் மக்கள் பிரித்தானியாவின் கீழ் தொடர்ந்திருக்க வாக்களித்தனர்.

★ 1974- கினி பிசாவு போர்த்துக்கல்லிடம் இருந்து விடுதலை பெற்றது.

★ 1976-பிரித்தானிய விமானம் ஒன்று யூகொஸ்லாவியாவின் சாக்ரெப் நகரில் வேறொரு விமானத்துடன் மோதியதில் 176 பேர் கொல்லப்பட்டனர்.

★ 2002-சுவிற்சர்லாந்து ஐ.நா.வில் இணைந்தது.

**பிறப்புக்கள்**

★ 1974-பென் வாலஸ், அமெரிக்கக் கூடைப்பந்து ஆட்டக்காரர்

★ 1980-ஜெயம் ரவி, தமிழ்த் திரைப்பட நடிகர்


**இறப்புக்கள்**

★ 1975- ஜோர்ஜ் தொம்சன், நோ்பல் பரிசு பெற்றவர் (பி.1892)

★ 1983-ஏ.கே.செட்டியார், காந்தி பற்றிய ஆவணப்படத்தை முதன்முதலில் தயாரித்தவர் (பி.1911)

★ 1983- பீலிக்ஸ் புளொக், சுவிசில் பிறந்த இயற்பியலாளர், நோபல் பரிசு பெற்றவர் (பி.1905)

★ 2008-வி.கே.கானமூர்த்தி, ஈழத்து நாதஸ்வரக் கலைஞர் (பி.1948)




1898-ஆஸ்திரியாவின் அரசி எலிசபெத்தின் நினைவுதினம் இன்றாகும்.

# இருப்பாய் தமிழா நெருப்பாய்!



காசி ஆனந்தனின் அதிரடித் தொடர் 9

## விடுதலைக்கான தேவை இருக்கும் வரை விடுதலைக்கான போராட்டமும் இருக்கும்







ஒரு காலத்தில் தமிழீழத்தில் சிவ தலங்களில் தேவாரம் ஒலித்துக்கொண்டே இருக்கும். திருவிழாக் காலங்களில் இசை நிகழ்ச்சி, பரதநாட்டியம், காவடி ஆட்டம், கும்மி, கரகம் நடக்கும், மங்கல இசைக் கருவி நாகசுரம் இசைக்கும், தவில் முழங்கும், அம்மன் கோயில்களில் உடுக்கை இசை எழும். பண்டைத் தமிழிசைக் கருவியான பறை ஒலிக்கும், நாட்டுக்கூத்து விடிய விடிய நடக்கும், தேர்த் திருவிழாவில் அழகிய சிற்பத் தேர் தெரு உலா வரும்.

இனவெறித் தாக்குதலுக்கு தமிழர்களின் இந்த சிவத் தலங்களும் தப்பவில்லை. இலங்கைத் தீவில் கி.மு.1000இல் ஐம்பெரும் சிவன் கோயில்கள் இருந்தன என்பது வரலாறு. திருகோணமலை கோணேஸ்வரமும்-மன்னார் திருக்கேதீஸ்வரமும்-கீரிமலை நகுலேஸ்வரமும் - சிலாபம் முனீஸ்வரமும் - தேவன் துறை சந்திர மௌலீஸ்வரமும் தமிழர்களின் சைவத் திருத்தலங்களாகத் திகழ்ந்தன.

தென்னிலங்கையில் தேவன் துறையில் அமைந்த சந்திரமௌலீஸ்வரமும் - மாகாணப் பிரிவினையின் போது சிங்களவர் கையில் வீழ்ந்த சிலாபம் முனீஸ்வரமும் தமிழீழத்துக்கு வெளியே பறிபோயிற்று.

தமிழீழத்தின் தலைநகரான திருகோணமலையில் சம்பந்தரால் பாடப்பட்ட கோணேஸ்வரமும் இன்று இனவெறியர்களால் சூழப்பட்ட தலமாக இருக்கிறது. இக் கோயில் அமைந்த மான்கள் விளையாடும் கோணமலைக் குன்றில், வானை முட்டும் புத்தர் சிலை ஒன்றை நிறுவித் தமிழர்களை வம்புக்கு இழுத்திருக்கிறார்கள் சிங்களவர்கள்.

மன்னாரில் - சுந்தரரால் பாடப்பட்ட திருக்கேதீஸ்வரம் கோயில் காணியில் மக்கள் எதிர்ப்பையும் மீறி முள்ளிவாய்க்கலுக்குப் பின்பு - "மகாதித்த விகாரை"என்னும் மிகப் பெரிய புத்தர் கோயில் எழுப்பப்பட்டிருப்பதாகச் சொல்கிறார்கள்.

சிறப்பு மிக்க நகுலேஸ்வரம் அமைந்த கீரிமலை ஊரின் பெயர் கூடச் சிங்களப் பெயராய் மாற்றப்பட்டிருப்பதாகச் செய்தி.

பண்டைக் கர்லத்தில் அனுராதபுரத்தில் அமைந்திருந்த சிவன் கோயில் ஒன்றை அழித்து - அதன் மேல் எழுதப்பட்டதே "அபயகிரி விகாரை" என்னும் புத்தர் கோயில் என்று, மலலசேகர - அரிச்சந்திர ஆகிய சிங்கள வரலாற்றாளர்களே பதிவு செய்திருக்கிறார்கள்.

கதிர்மாமம் அது தமிழர் ஊர் என்பதை கதிர்காமம் என்னும் தூய தமிழ்ப்பெயரே உறுதி செய்யும். காலம் காலமாகத் தமிழர் வழிபட்டு வந்த முருகன் கோயில் தலமான கதிர்காமம் இன்று தமிழர் கையில் இல்லை.

தமிழீழத்தில் - தெய்வ வழிபாட்டு இடங்களாக மட்டும் அல்ல - தமிழ்மொழி - தமிழ்க் கலைகள் - தமிழ்ப் பண்பாட்டு காப்பகங்களாகவும் சிவ தலங்கள் திகழ்கின்றன. இதன் காரணமாகவே இக் கோயில்கள் இனவெறித் தாக்குதலுக்கு இலக்காவதைப் பார்க்கிறோம்.

தமிழீழத்தில் 24.12.2003 வரை சிங்கள வான் படை நடத்திய குண்டு வீச்சில் 2076 சைவக் கோயில்கள் உடைத்து நொறுக்கப்பட்டதாகப் புள்ளிவிபரங்கள் தெரிவிக்கின்றன.

அயோத்தியில் ஒரு இராமர் கோயிலை அழித்தார்கள் என ஓங்கி முழக்கமிடும் இந்தியாவின் சிவ மதத்தினர், தமிழீழத்தில் 2076 சைவக் கோயில்களை வெறியர்கள் இடித்து - உடைத்து அழித்துக் கொட்டியிருக்கிறார்களே - அமைதி காப்பது ஏன்?

முள்ளிவாய்க்காலுக்குப் பின்பு - தமிழீழத்தின் மூலை முடுக்குகள் எங்கும் - புதிது புதிதாய் புத்தர் கோயில்கள் தழைக்கத் தொடங்கி உள்ளன. புலிகளின் தலைமையகமாகத் திகழ்ந்த கிளிநொச்சியில் புத்த விகாரை ஒன்று புதிதாத முளைத்திருக்கிறது. செங்குட்டுவன் கண்ணகிக்குக் கோயில் எழுப்பினான் என்பது வரலாற்றுச் செய்தி. சேரநாட்டு எல்லையில் அவன் எழுப்பிய மங்களாதேவி கோயிலைத் தவிர - தமிழ்நாட்டில் கண்ணகிக்கு எந்த ஊரிலுமே கோயில்கள் இல்லை. ஆனால் - தமிழீழத்தில் ஊர் தோறும் கண்ணகிக்குத் தமிழர்கள் கோயில் எழுப்பி இருக்கிறார்கள்.


1999 இல் தமிழீழத்தில் - புங்குடுதீவு கண்ணகி கோயில் குருக்களின் மனைவி சாரதாம்பாளை - "கற்பரசி" கண்ணகி கோயிலிலேயே கற்பழித்துப் பிணமாகப் போட்டார்கள்.

தமிழர்களின் கோயிலில் நிகழ்ந்த சிங்கள இனவெறிப் படுகொலை ஒன்றுதான் பிரபாகரனை தமிழீழ விடுதலைக் களத்தில் ஆயுதப் போராளி ஆக்கியது. பிரபாகரனே சொல்கிறார் கொழும்புக்குப் பக்கத்தில் பாணந்துறை சைவக் கோயில் ஒன்றில் - 1958 - இல் சிங்கள இன வெறியர்கள் ஒரு தமிழ்க் குருக்களை நெருப்பு மூட்டி உயிரோடு துடிக்க துடிக்க எரித்துக் கொன்றார்கள். "நான் சின்னஞ் சிறுவனாக இருந்த போது - எங்கள் வீட்டில் - அடிக்கடி என் பெற்றோர் அந்தக் கொடுமை பற்றி மனம் நொந்து பேசக் கேட்டிருக்கிறேன். நான் ஆயுதம் ஏந்த அந்த நிகழ்வும் ஒரு காரணம் ஆயிற்று" என்கிறார் பிரபாகரன்.

விடுதலைக்கான தேவை இருக்கும் வரை -விடுதலைக்கான போராட்டமும் இருக்கும்.

(பொறிபறக்கும்)

# நவீன எண் சோதிடம்



## உள்ளொன்று வைத்துப் புறமொன்று பேசத் தெரியாதவர் 42

## உடல் எண் 5 உயிர் எண் 4

5,14,23 போன்ற தேதியில் பிறந்து, பிறந்த தேதி, மாதம், வருடம் ஆகிய இம் மூன்றையும் கூட்டி வருகின்ற கூட்டு எண்ணாகிய உயிர் எண் 4 வருமேயானால் இவர்கள் புதன், இராகு ஆதிக்கத்தில் பிறந்தவராவர். பார்ப்பதற்கு ஓரளவு உயரமானவராகவும், கவர்ச்சியான தோற்றமுடையவராகவும் காட்சியளிப்பர். இவர்களுடைய தலைமுடி அலை போன்று இருக்கும். உடம்பில் நரம்புச் சக்தி கூடியவர்களாதலால் ஆரோக்கிமானவர்களாகவும், திடகாத்திரமானவர்களாகவும் இருப்பர்.

சுறுசுறுப்பான இவர்கள் எப்பொழுதும் எதையாவது செய்து கொண்டேயிருப்பர். உள்ளொன்று வைத்து புறமொன்று பேசத்தெரியாது. மனதில் தோன்றுகிற கருத்துக்களை பகிரங்கமாக வெளியிடுவர். இதனால் பலருடைய பகைமை ஏற்படலாம். சிலர் வயது ஏறஏற அனுபவத்தால் தன்னைத் திருத்திக் கொள்வர். இவர்கள் பிறர் கஷ்டங்களைக் கண்டு மனமிரங்கி உதவ முன் வருவர். மற்றவர்களின் துன்பத்தை துடைக்க என்ன வழிகள் என்பதையும் ஆராய்ந்து செயல்படுவர். இவர்களுடைய பெயர், பிறந்த தேதி எண்களுக்குப் பொருத்தமானதாக அமையுமே

| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 |
|---|---|---|---|---|---|---|---|
| A | B | C | D | E | U | O | F |
| I | K | G | M | H | V | Z | P |
| J | R | L | T | N | W | | |
| Q | | S | | X | | | |
| Y | | | | | | | |

யானால் நல்ல வாழ்கைத் துணை, நல்ல ஆரோக்கியம், நல்ல குழந்தைகள், நிறைந்த செல்வம் பெற்று, பலர் போற்றும் மனிதராக வாழ்வர். ஆனால், பிறந்த தேதி எண்களுக்குப் பொருத்தமானதாகப் பெயர் அமையாவிட்டால் தேவையற்ற விடயங்களில் இறங்கி, மன அமைதியின்றி அலைந்து திரிவர். அத்துடன் கெட்டவன் என்ற பெயரும் வரும். எங்கு சென்றாலும் போட்டியும் பொறாமையும் எதிர் கொண்டு நிற்கும். வாழ்க்கையில் முன்னேற்றப் பாதையின் கதவுகள் அடைக்கப்படும். இதனால் பெயரை உடனே தனது பிறந்த தேதிக்குப் பொருத்தமாக அமைத்துக் கொள்வது அவசியம்.

இவர்களது மனம் எப்பொழுதும் எதைப்பற்றியாவது திட்டம் தீட்டிக்கொண்டே இருக்கும். தொழில் செய்யும் ஆர்வம் மிகுதியுள்ளவர்களாகையால் இந்த எண்ணிக்கையில் பலர் தொழிலும், சிலர் அரசாங்க வேலையும் செய்து கொண்டிருப்பர். இவர்கள் ஒரு சுதந்திரப் பிரியராதலால் யாருக்கும் அடங்கிப் போவதில்லை. தன் மனதில் தோன்றுகின்றபடியே நடப்பர். எப்போதும் சுத்தமாகவும், கவர்ச்சியாகவும் காட்சியளிப்பர். வாசனைத்திரவியங்கள் மேல் அதிக நாட்டமுடையவராகவும் இருப்பர். அத்துடன் இவர்கள் பக்கத்தில் எப்போதும் நண்பர்கள் இருந்து கொண்டே இருப்பர். நண்பர்கள் புடைசூழ வாழும் இவர்களினால் நண்பர்கள் பயன் பெறுவர். பெயர் பொருத்தமாக அமைந்து விட்டால் இவர்களுக்கு தொழில் கூடங்கள், வாகனம், வீடு, பல்வேறு வழிகளில் பொருட் சேர்க்கை உண்டாகி மிகச் சிறப்பாக வாழ்க்கை நடத்துவர். ஆன்ால், பெயர் நன்றாக அமையாவிட்டால் எப்போதும் மனக்கோட்டை கட்டிய வண்ணமே இீருப்பர். எக்காரியமும் நடக்காது. தடை ஏற்பட்டுக் கொண்டே இருக்கும். இதனால் இந்த எண்ணிக்கைகாரர்கள் பெயரை மாற்றி அமைத்துக் கொள்வது அவசியம். இவர்கள் பல்வேறு ஊர்களைக் கண்டுகளிப்பதில் ஆர்வம் உள்ளவர்கள். தான் கண்ட காட்சிகளை வருணித்துக் கூறுவதில் கைதேர்ந்தவர்கள். இயற்கைக் காட்சிகளையும், அழகான வீடுகளையும் கண்டுகளிப்பதில் ஆர்வம் கொண்டவர்களாக விளங்குவர். வாகனப் பிரியரான இவர்கள் வாகனங்களை அழகாக வைத்துக் கொள்வதிலும் ஓட்டுவதிலும் மிகுந்த ஆர்வம் உடையவர்களாக இருப்பர்.

எண் கணித நிபுணர்
கலாநிதி ஆர்.ஐ.துரைமுருகர் D.LIT

சட்டம், சமயம், சோதிடம் போன்ற பல்வேறு கலைகளில் ஆராய்ச்சியுள்ளவர்களாக விளங்குவர். வழக்குத் தீர்ப்பதிலும், பிரச்சினைகளை விவாதம் செய்வதிலும் கைதேர்ந்தவர்கள். இவர்களுக்கு பெயர் நன்கு அமைந்து விடுமேயானால் சிறப்பான வாழ்கை அமையும். கல்வி ஞானத்தைக் கொண்டவர்கள் என்பதைவிட இயற்கையிலேயே இவர்கள் ஞானம் உள்ள மனிதராகவும், முன்கூட்டியே தனக்கு வரப்போகும் நல்லவைகளையும், கெடுதல்களையும் அறியும் ஆற்றல் உடையவராகவும் இருப்பர் என்பதே உண்மை. இவர்களை ஏமாற்றுவது சுலபமல்ல. ஆனால் பிறருக்கு தீங்கு நினைக்காத இவர்களை யாரும் எதிர்க்க நினைத்தால் எதிரியை எப்படியும் சின்னாபின்னமாக்கி விடுவர். இந்த எண்ணிக்கையில் பிறந்த பல நண்பர்கள், முதல் இல்லாமலே தொழில் ஆரம்பித்து இன்று இன்கம் டாக்ஸ் கட்டும் நிலைக்கு வந்துள்ளனர். பெயர் பொருத்தமானதாக அமையுமேயானால் இவர்களுக்கு என்றும் ஆண்டவன் அருள் புரிந்து கொண்டேயிருப்பர்.

**தொழில்.**

இவர்களுக்கு வாய் சாமர்த்தியத்தால் பணம் ஈட்டக்கூடிய தொழில் அனைத்தும் சிறந்தவையே. காண்ட்ராக்ட், கமிஷன், ஏஜன்சீஸ், நான்கு கால் பொருட்கள், வாகனங்கள், இரும்பு சம்பத்தப்பட்ட தொழில் போன்றவைகள் மூலம் வாழ்க்கையில் உயர்ந்த நிலையை அடைவர்.

**நோய்**

இவர்களுக்கு முன்கோபம் அதிகம் வருவதால் நரம்புத் தளர்ச்சி, இருதய வியாதி, இரத்தக் கொதிப்பு போன்றவைகள் வர வாய்ப்புள்ளது. கோபத்தை குறைத்துக் கொள்ள பழகிக் கொள்ளுதல் வேண்டும். உஷ்ண சம்பத்தப்பட்ட வியாதிகளும் சிறுநீர்க் கோளாறுகளும் வந்து நீங்கும்.

**பெயர் அமைக்கும் முறை**

புதன், ராகு ஆதிக்கத்தில் பிறந்த இவர்களுக்கு புதன், சூரியன், சுக்கிரன் ஆதிக்கமான 14,23,32,41,50,59,77,19,37,46, 64,15,24,33,42,60,69 போன்ற எண்களில் பெயரை அமைத்துக் கொள்ளலாம்.

**பின்பற்ற வேண்டியவை**

யோகமான எண் - 5,1

யோகமான தேதிகள்- 5,14,23, 1,10,19,28,6,15,24

யோகமான மோதிரக்கல்- வைரம், ஜிர்கான், கோமேதகம்

யோகமான நிறம்- வெளிர் மஞ்சல், வெளிர் நீலம் சாம்பல் நிறம்

ஆகாத நிறம் -கறுப்பு

ஆகாத தேதிகள்- இல்லை

## பெயர் எண்களின் பலன்

**22 எண் பலன்**

இந்த எண் பெயராக வந்தால் நிரந்தரமான முன்னேற்றம் கிடையாது. பல்வேறு முயற்சியில் இறங்கி தோல்யுறுவர் தீய பாதையில் செல்ல முற்படுவர். சிறந்த சாமர்த்தியம் கொண்ட இவர்கள், பலருடைய சூழ்ச்சியிலிருந்து தப்பிவிடுவர். தன்னுடைய திறமையால் தீய காரியங்களை புரிந்து செல்வம் சேர்ப்பர். சில நேரங்களில் கோர்ட்டுக்குப்



போகவேண்டிய நிலையும் ஏற்படும். பலர் இவர்களுடைய திறமையைப் பயன்படுத்திக் கொள்வர். இவர்களுக்கு ஏற்படும் கெட்ட பெயர்களைச் சமாளித்துக் கொண்டு தைரியமாக வாழ்வர். தன்னுடைய தீய செயல்களை மறக்க முயன்றாலும் சூழ்ந்திருக்கும் நண்பர்கள் தூண்டுவர்.

**23 எண் பலன்**

2 என்ற சந்திரனும் 3 என்ற குருவும் சேர்ந்து 23 வருவதால் இவர்கள் போடுகின்ற திட்டமெல்லாம் நிறைவேறும். பலவிதமான வீரதீரச் செயல்களை செய்பவரும் இவரே! இவர்களை விடத்திறமை மிக்கவர்கள் இருந்தாலும், வெற்றி இவர்களுக்கே! முகவசீகரமும், கவர்ச்சியும் உள்ள இவர்கள் தனது காரியத்தைச் சாதித்துக் கொள்வதில் வல்லவர்கள். இவர்களைச் சுற்றி எப்பொழுதும் பலர் இருந்து கொண்டே இருப்பர். வியாபாரம், தொழிற்கூடம், வாகனங்கள் போன்றவற்றால் இலாபம் சம்பாதிப்போடு முதல் போடாத கமிஷன் போன்றவற்றால் பணம் ஈட்டுவர். இந்த எண்ணை வியாபார விலாசமாக வைத்தால் நல்ல முறையில் தொழில் முன்னேற்றமடையும். எப்பொழுதும் சுறுசுறுப் பாக இருப்பது அவசியம். 8,17,26 போன்ற தேதிகளில் பிறந்தவர்கள் இந்த எண்வருகின்ற பெயரை வைத்துக் கொண்டால் மிகச் சிறந்த முன்னேற்றத்தை அடைவர். பொதுவாக எல்லா தேதிகளில் பிறந்தவர்களுக்கும் இந்த எண் பொருத்தமானதே.

(தொடரும்)

## சிறுமி துஷ்பிரயோக சம்பவம்

# குற்றப்புலனாய்வு பொறுப்பதிகாரியை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவு

(கொழும்பு)

சிறுமியொருவர் துஷ்பிரயோகத்திற்கு உட்படுத்தப்பட்டமை தொடர்பான வழக்கின் பெண் சாட்சியாளருக்கு அழுத்தம் கொடுத்த சந்தேகத்தின்பேரில் கைது செய்யப்பட்ட கெபிட்டிக் கொல்லாவ பொலிஸ் நிலையத்தின் குற்றப்புலனாய்வுப்பிரிவு பொறுப்பதிகாரி விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

குறித்த நபர் கெபிட்டிக் கொல்லாவ மாவட்ட நீதிபதியும் நீதிவானுமாகிய திலினி கமகே முன்னிலையில் ஆஜர்படுத்தப்பட்ட போதே இதற்கான உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

இந்தச் சம்பவம் தொடர்பாக விசாரணைகள் மேற்கொண்டு நீதிமன்றத்தில் அறிக்கை சமர்ப்பிக்குமாறு கெபிட்டிக் கொல்லாவ பொலிஸ் தலைமையக பொலிஸ் இன்ஸ்பெக்டருக்கு நீதிபதி உத்தரவிட்டுள்ளார்.

நீதிவான் நீதிமன்றம் கடந்த 5 ஆம் திகதி பிறப்பித்த உத்தரவுக்கமையவே குறித்த நபர் கைது செய்யப்பட்டிருந்தார்.

துஷ்பிரயோக சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேகநபர்கள் அத்தகைய குற்றத்தை புரியவில்லை என முறைப்பாட்டாளரான சிறுமியிடமிருந்து பலவந்தமாக எழுத்துமூல கடிதத்தைப் பெற்றுக் கொண்டதாக குறித்த பொலிஸ் அதிகாரிக்கு எதிராக குற்றஞ் சுமத்தப்பட்டுள்ளது. (ஸ்ரீ-2)

# தனியார் மருத்துவக் கல்லூரிகள் உயர் தரத்தை கொண்டிருக்க வேண்டும்



## சுகாதார அமைச்சர் தெரிவிப்பு

இலங்கையில் தனியார் மருத்துவக் கல்லூரி நிறுவப்படுமாயின் அவை உயர்ந்த தரத்தைக் கொண்டிருக்க வேண்டும் என சுகாதார அமைச்சர் மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

அரசாங்கத்தின் மருத்துவக் கல்லூரிகளில் தரமிக்க பயிற்சிகளைப் பெற்ற வைத்திய அதிகாரிகளே தற்போது வைத்தியசாலைகளில் கடமையாற்றுவதாகவும் அமைச்சர் சுட்டிக்காட்டியுள்ளார்.

மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் நேற்று முற்பகல் நடைபெற்ற வைபவம் ஒன்றில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே சுகாதார அமைச்சர் இந்த கருத்தினை வெளியிட்டுள்ளார்.

இதேவேளை கல்முனை பிராந்திய சுகாதார பணிமனையில் புதிய அலுவலகக் கட்டடத்தை சுகாதார அமைச்சர் நேற்று பிற்பகல் திறந்து வைத்துள்ளார்.

இதன்போது கருத்து வெளியிட்ட அமைச்சர் நாட்டின் சுகாதார சேவைக்கு மாகாண அமைச்சின் செயற்பாடுகள் முக்கியமானதென சுட்டிக்காட்டியுள்ளார். (ஸ்ரீ-2)

# சீனாவின் ஒத்துழைப்புகளுக்கு பிரதமர் ஜயரட்ண நன்றி தெரிவிப்பு

(கொழும்பு)

இலங்கையின் இறைமை மற்றும் ஒருமைப்பாட்டை பாதுகாப்பதில் சீனா வழங்கும் ஒத்துழைப்புக்கு நன்றி தெரிவிப்பதாக பிரதமர் டி.எம்.ஜயரத்ன தெரிவித்துள்ளார்.

சீனாவின் புஜின் பிராந்தியத்தின் ஷிமென் நகரில் நேற்று முன்தினம் ஆரம்பமான 140 நாடுகள் பங்கேற்கும் 15 ஆவது சீன சர்வதேச முதலீட்டு மற்றும் வர்த்தக கண்காட்சியில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இலங்கைக்கும் சீனாவுக்குமிடையிலான உறவு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ ஆட்சிக்காலத்திலேயே வலுவடைந்ததாக குறிப்பிட்டுள்ள அவர் இலங்கை சீனாவுக்கு ஏற்றுமதி செய்யும் பொருட்களின் அளவு அண்மைக்காலமாக குறிப்பிடத்தக்களவில் அதிகரித்துள்ளதாகவும் சுட்டிக்காட்டியுள்ளார். (ஸ்ரீ-2)

# ஆவணங்களை பதிவு செய்யும் மற்றும் நொத்தாரிஸ் சட்டங்களில் திருத்தம் மேற்கொள்ள அரசு தீர்மானம்

ஆவணங்களை பதிவு செய்யும் கட்டளைச் சட்டத்திலும் நொத்தாரிஸ் கட்டளைச் சட்டத்திலும் திருத்தம் மேற்கொள்வதற்கு அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

இதற்கமைய நொத்தாரிஸ் ஒருவரினால் காணி உறுதிப்பத்திரம் தயாரிக்கப்படும்போது காணி அமைந்துள்ள பிரதேச செயலகப் பிரிவு மற்றும் கிராம உத்தியோகத்தர் பிரிவு ஆகியவற்றை அதில் குறிப்பிட வேண்டியது கட்டாயமாக்கப்படவுள்ளது.

இந்த திருத்தத்தை அடுத்து இலங்கை சுதந்திரமடைவதற்கு முன்னரான காலம் தொடக்கம் பிரதேசங்களை அடையாளம் காட்டுவதற்காக பயன்படுத்தப்பட்ட பற்று மற்றும் கோறளை முறைமை நீக்கப்படவுள்ளது.

மேலும் கிராம உத்தியோகத்தர் பிரிவிற்கு புறம்பாக வேறு ஏதேனும் பிரதேசம் இருக்குமாயின் அது தொடர்பாகவும் காணி உறுதிப் பத்திரத்தில் குறிப்பிடப்பட வேண்டியது கட்டாயமாக்கப்படவுள்ளது.

பற்று மற்றும் கோறளை முறைமையினால் மக்கள் தமது காணி அமைந்துள்ள இடத்தை உரிய வகையில் அடையாளம் காண்பதில் சிரமத்தை எதிர்நோக்குகின்றனர். இதனைக் கருத்திற்கொண்டே குறித்த சட்டங்களில் திருத்தம் மேற்கொள்வது தொடர்பாக அரசாங்கம் கவனம் செலுத்தியுள்ளது.

இவ்வாறு கிராம உத்தியோகத்தர் பிரிவுகள் மற்றும் பிரதேச செயலகப் பிரிவுகள் முறைமைக்கு அமைய காணிகளை அடையாளம் காட்டுவதன் மூலம் காணி பிரச்சினைகளையும் குறைத்துக் கொள்ள முடியுமென நம்பப்படுகின்றது. (ஸ்ரீ-2)

# இந்தியாவில் இலங்கையருக்கு எட்டு வருட சிறைத்தண்டனை

(கொழும்பு)

இந்தியாவில் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்ட இலங்கையர் ஒருவருக்கு 6 வருட கால விசாரணைகளின் பின் கடந்த புதன்கிழமை 8 வருட கால சிறைத் தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

போதைப் பொருள் கடத்தல் வழக்கில் இந்தியர் இருவர் உட்பட இலங்கையர் ஒருவருக்கு 8 ஆண்டுகள் சிறைத்தண்டனை விதித்து சென்னை போதைப்பொருள் தடுப்பு சிறப்பு நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது.

இந்திய மத்திய பிரதேசம் உஜ்ஜைனியில் இருந்து சென்னைக்கு புகையிரதம் மூலம் சென்னையைச் சேர்ந்த ஜி.ஜெயந்தி (வயது 46) மற்றும் அவரது மகன் ஜெகன் (வயது 26) இருவரும் 13.12.2005 அன்று வெவ்வேறு பெயர்களில் பயணம் செய்தனர். அந்த புகையிரதத்தில் போதைப்பொருள் கடத்தப்படுவதாக போதைப்பொருள் தடுப்பு பொலிஸாருக்கு தகவல் கிடைத்தது.

அதைத் தொடர்ந்து சென்னை மத்திய புகையிரத நிலையத்திற்கு புகையிரதம் வந்து நின்றதும் சந்தேக நபர்களிடம் சோதனை நடத்தினர். அப்போது ஜெயந்தி, ஜெகன் ஆகியோரின் உடைமைகளையும் பொலிஸார் சோதனை செய்தனர்.

அதன்போது பொலித்தீன் பைகளில் வெள்ளை நிறப் பவுடர் அடைக்கப்பட்டிருப்பது தெரியவந்தது. சோதனை செய்ததில் அவை ஹெரோயின் என்ற போதைப் பொருள் என்பது கண்டறியப்பட்டது.

அதைத் தொடர்ந்து ஜெயந்தி, ஜெகன் ஆகியோரை பொலிஸார் கைது செய்தனர். அவர்கள் கொடுத்த வாக்கு மூலத்தில் போதைப் பொருளை இலங்கையைச் சேர்ந்த சிவபாலன் மற்றும் நந்தேஷ்னா ஆகியோரிடம் கொடுக்க இருந்ததாகவும் அதை அவர்கள் கடல் மார்க்கமாக இலங்கைக்கு கடத்த இருந்ததாகவும் குறிப்பிட்டனர்.

அதைத் தொடர்ந்து சிவபாலனையும் நந்தேஷ்னாவையும் பொலிஸார் கைது செய்தனர். இந்த வழக்கு சென்னை போதைப் பொருள் தடுப்பு சிறப்பு நீதிமன்றத்தில் விசாரிக்கப்பட்டு வந்தது. நீதிபதி முஹம்மது ஜபருல்லாகான் இந்த வழக்குத் தொடர்பில் மேற்கொண்ட விசாரணையை அடிப்படையாகக் கொண்டு தீர்ப்பளித்தார்.

போதைப் பொருள் கடத்தல் குற்றத்தில் ஈடுபட்டதற்காக ஜெயந்தி, ஜெகன், சிவபாலன் ஆகியோருக்கு 8 ஆண்டுகள் சிறைத்தண்டனையும் தலா ரூ. 10 இலட்சம் அபராதமும் விதித்து தீர்ப்பளிக்கப்பட்டுள்ளது.

நந்தேஷ்னா மீதான குற்றச்சாட்டு நிரூபிக்கப்படவில்லை என்பதை அடுத்து அவரை விடுதலை செய்ய நீதிபதி உத்தரவிட்டார். (ஸ்ரீ-2)

# வயோதிபர் விடுதியிலிருந்த பெண்ணிடம் போலிப்பாசம் காட்டி 11.5 மில். ரூபா மோசடி

## தம்பதியினருக்கு விளக்கமறியல்

வயோதிபர் விடுதியிலிருந்த 85 வயதான பெண்ணிடம் போலியாக பாசம் காட்டி 11.5 மில்லியன் ரூபா மோசடி செய்த தம்பதியினரை எதிர்வரும் 14 ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு கொழும்பு கோட்டை நீதிவான் நேற்று முன்தினம் உத்தரவிட்டார்.

ஷீலா செனவிரட்ன எனும் இவ்வயோதிபப் பெண் இது தொடர்பாக குற்றப் புலனாய்வுப் பணியகத்தில் முறைப்பாடொன்றை செய்திருந்தார். அதில் தான் கொள்ளுப்பிட்டியிலுள்ள வயோதிபர் விடுதியிலிருந்த போது பிரதான சந்தேக நபரான கே.டினேல்கா எம். பெர்னாண்டோ தன்னுடன் நட்பாகியதாக அப்பெண் முறைப்பாட்டில் தெரிவித்துள்ளார்.

சந்தேக நபரான பெண்ணுக்கு திருமணமானவுடன் புதிதாக திருமணம் செய்த இத்தம்பதியினர் தங்களுடன் வாடகை வீடொன்றில் வந்து தங்குமாறு தன்னை அழைத்ததாகவும் ஆனால் ஜூலை மாதத்திலிருந்து அவ்வீட்டுக்கு தான் வாடகை செலுத்த நேர்ந்ததாகவும் அதேவேளை தனது 39 நிரந்தர வைப்புச் சான்றிதழ்கள் மற்றும் பல்வேறு வங்கிக் கணக்குப் புத்தகங்கள் ஆகியவற்றையும் சந்தேக நபரை தான் நம்பியதால் அவரிடம் ஒப்படைத்திருந்ததாக வயோதிபப் பெண் தெரிவித்துள்ளார்.

பின்னர் அத்துருகிரிய பிரதேசத்தில் 2.51 மில்லியன் ரூபா பெறுமதியான காணியொன்றை வாங்குமாறு இத்தம்பதியினர் தனக்கு ஆலோசனை வழங்கியதாகவும் அதன் பின் காணியொன்றையும் 3.65 மில்லியன் ரூபா பெறுமதியான கார் ஒன்றையும் வாங்குவதற்கு நிதி ஏற்பாடுகளைச் செய்ததாகவும் அவர் கூறியுள்ளார்.

மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளிலிருந்து பிரதான சந்தேக நபர் இதேகாலப் பகுதியில் 2 மில்லியன் ரூபாவை தனது சொந்த வங்கிக் கணக்கில் வைப்பிலிட்டுள்ளமையும் அவரின் கணவரான மஹேல் பெரேரா 3 மில்லியன் ரூபாவையும் வைப்பிலிட்டமையும் தெரியவந்துள்ளதாக குற்றப்புலனாய்வுப் பணியகத்தின் பொலிஸார் நீதிமன்றில் தெரிவித்தனர்.

இவற்றை கருத்தில் கொண்ட நீதிவான் லங்கா ஜயரட்ன சந்தேக நபர்களை எதிர்வரும் 14 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டார். (ஸ்ரீ-2)

# சூசையின் மைத்துனருக்கு அரசகாணி வழங்கப்பட்டமை தொடர்பில் விசாரணை

விடுதலைப் புலிகளின் கடற்புலிகளின் தளபதியான சூசையின் மைத்துனருக்கு புத்தளம் வண்ணாத்திவில்லு பிரதேசத்தில் ஆயிரத்து 500 ஏக்கர் அரச காணி ஒன்று வழங்கப்பட்டமை தொடர்பில் ஜனாதிபதி விசாரணை பிரிவினர் விரிவான விசாரணைகளை நடத்தி வருகின்றனர். இது குறித்து விசாரணை நடத்த அதிகாரிகள் குழுவொன்று அங்கு சென்றுள்ளதாக அரசாங்கத்தின் பேச்சாளர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

வண்ணாத்திவில்லு பிரதேசத்தில் உள்ள அரச காணிகள் துண்டுகளாக பிரிக்கப்பட்டு தனியாருக்கு விற்பனை செய்யப்பட்டுள்ளதாக கிடைத்த தகவல்கள் ஒன்றையடுத்து நடத்தப்பட்ட விசாரணைகளின் போதே கடற்புலிகளின் தளபதி சூசையின் மைத்துனருக்கு ஆயிரத்து 500 ஏக்கர் காணி விற்பனை செய்யப்பட்டுள்ளமை தெரியவந்துள்ளது.

வன்னி இராணுவ நடவடிக்கை ஆரம்பிக்கப்படுவதற்கு பல வருடங்களுக்கு முன்னர் சூசையின் மைத்துனருக்கு இந்த காணி வழங்கப்பட்டுள்ளது என தகவல்கள் தெரிவிக்கின்றன.

இணையத்தளம் ஒன்றை பயன்படுத்தி வண்ணாத்திவில்லு பிரதேசத்தில் உள்ள அரச காணிகள் துண்டாடப்பட்டு இவ்வாறு விற்பனை செய்யப்பட்டு வந்துள்ளதாக விசாரணைகளில் தெரியவந்துள்ளது. (ஸ்ரீ-2)

# இந்திய-இலங்கை கம்யூனிஸ்ட் கட்சிகளின் தலைவர்கள் சந்திப்பு

(கொழும்பு)

இலங்கை கம்யூனிஸ்ட் கட்சியின் தலைவரான அமைச்சர் டியூ குணசேகர, இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் தலைவர்களான டி.ராஜா, எஸ்.சுதாகர் ஆகியோரை நேற்று முன்தினம் புதுடில்லியில் சந்தித்து கலந்துரையாடியுள்ளார்.

இக்கலந்துரையாடல் தொடர்பாக இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் தேசிய செயலாளர் டி.ராஜா தெரிவிக்கையில்,

தமிழர் விவகாரமும் எமது கலந்துரையாலில் இடம்பெற்றது. பல்வேறு விடயங்களில் இரு தரப்பினரின் கண்ணோட்டத்தையும் பரஸ்பரம் விளங்கிக் கொள்ள முயன்றோம்.

கடந்த 1987 ஆம் ஆண்டின் இந்திய-இலங்கை ஒப்பந்தத்தின் அடிப்படையில் அரசியல் தீர்வொன்று காணப்பட வேண்டும் என இலங்கை கம்யூனிஸ்ட் கட்சியும் விரும்புகின்றது எனக் கூறினார்.

யுத்த காலத்தில் இலங்கைப் படையினரால் மேற்கொள்ளப்பட்டதாக கூறப்படும் போர்க்குற்றங்கள் மற்றும் யுத்தம் முடிவடைந்து இரு வருடங்களின் பின்னரும் மக்கள் முகாம்களில் தங்கியுள்ளமை குறித்த விடயங்களையும் இந்திய கம்யூனிஸ்ட் கட்சி இப்பேச்சுவார்த்தையில் எழுப்பியதாக டி.ராஜா கூறினார்.

(ஸ்ரீ-2)

# சட்டவிரோத ஆட்கடத்தலை கட்டுப்படுத்த இந்திய-இலங்கை கடற்படை இணக்கம்

(கொழும்பு)

மன்னார் கடற்பரப்பிற்கு அருகில் இடம்பெறுகின்ற ஆட்கடத்தல்கள் மற்றும் போதைப் பொருள் கடத்தல்களை கட்டுப் படுத்துவது தொடர்பில் இலங்கை மற்றும் இந்திய கடற்படையினருக்கு இடையில் இணக்கப்பாடு எட்டப்பட்டுள்ளதாக கடற்படை ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.

இரு தரப்புக்கும் இடையில் நேற்று முன்தினம் இடம்பெற்ற பேச்சுவார்த்தைகளின் போது இந்த இணக்கப்பாடு எட்டப்பட்டுள்ளது.

இந்திய மற்றும் இலங்கைக்கு இடையிலான அதிக வர்த்தக நடவடிக்கைகள் மன்னாரை அண்மித்த கடற்பரப்பில் இடம் பெறுகின்றன.

இங்கு சட்டவிரோதமான ஆட்கடத்தல் மற்றும் போதைப்பொருள் கடத்தல்களை கட்டுப்படுத்த கடற்படையினர் நடவடிக்கை மேற்கொள்ளவுள்ளனர்.

(ஸ்ரீ-2)

# இந்திய விசா வழங்கும் நடைமுறையில் மாற்றம் கொண்டு வரப்படவேண்டும்

## மத்திய மாகாண சபை உறுப்பினர் கோரிக்கை

(கொழும்பு)

கண்டி இந்திய துணைத்தூதரகத்தின் இந்திய விசா வழங்கும் நடைமுறையில் மாற்றம் கொண்டு வரப்பட வேண்டும் என மத்திய மாகாண சபை உறுப்பினர் கணபதி கனகராஜ் கோரியுள்ளார்.

இந்திய தூதுவர் அசோக் கே காந்தாவுக்கு எழுதியுள்ள கடிதத்தில் அவர் இந்தக் கோரிக்கையை விடுத்துள்ளார்.

மலையகத்தின் பெரும்பாலான தொழிலாளர்கள், கணனி தொழில்நுட்பத்துக்கு அப்பாற்பட்டவர்களாக உள்ளனர்.

அத்துடன் விசா விண்ணப்பங்களை பெற்றுக் கொள்வதில் அதிக நிதி செலவீனங்கள் ஏற்படுவதுடன் காலதாமதம் ஏற்படுகின்றது என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

எனினும் கடந்த காலங்களில் மலையக மக்களால் ஒரே நாளில் விசாக்களைப் பெற்றுக் கொள்ளக்கூடியதாக இருந்தது.

எனவே அதற்கு ஏற்ப கண்டி இந்திய விசா காரியாலயம் தமது நடைமுறைகளை மாற்றிக் கொள்ள வேண்டும் என அவர் கோரிக்கை விடுத்துள்ளார்.

(ஸ்ரீ-2)

# நல்லிணக்க ஆணைக்குழுவுக்கு எதிராக அறிக்கை தயாரிக்கும் சர்வதேச மன்னிப்புசபை

எதிர்வரும் வாரம் ஜெனீவாவில் நடைபெறவுள்ள ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபைக்கூட்டத் தொடரின் போது இலங்கையின் நல்லிணக்க ஆணைக்குழுவுக்கு எதிரான விசேட அறிக்கையொன்றைத் தாக்கல் செய்வதற்கு சர்வதேச மன்னிப்புச் சபை உத்தேசித்திருப்பதாக இராஜதந்திர தரப்புத் தகவல்கள் தெரிவித்தன.

மேற்படி கூட்டத் தொடரில் கலந்து கொள்ளும் இலங்கை அரசு மனித உரிமை மீறல்கள் சம்பந்தமான சர்வதேசத்தின் குற்றச் சாட்டுகளைச் சமாளிப்பதற்கு நல்லிணைக்க ஆணைக்குழுவைப் பயன்படுத்தலாமெனக் கருதப்படுவதால் மன்னிப்புச் சபை இந்த விசேட அறிக்கையைத் தயார் செய்து வருதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இறுதிப் போரில் நடைபெற்றதாகக் கூறப்படும் மனித உரிமை மீறல் குற்றச்சாட்டுக்கள் குறித்து நல்லிணக்க ஆணைக்குழுவின் விசாரணைகளில் ஆராயப்படவில்லையென்று குறிப்பிட்டு தனது அறிக்கையைத் தயார் செய்து வரும் மன்னிப்புச் சபை இது தொடர்பில் இலங்கையின் மனித உரிமை ஆர்வலர்களிடம் கருத்தறியும் செயற்பாடுகளிலும் ஈடுபட்டதாக தகவல்கள் மேலும் தெரிவித்தன.

இதேவேளை ஐ.நா.மனித உரிமைகள் சபைக்கூட்டத்தில் கலந்து கொள்ளச் சென்றுள்ள இலங்கையின் அமைச்சர்கள் அங்கு அரசுக்கு எதிரான பிரசாரங்களை முறியடிப்பதற்கான ஆதரவைத் திரட்டும் பேச்சுக்களில் ஈடுபட்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

(ஸ்ரீ-2)

# விண்ணப்பம் கோரல்

இலங்கை விவசாய சேவையின் II ஆம் வகுப்பு II ஆம் தரத்திற்கு ஆட்சேர்த்துக் கொள்வதற்கான திறந்த/ மட்டுப்படுத்திய போட்டிப் பரீட்சைக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

இதில் விவசாய உத்தியோகத்தர், ஆராய்ச்சி அலுவலர், விவசாயப் பொருளியலாளர் பதவிகளில் திறந்த / மட்டுப்படுத்திய பரீட்சைகள் நடைபெறவுள்ளன.

விரிவுரையாளர் பதவிக்கு மாத்திரம் திறந்த பரீட்சை நடைபெறும்.

விவசாய உத்தியோகத்தர், விரிவுரையாளர்கள், விவசாயப் பொருளியலாளர், பதவிகளுக்கு பின்வரும் தகைமைகளைப் பெற்றிருத்தல் வேண்டும்.

அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றினால் வழங்கப்பட்ட விவசாய விஞ்ஞானத்திலான நான்கு வருடம் பட்டம் அல்லது அங்கீகரிக்கப்பட்ட பல்லைக்கழகமொன்றினால் பெறப்பட்ட மூன்று வருட விவசாய விஞ்ஞான பட்டத்துடன் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றினால் பெறப்பட்ட ஆராய்ச்சிக் கட்டுரை ஒன்றுடன் கூடிய இரு வருட பட்டப்பின் கல்வியிலான பட்டம் அல்லது அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றினால் பெறப்பட்ட விஞ்ஞானமாணி விவசாய தொழில் நுட்பமுகாமைத்துவத்தில் நான்கு வருட பட்டம் பெற்றிருத்தல் வேண்டும்.

ஆராய்ச்சி அலுவலர் பதவிக்கு விண்ணப்பிக்க விரும்புவோர் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றினால் பெறப்பட்ட விஞ்ஞானமாணி விவசாயத் தொழில் நுட்ப முகாமைத்துவத்தில் நான்கு வருட பட்டம் அல்லது அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக் கழமொன்றினால் வழங்கப்பட்ட விவசாய விஞ்ஞானத்திலான நான்கு வருடப் பட்டம் அல்லது அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றில் பெறப்பட்ட தாவரவியல், இரசாயனவியல் அல்லது விலங்கியில் தொடர்பான 4 வருட விஞ்ஞானமாணி விசேட பட்டம் அல்லது அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகத்தினால் பெறப்பட்ட மூன்று வருட விவசாய விஞ்ஞானம் அல்லது விஞ்ஞானமாணிப் பட்டம் அத்துடன் வர்த்தமானியில் குறிப்பிடப்பட்டுள்ள பாடங்களில் ஏதாவதுதொரு விடயம் தொடர்பாக ஆராய்ச்சிக்கட்டுரை ஒன்றுடன் கூடிய இரண்டு வருட பட்டப்பின் படிப்பு பட்டமொன்றைப் பெற்றிருத்தல் வேண்டும்.

எனவே இப்பதவிக்கு விண்ணப்பிக்கும் விண்ணப்பதாரிகள் தமது விண்ணப்பப்படிவத்தின் கடித உறையின் இடதுபக்க மேல்மூலையில் *இலங்கை விவசாய சேவைக்கு ஆட்சேர்த்துக் கொள்வதற்கான திறந்த/மட்டுப்படுத்திய போட்டிப் பரீட்சை-2011* எனக் குறிப்பிட்டு விவசாயப் பணிப்பாளர் நாயகம், விவசாயத் திணைக்களம், பேராதனை என்னும் முகவரிக்கு எதிர்வரும் ஒக்டோபர் மாதம் 7 ஆம் திகதிக்கு முன்பதாக பதிவுத் தபாலில் அனுப்பி வைக்க வேண்டும்.

இப்போட்டிப் பரீட்சை தொடர்பான மேலதிக விபரங்களை நேற்றைய தினம் வெளியாகிய வர்த்தமானிப் பத்திரிகையிலோ அல்லது வலம்புரிக் காரியாலயத்திலோ பார்வையிட முடியும்.

(ஸ்ரீ-4)

# வேலூர் பெண்கள் சிறையில் நளினிக்கு 'ஏ' பிரிவு வசதி

(வேலூர்)

வேலூர் பெண்கள் சிறையில் நளினிக்கு ஏ பிரிவு வசதி செய்யப்பட்டுள்ளது.

முன்னாள் பிரதமர் ராஜீவ் கொலை வழக்கில் ஆயுள் தண்டனை விதிக்கப்பட்ட நளினி வேலூர் பெண்கள் சிறையில் அடைக்கப்பட்டிருந்தார்.

கடந்த ஆண்டு ஏப்ரல் மாதம் 20 ஆம் திகதி நளினி அறையில் கைத்தொலைபேசியை சிறைக் காவலர்கள் கைப்பற்றினர்.

இதையடுத்து நளினி சென்னை புழல் சிறைக்கு மாற்றப்பட்டார். நிர்வாக வசதிக்காக கடந்த புதன்கிழமை புழல் சிறையில் இருந்து வேலூர் பெண்கள் சிறைக்கு மாற்றப்பட்டார்.

நளினிக்கு ஏ பிரிவு வசதி செய்து கொடுக்கப்பட்டுள்ளதாக சிறைத் துறையினர் தெரிவித்தனர்.

தினமும் படிப்பதற்காக நாளிதழ், வானொலி மற்றும் மின் வசதிகள் செய்து கொடுக்கப்பட்டுள்ளன.

(ஸ்ரீ)

# நீண்டகாலம் சிறையில் வாடும் கைதிகள் தொடர்பில் ஆய்வு

## மனித உரிமைகள் ஆணைக்குழு நடவடிக்கை

(கொழும்பு)

சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படாது நீண்டகாலம் சிறைச்சாலைகளில் தடுத்து வைக்கப்பட்டுள்ள கைதிகள் தொடர்பில் ஆய்வொன்றை நடத்துவதற்கு மனித உரிமைகள் ஆணைக்குழு நடவடிக்கை எடுத்துள்ளது.

சில கைதிகள் எட்டு தொடக்கம் பத்து வருடங்கள் வரை எவ்வித சட்ட நடவடிக்கையும் மேற்கொள்ளப்படாது சிறைச்சாலைகளில் தடுத்து வைக்கப்பட்டுள்ளமை தெரிய வந்துள்ளதாக ஆணைக்குழுவின் செயலாளர் சட்டத்தரணி நிமல் புஞ்சிஹேவா கூறியுள்ளார்.

இதனைத் தவிர மேலும் பல கைதிகள் 15 வருடங்களுக்கு மேல் சட்ட நடவடிக்கைகள் இன்றி சிறைச்சாலைகளில் தடுத்து வைக்கப்பட்டுள்ளமை தொடர்பாகவும் மனித உரிமைகள் ஆணைக்குழுவிற்கு தகவல் கிடைத்துள்ளது.

பொலிஸ் விசாரணைகளில் உள்ள குறைபாடுகள், நீதிமன்றங்களில் வழக்கு விசாரணைகளின் போது ஏற்படும் தாமதம் அல்லது சட்டமா அதிபர் திணைக்களத்தினூடாக குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்படாமை ஆகிய காரணங்களினால் கைதிகளுக்கு எதிரான சட்ட நடவடிக்கை தாமதமடைவதாக சட்டத்தரணி நிமல் புஞ்சிஹேவா சுட்டிக்காட்டினார்.

சிறைச்சாலைகளில் வழக்கு விசாரணைகள் இன்றி தடுத்து வைக்கப்பட்டுள்ள கைதிகள் தொடர்பாக மாவட்ட மற்றும் மாகாண மட்டத்தில் தகவல்கள் பெற்றுக் கொண்டு அது தொடர்பிலான பரிந்துரைகளை அரசாங்கத்திடம் சமர்ப்பிக்கவும் மனித உரிமைகள் ஆணைக்குழு திட்டமிட்டுள்ளது.

இந்த ஆய்வின் போது பெற்றுக் கொள்ளப்படும் விபரங்கள் அடங்கிய ஆவண மொன்றை சர்வதேச மனித உரிமைகள் தினத்தன்று வெளியிட தீர்மானித்துள்ளதாக ஆணைக்குழுவின் செயலாளர் மேலும் தெரிவித்தார்.

(ஸ்ரீ-2)

# அகதிகள் வெளிநாட்டுக்கு தப்பிச்செல்வதை தடுக்க இந்தியாவில் அதிக பாதுகாப்பு

இந்தியாவின் ஊடாக இலங்கைஅகதிகள் தப்பிச் செல்வதாக வெளியான செய்தியை தொடர்ந்து தமிழ்நாடு கன்னியாகுமரி கடற்பரப்பில் இருந்து ஒரிசா கடற்பரப்பு வரை அதிக பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளதாக இந்தியகிழக்கு கடற்பிராந்திய பொலிஸ் ஆணையாளர் சத்ய பிரகாஸ் சர்மா தெரிவித் துள்ளார்.

இலங்கையிலிருந்து அவுஸ்திரேலியா செல்லும் அகதிகள் இந்தியாவை தளமாக பயன்படுத்துகின்றனர். குறிப்பாக தமிழ்நாடு மற்றும் ஒரிசா ஆகிய கடற்பரப்பை அவர்கள் பயன்படுத்துகின்றனர்

இங்கிருந்து அவுஸ்திரேலியா ,கனடா உள்ளிட்ட நாடுகளுக்குச் செல்ல முயற்சிக்கின்றனர்.

இவ்வாறு ஒரு தொகுதி அகதிகள் வெளிநாடு ஒன்றுக்கு தப்பி செல்லவிருப்பதாக தகவல்கள் வெளியானதை தொடர்ந்து அதனை கண்காணிப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இதற்காக அதிக பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளது. இதன் நிமித்தம் கடந்த மூன்று தினங்களில் தாம் மன்னார் வளைகுடா மற்றும் பாக்கு நீரிணை பிரதேசங்களுக்குச் சென்று அதன் பாதுகாப்பு நிலவரங்களை ஆராய்ந்ததாக சத்ய பிரகாஸ் சர்மா குறிப்பிட்டுள்ளார்.

(ஸ்ரீ-2)

# ஊழலுக்கு எதிராக புதிய போராட்டம்; அத்வானி மீண்டும் இரத யாத்திரை

பா.ஜ.க மூத்த தலைவர் எல்.கே அத்வானிக்கு தற்போது 83 வயதாகிறது. பிரதமர் பதவிக்கு மீண்டும் போட்டியிடமாட்டேன் என்று அறிவித்த அவர் முக்கிய பொறுப்புக்களை மற்ற தலைவர்களிடம் பிரித்து ஒப்படைத்துள்ளார்.

இந்த நிலையில் அத்வானி மீண்டும் தீவிர அரசியலில் ஈடுபட ஆரம்பித்துள்ளார். பாராளுமன்றத்தில் நேற்று முன்தினம் வாக்கிற்கு பணம் கொடுத்த விவகாரம் மீது விவாதம் நடந்த போது அவர் என்னையும் கைது செய்து டில்லி திகார் சிறையில் அடையுங்கள் என்று ஆவேசமாக கூறினார்.

பாராளுமன்றத்தில் அவர் விஸ்வரூபம் எடுத்தது பா.ஜ.க எம்.பிக்களுக்கே ஆச்சரியமூட்டுவதாக இருந்தது. அடுத்து வரும் தேர்தல்களை கருத்தில் கொண்டு அத்வானி இப்படி செயற்பட தொடங்கி இருப்பதாக கூறப்படுகிறது.

இந்த நிலையில் நேற்று முன்தினம் மாலை நிருபர்களுக்கு பேட்டியளித்த அத்வானி, நான் மீண்டும் நாடெங்கும் மிகப் பெரிய இரத யாத்திரை நடத்தப் போகின்றேன். ஊழலுக்கு எதிராக இந்த இரத யாத்திரை நடத்தப்படும். இரதயாத்திரை வழிநெடுக நல்லாட்சி அரசியலில் தூய்மை பற்றி வலியுறுத்துவோம் என்றார்.

இரத யாத்திரை எப்போது தொடங்கும் என்று நிருபர்கள் கேட்டதற்கு இரதயாத்திரை தொடங்கும் இடம், நாள், நேரம் மற்றும் யாத்திரை செல்லும் இடங்கள் உள்ளிட்ட எல்லா விபரங்களையும் கட்சி நிர்வாகிகள் விவாதித்து முடிவு செய்து அறிவிப்பார்கள் என்றார்.

(ஸ்ரீ-4)




# ராஜீவுடன் பலியானோரின் குடும்பத்தினர் அடையாள உணவுத் தவிர்ப்பு போராட்டம்

(புதுடில்லி)

இந்திய முன்னாள் பிரதமர் ராஜீவ்காந்தி கொல்லப்பட்ட குண்டுவெடிப்பு சம்பவத்தில் அவருடன் பலியானவர்களின் குடும்பத்தினர் அடையாள உணவுத்தவிர்ப்பில் ஈடுபட்டுள்ளனர்.

இந்த குண்டு வெடிப்பு சம்பவத்தில் 15 பேர் கொல்லப்பட்டனர்.

அவர்களின் குடும்பத்தினர் இந்த அடையாள உணவுத் தவிர்ப்பில் ஈடுபட்டுள்ளனர். ராஜீவ்காந்தியின் கொலை தொடர்பில் மரண தண்டனை விதிக்கப்பட்டுள்ளவர்களுக்கு அவர்களின் தண்டனையை இரத்து செய்யுமாறு பல்வேறு தரப்பில் இருந்து வலியுறுத்தப்படுகிறது.

இந்நிலையில் அவர்களுக்கு வழங்கப்பட்ட தண்டனையை நிறைவேற்ற வேண்டும் என வலியுறுத்தியே அவர்கள் இந்த அடையாள உணவுத் தவிர்ப்பில் ஈடுபட்டுள்ளனர்.

எனினும் குறித்த 15 குடும்பங்களுள் 6 குடும்பங்கள் மாத்திரமே இந்த உணவுத் தவிர்ப்பில் பங்குபற்றியுள்ளனர்.

இதேவேளை கொலை எதிரிகளின் தண்டனைகள் நிறைவேற்றப்பட வேண்டும் என அண்மையில் இந்திய காங்கிரஸ் கட்சியின் இளைஞர் அணியினர் ஆர்ப்பாட்டம் ஒன்றை நடத்தி இருந்தமை சுட்டிக்காட்டத்தக்கது.

(ஸ்ரீ-2)

# தூத்துக்குடி - கொழும்பு இடையிலான கப்பல் சேவைக்கு அதிக வரவேற்பு

(சென்னை)



தூத்துக்குடி -கொழும்பு இடையே பயணிக்கும் கப்பல் போக்குவரத்துக்கு அதிக வரவேற்பு காணப்படுகிறது.

கடந்த ஜூன் மாதம் மத்திய அமைச்சர் ஜி.கே. வாசன் தூத்துக்குடி-கொழும்பு இடையே பயணிகள் கப்பல் போக்குவரத்தை ஆரம் பித்து வைத்தார்.

பிளமிங்கோ லைனர்ஸ் என்ற தனியார் நிறுவனம் சார்பில் ஸ்காட் டிய பிரின்ஸ் பயணிகள் கப்பல் செவ்வாய், வெள்ளிக்கிழமைகளில் தூத்துக்குடியில் இருந்து கொழும்புக்கும் புதன் மற்றும் திங்கட்கிழமைகளில் கொழும்பிலிருந்து தூத்துக்குடிக்கும் பயணித்து வருகிறது.

இரு வழித் தடங்களிலும் மாலை 6 மணிக்கு புறப்படும் இக்கப்பல் 12 மணி நேர பயணத்திற்கு பின் மறுநாள் காலை 8 மணிக்கு மறுமுனையை சென்றடைகிறது. ஒன்பது அடுக்குகளை கொண்ட இக்கப்பல் 13 மைல் வேகத்தில் செல்கிறது. இதில் ஆயிரத்து 44 பயணிகள் பயணம் செய்யலாம். இதுவரையில் இக்கப்பலில் அதிகபட்சமாக 462 பேர் பயணம் செய்துள்ளனர்.

சராசரியாக 250 பேர்வரை பயணம் செய்கின்றனர். இதில் 175 ஊழியர்கள் பணியாற்றுகின்றனர்.

இக்கப்பலில் பயணம் செய்வோர் கட்டாயம் கடவுச்சீட்டு வைத்திருக்க வேண்டும். கொழும்பு சென்றவுடன் இலங்கை சார்பில் 30 நாட்கள் தங்கும் வகையில் சுற்றுலா விசா வழங்கப்படுகிறது. தூத்துக்குடியிலிருந்து கொழும்பு செல்வதற்கும் கொழும்பிலிருந்து தூத்துக்குடிக்கு வருவதற்கும் குறைந்த பட்சமாக 3 ஆயிரத்து 128 ரூபாயும் அதிக பட்சமாக 20 ஆயிரத்து 470 ரூபாயும் கட்டணமாக வசூலிக்கப்படுகிறது. தற்போது இக்கப்பல் சேவைக்கு பொது மக்களிடம் அதிக வரவேற்பு காணப்படுகிறது.

(ஸ்ரீ-4)

# தேசிய கண்தான தினத்தை முன்னிட்டு பிரதமர் மன்மோகன்சிங் கண்தானம்

(புதுடில்லி)

தேசிய கண்தான தினத்தை முன்னிட்டு பிரதமர் மன்மோகன்சிங்கும் அவரது மனைவியும் தங்களின் கண்களை நேற்று முன்தினம் தானம் செய்தனர். விழித்திரையை மாற்றுவதன் மூலம் பார்வை இழந்த ஒருவருக்கு மீண்டும் பார்வையை கிடைக்க செய்யலாம்.

இந்தியாவில் 45 இலட்சம் பேர் கண் பார்வை இல்லாமல் உள்ளனர். கண்தானம் செய்வதன்மூலம் விழித்திரை பாதிக்கப்பட்ட 30 இலட்சம் பேருக்கு இழந்த பார்வையை திரும்பக்கிடைக்க செய்யமுடியும் என டாக்டர்கள் கருதுகின்றனர். கண் தானம் செய்ய வேண்டியதன் அவசியத்தை மக்களிடையே ஏற்படுத்துவதற்காக தேசிய கண்தான தினம் ஒவ்வொரு ஆண்டும் செப்டெம்பர் 8 ஆம் திகதியன்று கடைப்பிடிக்கப்படுகிறது.

தேசிய கண்தான தினத்தை முன்னிட்டு பிரதமர் மன்மோகன் சிங் மற்றும் அவரது மனைவி குர்சரண் சிங்கவுர் ஆகியோர் டில்லியில் நேற்று முன்தினம் நடந்த நிகழ்ச்சி ஒன்றில் கலந்து கொண்டனர்.

அப்போது தங்களின் கண்களை தானம் செய்வதாக உறுதிமொழி எடுத்துக் கொண்டு அதற்கான விண்ணப்பதில் கையெழுத்திட்டனர். இந்தியாவில் 400 இற்கும் மேற்பட்ட அமைப்புக்கள் இந்திய கண் வங்கி சங்கத்தில் பதிவு செய்துள்ளன. இந்த அமைப்பினர் கண்தானம் செய்வதன் அவசியம் குறித்து மக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்தி வருகின்றனர்.

(ஸ்ரீ-4)

# பழம்பெரும் நடிகை காந்திமதி மரணம்



பழம்பெரும் குணச்சித்திர மற்றும் நகைச்சுவை நடிகை காந்திமதி உடல் நலக்குறைவால் மரண மடைந்தார்.

எம்.ஜி.ஆர், சிவாஜி, ஜெமினி கணேசன் உள்ளிட்ட அந்தக்கால நடிகர்கள் முதல் ரஜினி, கமல் விஜயகாந் உள்ளிட்ட இந்தக் கால நடிகர்கள் வரை அனைவருடனும் நடித்த பெருமைக்குரியவர் காந்திமதி.


16 வயதினிலே படத்தில் ஸ்ரீதேவியின் அம்மா வேடத்தில் நடித்து மிகவும் பிரபலமானார். அதன் பின்னர் பாரதிராஜாவின் படங்களில் தவறாமல் நடித்து வந்தார். நகைச்சுவை, வில்லத்தனம், குணச்சித்திரம் என எந்தப் பாத்திரத்திலும் அபாரமாக நடிக்கக் கூடியவர் காந்திமதி.

கடந்த 2000 ஆம் ஆண்டு இதய நோய் காரணமாக அப்பலோ மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு அறுவைச் சிகிச்சை செய்யப்பட்டது. அதன்பிறகு உடல்நிலையில் முன்னேற்றம் கண்டார். சில காலம் சினிமாவை விட்டு விலகி இருந்தார். தொலைக்காட்சி தொடர்களில் மட்டும் நடித்து வந்தார்.

300 இற்கும் மேற்பட்ட படங்களில் நடித்துள்ள காந்திமதி உடல்நலக்குறைவால் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டிருந்தார். சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார்.

காந்திமதி சிவகங்கை மாவட்டத்தைச் சேர்ந்தவர். தற்போது சென்னை வடபழனியில் வசித்து வந்தார். காந்திமதி கடைசி வரை திருமணம் செய்து கொள்ளாமலேயே வாழ்ந்து மறைந்துவிட்டார்.

(ஸ்ரீ-4)



கோவை அடுத்த கணுவாயில் எனும் ஊரில் உலகிலேயே முதன் முறையாக புட்டபர்த்தி சாய்பாபாவிற்கு கோவில் கட்டப்பட்டுள்ளது. (உள்படம் கோவில் கும்பாபிஷேகம்)

# சிரேஷ்ட இராணுவ அதிகாரிகள் சிலருக்கு கட்டாய விடுப்பு

## ஐ.தே.க. குற்றச்சாட்டு

(கொழும்பு)

சிரேஷ்ட இராணுவ அதிகாரிகள் சிலருக்கு கட்டாய விடுப்பு வழங்கப்பட்டுள்ளதாக ஐக்கிய தேசியக் கட்சி குற்றம் சுமத்தியுள்ளது.

யுத்தத்தின் பின்னர் இராணுவத்தினரை உதாசீனம் செய்யும் நடவடிக்கைகளை அரசாங்கம் ஆரம்பித்துள்ளதாக ஐக்கிய தேசியக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் தயாசிறி ஜயசேகர தெரிவித்துள்ளார்.

சில இராணுவ மேஜர்களும் இதில் அடங்குவதாகக் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை, பொலிஸ்துறையை சேர்ந்த ஆயிரத்து 266 உத்தியோகத்தர்கள் பதவியை விட்டு விலகிச் சென்றுள்ளதாக அரசாங்கம் பட்டியல்படுத்தியுள்ளதாக ஐக்கிய தேசியக் கட்சியின் தேசிய அமைப்பாளர் ரவி கருணாநாயக்க தெரிவித்துள்ளார்.

எனினும், இந்தக் குற்றச்சாட்டுக்களை ஏற்றுக்கொள்ள முடியாது என ஆளும் கட்சியின் பிரதம கொறடா தினேஷ் குணவர்த்தன தெரிவித்துள்ளார்.

எந்தவொரு இராணுவ உயரதிகாரியும் கட்டாய விடுப்பு அனுப்பி வைக்கப்படவில்லை என அவர் குறிப்பிட்டுள்ளார்.

(ஸ்ரீ-2)

# மர்மமனிதர்களின் செயற்பாட்டை கண்டித்து கரவெட்டி பி.சபை தீர்மானம் நிறைவேற்றம்

(கரவெட்டி)

யாழ்.மாவட்டத்தில் இடம்பெற்று வரும் மர்ம மனிதர்களின் செயற்பாட்டைக் கண்டித்தும் மற்றும் ராஜீவ் காந்தி கொலை வழக்கில் தூக்குத் தண்டனை விதிக்கப்பட்ட 3 பேரையும் விடுதலை செய்யவேண்டுமெனக் கோரியும் கரவெட்டி பிரதேச சபைக் கூட்டத்தில் ஏகமனதாகத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

கரவெட்டி பிரதேச சபையில் 18 உறுப்பினர்கள் கொண்ட இக்குழுக் கூட்டம் கடந்த புதன்கிழமை பிரதேச சபை மண்டபத்தில் கரவெட்டி பிரதேச சபை செயலாளர் வியாகேசு தலைமை இடம்பெற்றது.

இக்கூட்டத்தில் முக்கிய விடயங்கள் மற்றும் பிரதேசசபை அபிவிருத்தி தொடர்பான விடயங்களும் ஆராயப்பட்டன.

இதில் முக்கிய விடயமாக தற்போது இடம்பெற்று வரும் மர்மமனிதர்களின் நடமாட்டத்தைக் கட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்கவேண்டும் என ஜனாதிபதிக்கு மகஜர் ஒன்றையும் மற்றும் தூக்குத் தண்டனை விதிக்கப்பட்ட சாந்தன், முருகன், பேரறிவாளன் ஆகியோருடைய தண்டனையைக் குறைக்கக் கோரியும் இந்தியத் தூதரகமூடாக தமிழக முதல்வருக்கு மகஜர் ஒன்றையும் அனுப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்படவேண்டுமென சபைக் கூட்டத்தில் ஏகமனதாக தீர்மானம் எடுக்கப்பட்டது. (ஸ்ரீ-12-24)

# ஊழியர் சேமலாப அங்கத்தவர்களின் பிரச்சினைக்கு தீர்வு காணும் வேலைத்திட்டம்

ஊழியர் சேமலாப அங்கத்தவர்கள் முகம் கொடுக்கும் பிரச்சினைகளுக்கு தீர்வு காணும் வேலைத்திட்டமொன்றை மத்திய வங்கியின் ஊழியர் சேமலாப திணைக்களம் நடைமுறைப்படுத்தவுள்ளது.

உரிய பகுதியிலுள்ள சேவை நிலையங்களுக்குச் சென்று நடமாடும் சேவைகளை நடத்த திணைக்களம் திட்டமிட்டிருப்பதாக ஊழியர் சேமலாப நிதியத்தின் மேலதிக அத்தியட்சகர் திருமதி. கல்யாணி குணதிலக தெரிவித்துள்ளார்.

தொழில் திணைக்களத்தின் ஒத்துழைப்பும் இதற்காக பெற்றுக்கொள்ளப்படவுள்ளது. இவ்வாண்டில் 10 நடமாடும் சேவைகள் நடத்தப்பட்டுள்ளன. கூடுதலான ஊழியர்களை பிரதிநிதித்துவப் படுத்தும் நிறுவனங்களுள் நடமாடும் சேவைக்கு விண்ணப்பிக்கலாம் என குறிப்பிடப்படுகிறது.

ஊழியர் சேமலாப நிதி அங்கத்தவர்கள் கொழும்புக்கு வருகை தராது தமது பகுதிகளிலேயே நெருக்கடிகளுக்கு தீர்வுகாண முடிகின்றமையும் வேலைத்திட்டத்தின் சிறப்பம்சமாகும். (ஸ்ரீ-12)

# திரிபோஷா திட்டத்திற்கு 187 மெற்றிக்தொன் உள்ளூர் பால்மா கொள்வனவு

திரிபோஷாதயாரிக்கும்திட்டத்திற்கு உள்ளூர் பால்மா உற்பத்தியாளர்களிடமிருந்து 187 மெற்றிக் தொன்பால் மாவைக்கொள்வனவுசெய்ய அமைச்சரவை முடிவு செய்துள்ளது.

அதன்படி, 2011 ஒகஸ்ட் முதல் டிசெம்பர் வரையிலான காலப்பகுதிக்கு திரிபோஷா வழங்குவதற்காக பிரதான மூலப்பொருட்களான பால்மா 187 மெற்றிக் தொன்னை கொள்வனவு செய்ய 100.79 மில்லியன் ரூபா ஒதுக்கீடு செய்யப்படுகிறது.

சுகாதார அமைச்சர் மைத்திரிபால சிறிசேனவின் ஆலோசனைக்கு ஏற்ப அமைச்சரவை இந்த முடிவை எடுத்துள்ளது. (ஸ்ரீ-2)

# தவிசாளருக்கு அனுமதியில்லை

(காரைநகர்)

காரைநகரில் நேற்று முந்தினம் நடை பெற்ற பிரதேச அபிவிருத்தி கூட்டத்திற்கு சென்ற பிரதேச சபை தவிசாளருக்கு பொலிஸார் உட்செல்ல அனுமதிக்கவில்லை என குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது.

இதனையடுத்து தவிசாளருக்கும் பொ ஸாருக்கும் இடையில் 20 நிமிட வாக்குவாதம் இடம்பெற்றது. தனக்கு அழைப்பு அனுப்பப்படவில்லை என்றும் தான் சாதாரண பொதுமகனாகவே இங்கு வந்து இருக்கின்றேன் என்று கூறியும் பொலிஸார் அதனை செவிமடுக்கவில்லை என தவிசாளர் வே ஆனைமுகன் தெரிவித்தார். (எ)


## P.W.அரியரட்ணம் ஞாபகார்த்த சிறுவர் இயல் இசை அரங்கு-2011

P.W.அரியரட்ணம் ஞாபகார்த்தமாக, அகில உலக சிறுவர் தினத்தை முன்னிட்டு, யாழ்ப்பாணக் கல்லூரி, பிரதம பாடசாலையினரால் அழைக்கப்பட்ட தனியார் பாடசாலைகளுக்கிடையிலான மாபெரும் சிறுவர் இயல், இசை, அரங்க விழா-2011 இவ்வருடமும் 08.10.2011 அன்று நடாத்தத் தீர்மானிக்கப்பட்டுள்ளது என்பதை பெருமகிழ்வுடன் அறியத் தருகின்றோம்.

பங்குபற்ற விரும்பும் பாடசாலைகள் 19.09.2011 இற்கு முன்பதாக எம் கல்லூரியுடன் தொடர்பு கொண்டு தங்களது பங்களிப்பை உறுதிப்படுத்த வேண்டுகின்றோம். அத்துடன், கடந்த வருடம் பங்குபற்றிய மாணவர்களைத் தவிர்த்து, புதிய மாணவர்களுடன் இவ்வருடம் இச் சிறுவர் நாடக ஆற்றுகை செய்யப்படல் அவசியம் என்பதையும் அறியத் தருகின்றோம்.

அதிபர், யாழ்ப்பாணக்கல்லூரி,
வட்டுக்கோட்டை. (சி-4370)



## இலங்கை மின்சார சபை-யாழ்.பிரதேச அலுவலகம்

### மின்தடை பற்றிய அறிவித்தல்

கீழ்க்குறிப்பிடப்படும் இடங்களில் வீதி அகலிப்பு பணிகளுக்காக உயர் அழுத்த மின்விநியோக மார்க்கங்களிலுள்ள மின்கம்பங்களை இடமாற்ற வேண்டியிருப்பதால் குறிப்பிட்ட தினங்களில் காலை 8.30 மணிமுதல் மாலை 5.00 மணிவரை மின்சார விநியோகம் தடைப்பட்டிருக்கும் என்பதை மின்பாவனையாளர்களுக்கு அறியத் தருகின்றோம். வேலைகள் முன்னதாக முடிவுற்றால் குறிப்பிடப்பட்டுள்ள நேரத்திற்கு முன்பும் மின்சாரம் வழங்கப்படலாம் என்பதைக் கவனத்தில் கொள்ளவும்.

| திகதி | இடங்கள் |
|---|---|
| 12.09.2011 (திங்கட்கிழமை)<br>14.09.2011 (புதன்கிழமை)<br>16.09.2011 (வெள்ளிக்கிழமை) | இணுவில், மருதனார்மடம், தாவடி, கொக்குவில், நாச்சிமார் கோவிலடி, ஆனைக்கோட்டை, நவாலி, கோண்டாவில், கொட்டடி, கோம்பயன்மணல் பிரதேசம், யாழ். பட்டணப்பகுதி, உடுவில் ஒரு பகுதி. |
| 13.09.2011 (செவ்வாய்க்கிழமை)<br>15.09.2011 (வியாழக்கிழமை)<br>17.09.2011 (சனிக்கிழமை) | கரந்தன், நீர்வேலி, சிறுப்பிட்டி, கோப்பாய், இருபாலை, கல்வியங்காடு, நல்லூர், அரியாலை, தென்மராட்சிப் பிரதேசம், புன்னாலைக்கட்டுவன் வடக்கு, புன்னாலைக்கட்டுவன் தெற்கு, மயிலங்காடு பிரதேசத்தின் ஒருபகுதி மற்றும் ஈவினை பிரதேசத்தின் ஒருபகுதி. |
| 18.09.2011 (ஞாயிற்றுக்கிழமை) | இணுவில், மருதனார்மடம், தாவடி, கொக்குவில், நாச்சிமார் கோவிலடி, ஆனைக்கோட்டை, நவாலி, கோண்டாவில், கொட்டடி, கோம்பயன்மணல் பிரதேசம், யாழ். பட்டணப்பகுதி, உடுவில் ஒரு பகுதி, சுன்னாகம், மல்லாகம், ஏழாலை, தெல்லிப்பளை, அளவெட்டி, பன்னாலை, சிறுவிளான். |

இதனால் மின்பாவனையாளர்களுக்கு ஏற்படும் அசௌகரியங்களுக்கு மனம் வருந்துகிறோம்.

"சூழல் மற்றும் அபிவிருத்தி வேலைகளுக்கு கைகொடுக்கும் இலங்கை மின்சாரசபை"

(சி/4371)



## உரும்பிராய் கருணாகரப்பிள்ளையார் கோயில்

### தேர்த் திருவிழா

*11.09.2011 ஞாயிற்றுக்கிழமை*

*காலை 6.00 மணி அபிஷேகம்*

*காலை 8.00 மணி வசந்த மண்டப பூசை*

தொடர்ந்து கருணாகரப்பெருமான் திருத்தேருக்கு எழுந்தருளுவார்.

விசேட மேளக்கச்சேரிகள் இடம்பெறும்

கருணாகரன் அடியார்களே! எம்பெருமான் திருத்தேர் காணவாரீர்!! அவனருள் பெறுக!!!

"கருணாகரன் பாதம் கனவிலும் துணைசெய்யும்"

தேர்த்திருவிழா
உபயகாரர்கள்.

(6097)



## AHAVOLI

### APPLICATION FOR TRAINING OF PSYCHOLOGICAL COUNSELLORS

The applications are called for training of counselors. This is a one year, week-end (Saturday & Sunday) course that consists of 450 hours. The applicants should have the following prerequisites to apply for this course.

1. Knowledge of English as to read, write and understand
2. A pass in Advanced Level
3. Age between 25 and 45 years
4. Interested in social Activities

The applicants will have to buy the special application form our office and submit them before the 25th of September. Only 25 applicants will be selected to follow this training.

**For further details please contact:**

**"AHAVOLI"**
**INSTITUTE OF COUNSELLING PSYCHOLOGY**
**Affiliated to National University of Ireland, Galway,**
**St.Patrick's Road, Jaffna.**
**Contact No:- 021 222 2856**

(6083)

மாமியாருக்கு பல்லுப் பிடுங்கிய நாளில் மருமகள் முறுக்குச் சுட்டாளாம்.
–தமிழ்ப் பழமொழி

வலம்புரி
T.P. 021 567 1530
Web: www.valampurii.com
e-mail: editor@valampurii.com

# தசரத சக்கரவர்த்தியின் சாவும் விடுதலைப் புலிகளின் தோல்வியும்

தசரதனின் உயிரற்ற உடல் இராமனின் வருகைக்காக எண்ணெய்க் குதத்தில் பாதுகாப்பாக வைக்கப்பட்டுள்ளது. தசரதன் உயிரிழந்த செய்தியை இராமருக்கு சொல்வதற்காக தூதுவர்கள் இராமர் இருக்கும் இடம் நோக்கிச் சென்றுவிட்டனர்.

கூடவே தசரதனின் இறுதிக் கிரியைக்கான ஏற்பாடுகளும் நடந்தன. இராமர் வரவே இல்லை. இறுதிச் சடங்குகள் இராமர் இல்லாமலே நடந்தேறின. புத்திர சோகத்தால் நீயும் இறக்கக் கடவை என்பது முனிவரின் சாபம் ஆயின் அதன்படி தசரதருக்கு நடந்தாயிற்று.

அப்படியானால் மூத்த மகன் இராமரே தசரதரின் இறுதிச் சடங்கை நடத்தியிருக்க வேண்டும். ஆனால் அது நடக்கவில்லை.

இராமர் காடு செல்கிறார் என்பதை தாங்க முடியாத தசரதர் உயிர் நீத்தார் என்பது சாபத்தின் விளைவுஎனில், அந்திமக் கிரியையில் இராமர் பங்கேற்க முடியாமல் போனமைக்கு என்ன காரணம்?

இங்குதான் தசரதனின் அரசாட்சியில் ஏற்பட்ட வழு தென்படுகின்றது. ஆம், நாடான்ற மிகச்சிறந்த தசரதர் தன் வீட்டில் தன் மனைவி கைகேயியின் தோழியாக இருந்த கூனி பற்றி இம்மியும் சிந்தியாமல் இருந்ததன் விளைவே அது எனலாம்.

தசரதன் சிறந்த மன்னராயினும் தன் அரண்மனையில் – அந்தப்புரத்தில் இருக்கக் கூடியவர்களின் குணஇயல்பு – மன இயல்பு பற்றி சிந்தியாமல் இருந்தாரே அது மிகப்பெரும் தவறு. அத்தகையதொரு தவறை தசரதர் விட்டமையினாலேயே, அந்திமக் கிரியையில் இராமர் பங்கேற்க முடியாமல் போயிற்று. இத்தகையதொரு நிலைதான் விடுதலைப்புலிகளுக்கும் ஏற்பட்டிருந்தது.

யாரையும் எளிதில் நம்பாத விடுதலைப்புலிகள் காலப்பிழையாக மிக மோசமானவர்களை நம்பினர்.

உண்மையான தமிழ்ப்பற்றும் தாயக நேசமும் உடையவர்களுக்கு தண்டனை வழங்கிய விடுதலைப்புலிகள் பச்சோந்திகளை தமக்குத் துணையாக்கிக் கொண்டனர். அதன் விளைவுதான் ஆபத்தான நேரத்தில் எத்தனையோ நேசக்கரங்கள் நீட்டும் வாய்ப்பிருந்தும் அது சாத்தியப்படாமல் போயிற்று.

ஆக, தசரதனின் சாவும் விடுதலைப்புலிகளின் தோல்வியும் ஒரே தன்மையானவை. இந்தச் செய்தியை கூறும் அதேநேரம் இன்று நடைபெறுவதாக அறிவிக்கப்பட்ட அடையாள உண்ணாவிரதப் போராட்டத்தைக் கைவிடுவதாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அறிவித்துள்ளது.

ஜனாதிபதியுடனான சந்திப்புக்குப் பின்னர் இப்படியொரு முடிபாம். என்ன செய்வது? வீட்டிற்குள் வினையிருக்கும் போது எப்படி நாம் உய்வது?

அன்பார்ந்த மக்களே! நாங்கள் பூதத்தை துரத்துவதற்காக இரவு இரவாக விழிப்பிருப்போம். அவர்கள் மகிழ்வாக வாழட்டும்.

தசரதர் இறந்தது; அந்திமக் கிரியையில் இராமர் பங்கேற்காதது என்பன ஏதோவொரு வகையில் தசரதருக்கு கொடுத்த சாபமும் அவர் விட்ட தவறுமாக இருந்தால், எங்கள் வாக்குகளில் பதவிகளைப் பெற்று எங்கள் துன்பத்தின்போது எங்களுக்கு உதவாமல் இருக்கும் அரசியல் தலைமை எங்களுக்கு கிடைத்ததற்கு எங்கள் சாபமும் நாம் விட்ட தவறுமே காரணம் எனலாம்.

# மர்ம மனிதன் பிரச்சினைக்குத் தீர்வின்றேல் மாதாந்த பொதுக்கூட்டத்தை பகிஷ்கரிப்போம்

## யாழ்.மாநகரசபை எதிர்க்கட்சி உறுப்பினர்கள் தெரிவிப்பு

மர்ம மனிதன் அச்சுறுத்தல் தொடர்ந்தால் மாதாந்த கூட்டத்தை முழுமையாக பகிஷ்கரிப்போம் என யாழ்.மாநகரசபை எதிர்க் கட்சி உறுப்பினர் க.விந்தன் தெரிவித்துள்ளார்.

யாழ்.மாநகர சபையின் மாதாந்த பொதுக் கூட்டம் நேற்று முன்தினம் முதல்வரின் மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்றது. இதன்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில், யாழ்.குடாநாட்டு மக்களை தொடர்ந்து அச்சுறுத்தி வரும் இந்த மர்ம மனிதர்களின் நடமாட்டத்தை அரசாங்கம் தலையிட்டு உடனடியாக கட்டுப்படுத்த வேண்டும்.

நாட்டில் சிறுபான்மையினமான தமிழர்கள் வாழும் பகுதிகளில் மட்டுமே இந்த மர்ம மனிதர்களின் அச்சுறுத்தல் இடம்பெற்று வருகிறது.

இதன்மூலம் அரசாங்கம் இந்த மர்ம மனிதர்களின் பின்புலத்தில் செயற்படுகின்றது என்ற சந்தேகம் ஏற்படுகின்றது.

இதனைக் கட்டுப்படுத்த அமைச்சர்களும் அரச அதிகாரிகளும் மாநாடுகளை கூட்டினாலும் அதனால் எந்த வித பயனும் இல்லை.

மக்கள் தொடர்ந்து அச்சுறுத்தப்பட்ட நிலையில் பயத்துடன்தான் வாழ்க்கையை கழிக்கின்றனர்.

மர்ம மனிதர்கள் வீடுகளிற்குள் புகுந்து மக்களை காயப்படுத்துவதும் அவர்களை மக்கள் துரத்திச்செல்வதும் உடனே இராணுவம் வந்து மர்ம நபர்களை பாதுகாத்து வழியனுப்பி வைப்பதும் துரத்திச் சென்ற மக்களை காட்டுமிராண்டித்தனமாக அடித்து காயப்படுத்துவதும் தொடர்ந்து இடம்பெற்றுக் கொண்டுதான் இருக்கின்றது.

இதனால் மக்கள் மத்தியில் பெரும் பதற்ற நிலை ஏற்பட்டுள்ளது. நிலைமையைக் கருத்தில் கொண்டு அரசு உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இல்லையேல் மக்களினால் தெரிவு செய்யப்பட்ட மக்கள் பிரதிநிதிகள் என்ற வகையில் மாதாந்தப் பொதுக் கூட்டத்தை முழுமையாக பகிஷ்கரிக்கப் போவதாக அனைத்து உறுப்பினர்களும் கையொப்பம் இட்டு ஜனாதிபதிக்கும், பாதுகாப்பு செயலருக்கும், அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவிற்கும் யாழ்.கட்டளைத் தளபதிக்கும் பிரதி பொலிஸ்மா அதிபருக்கும் கடிதம் அனுப்ப வேண்டும் என அவர் தெரிவித்தார். (ஸ்ரீ-6)

# மின்தடை பற்றிய அறிவித்தல்

(யாழ்ப்பாணம்)

ஏற்கெனவே அறிவிக்கப்பட்டதற்கமைய நாளை ஞாயிற்றுக்கிழமை கரந்தன், நீர்வேலி, சிறுப்பிட்டி, கோப்பாய், இருபாலை, கல்வியங்காடு, நல்லூர், அரியாலை, தென்மராட்சிப் பிரதேசம் ஆகிய இடங்களில் மின்தடை அமுல்படுத்தப்படமாட்டாது எனவும் உரும்பிராய், ஊரெழு பிரதேசத்தின் ஒரு பகுதி ஆகிய இடங்களிலேயே ஏற்கெனவே அறிவிக்கப்பட்டபடி மின்தடை அமுல்படுத்தப்படும் எனவும் யாழ்.பிரதேச மின் பொறியியலாளர் தெரிவித்துள்ளார். (ஸ்ரீ-12)

# ஆசிரிய ஆலோசகர் பதவிக்கு விண்ணப்பம்

தீவகக் கல்வி வலயத்தில் 08 பாடங்களிற்கு ஆசிரிய ஆலோசகர்களை நியமிப்பதற்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளதாக கல்விப் பணிப்பாளர் வி.இராதாகிருஷ்ணன் அறிவித்துள்ளார்.

ஆரம்பக் கல்வி, தமிழ், சங்கீதம், வர்த்தகம், முறைசாராக் கல்வி, விசேட கல்வி, வழிகாட்டலும் ஆலோசனையும் 2-ம் மொழிச் சிங்களம் ஆகிய எட்டுப் பாடங்களிற்கே ஆசிரிய ஆலோசகர்கள் நியமிக்கப்பட உள்ளனர்.மேற்படி பதவிக்கு ஆசிரியர் தரம் 1 அல்லது 2-11ஐச் சேர்ந்தவர்கள் விண்ணப்பிக்க முடியும்.

பட்டதாரி ஆசிரியர்களாயின் டிப்ளோமா நிறைவு செய்திருப்பதுடன் ஆசிரியராக 07 வருடங்கள் சேவையாற்றியிருத்தல் வேண்டும். மேலும் பயிற்றப்பட்ட ஆசிரியர்களாயின் ஆசிரியர் சேவையில் 10 வருடங்களைப் பூர்த்தி செய்திருத்தல் அவசியமாகும்.

இதற்கு விண்ணப்பிக்க விரும்பும் ஆசிரியர்கள் உரிய விண்ணப்ப படிவங்களை இந்த மாதம் 30-ம் திகதிக்கு முன்னர் வலயக் கல்விப்பணிப்பாளரூடாக மாகாணக் கல்வி அமைச்சிற்கு அனுப்பிவைக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர். தீவகக் கல்வி வலயத்தில் உள்ள ஆசிரியர்கள் விண்ணப்பிக்காதவிடத்து ஏனைய கல்வி வலயங்களிலிருந்து விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும்.

ஆசிரிய ஆலோசகர் பதவிக்கான விண்ணப்ப படிவத்தினை தீவகக்கல்வி வலயத்தில் பெற்றுக்கொள்ளலாம். (சு)

# கஞ்சா வியாபாரத்தில் ஈடுபட்டு வந்த இளைஞன் ஒருவன் கைது

திருகோணமலை பகுதியில் தொடர்ச்சியாக கஞ்சா வியாபாரத்தில் ஈடுபட்டு வந்த இளைஞர் ஒருவனை கைது செய்துள்ளதாக பொலிஸ் தலைமையக பொறுப்பதிகாரி சரித்த ஏ.ஜயசுந்தர தெரிவித்தார்.

கைது செய்யப்பட்டவர் வி.ஜெ.எச்.எம். ஹெட்டியாராச்சி (வயது-26) திருமலையைச் சேர்ந்தவராவர்.

தனது வீட்டில் கஞ்சாவை விற்பதற்காக பைக்கெற் செய்து கொண்டிருக்கும் வேளையில் கைது செய்துள்ளதாகவும் இவர் தொடர்ச்சியாக கஞ்சா வியாபாரத்தில் ஈடுபட்டு வருவதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

திருகோணமலை நீதிமன்ற நீதவான் சதீஸ்தரன் முன்னிலையில் நேற்று ஆஜர்படுத்தியவேளை 7 ஆயிரத்து 500 ரூபாய் தண்டப்பணமும் ஐந்து வருட ஒத்திவைக்கப்பட்ட 6 மாத சிறைத்தண்டனையும் விதித்து தீர்ப்பளிக்கப்பட்டது. (ஸ்ரீ-2)

# தேர்த்திருவிழா

(கரவெட்டி)

பருத்தித்துறை வியாபாரிமூலை இன்பர்சிட்டி சித்தி விநாயகர் ஆலய வருடாந்த மஹோற்சவம் கடந்த சனிக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி நடைபெற்று வருகின்றது.

இதில் நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 8 மணிக்கு தேர்த்திருவிழாவும் நாளை மறுதினம் திங்கட்கிழமை கடல் தீர்த்தத் திருவிழாவும் இடம்பெறவுள்ளது. (ஸ்ரீ-12-24)

# முறிப்பு தமிழ் வித்தி மீண்டும் ஆரம்பம்

முல்லைத்தீவு கல்வி வலயத்திலுள்ள முறிப்பு தமிழ் வித்தியாலயம் யுத்தம் முடிபுற்றதற்குப் பின்னர் மீண்டும் தமது கல்வி நடவடிக்கைகளை நேற்று ஆரம்பித்துள்ளது.

இப்பாடசாலை தரம் 1 தொடக்கம் 5 வரையான ஆரம்பப் பாடசாலையாகும்.

இதில் முல்லைத்தீவு கல்வி வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் ம.ராஜ்குமார், கரைதுறைப்பற்று கோட்டக் கல்விப் பணிப்பாளர் சேய் சோதிகாந்தன் ஆகியோர் கலந்து கொண்டு கல்வி நடவடிக்கைகளை ஆரம்பித்து வைத்துள்ளதாக பாடசாலையின் அதிபர் சி.சுதந்திரன் தெரிவித்துள்ளார். (ஸ்ரீ-12)

# புலமைப்பரிசில் பெறுபேறு இம்மாத இறுதியில் வெளிவரும்


தரம் ஐந்து புலமைப்பரிசில் பரீட்சை விடைத்தாளைத் திருத்தும் பணி பூர்த்தியடைந்துள்ளதாக பரீட்சைகள் ஆணையாளர் அநுர எதிரிசிங்க தெரிவித்தார்.

எதிர்வரும் 30ஆம் திகதிக்கு முன்னர் புலமைப்பரிசில் பரீட்சைப் பெறுபேறுகளை வெளியிட முடியுமென அவர் மேலும் கூறினார்.

கடந்த ஓகஸ்ட் மாதம் 30 ஆம் திகதி முதல் செப்டெம்பர் 4 ஆம் திகதி வரையில் வடக்கு-கிழக்கு உள்ளிட்ட 29 நிலையங்களில் விடைத்தாள்கள் திருத்தும் பணி மேற்கொள்ளப்பட்டதாகவும் அநுர எதிரிசிங்க கூறினார். (ஸ்ரீ-2)

# சுவாமி விவேகானந்தரின் அறிவுரைகள்

## தேசியக்கல்வி



என் அன்பிற்குகந்த மாணவச் செல்வங்களே! நான் என்ன செய்யப் போகிறேன்? என்னுடைய பணித் திட்டங்கள் என்ன என்பதை உங்களுக்கு விளக்குவதற்காக உங்கள் நடுவே வந்து அமரப் போகிறேன். என் பணித் திட்டங்களைக் கேட்பீர்களானால், ஏற்பீர்களானால் உங்களோடு நானும் தோளோடு தோள் இணைந்து செயலாற்றக் காத்திருக்கின்றேன்.

என் சொற்களைக் கேட்க மறுத்து ஒருவேளை இந்நாட்டை விட்டே என்னைத் துரத்தி அடித்தாலும் நான் என் தாய்த்திருநாட்டிற்கு திரும்பி வருவேன். திரும்பி வந்து நம்முடைய பழம்பெரும் நாடான தாய்நாடு எனும் கப்பலில் தற்போது தோன்றியுள்ள துளைகளின் பயனாக நாமெல்லாம் [illegible]துவாக மூழ்கிக் கொண்டிருக்கின்றோம் என்பதை உங்களிடம் எடுத்துரைப்பேன். மூழ்குவதாயின் நானும் உங்களோடு சேர்ந்து மூழ்குவேன். நாமெல்லாம் சேர்ந்தே மூழ்குவோம். ஆனால் மறந்து தாய்நாட்டைப் பழிக்கும் சாபக்கேடுகள் நம்மிடம் எழ வேண்டாம்.

# இரட்டைக்கோபுர நினைவு தினத்தில் அமெரிக்கா மீது தாக்குதல் நடத்த பயங்கரவாதிகள் சதித்திட்டம்

## உச்சக்கட்ட பாதுகாப்பு நடவடிக்கை அமுல்

(நியூயோர்க்)

இரட்டைக்கோபுர நினைவு தினம் நாளை அனுஷ்டிக்கப்படவிருக்கும் நிலையில் அமெரிக்காவில் கார்க்குண்டு மூலம் தாக்குதல் நடத்த பயங்கரவாதிகள் திட்டமிட்டிருப்பதாக வந்த தகவலை அமெரிக்க அதிகாரிகள் நேரிடையாக ஒத்துக் கொள்ள மறுத்தாலும் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது என்று மட்டும் சற்று நிமிர்ந்த தோரணையில் கூறி வருகின்றனர்.

10 ஆண்டு முடியும் இந்த தறுவாயில் நியூயோர்க் மற்றும் வோஷிங்டன் நகரம் பயங்கரவாதிகளின் தாக்குதல் திட்டத்தில் இடம்பெற்றிருக்கின்றதாம். ஒசாமா பின்லேடன் கொல்லப்பட்டதும் அவரது வீட்டில் இருந்த ஆவணங்களின் அடிப்படையில் இந்த தகவல் பெறப்பட்டாலும் தற்போதைய மிரட்டல் எங்கிருந்து வந்தது என்ற அதிகாரபூர்வமாக அதிகாரிகள் தெரிவிக்க மறுத்து விட்டனர்.

கடந்த 2001 ஆம் ஆண்டு செப்டெம்பர் 11 ஆம் திகதி நடந்த தாக்குதலில் அமெரிக்கா கடும் பாதிப்பையும் அதிர்ச்சியையும் சந்தித்தது. பலரது உயிரை காவு கொடுத்த சம்பவத்தை அடுத்து பயங்கரவாதிகளை ஒழிப்பதே அமெரிக்காவின் முதல் நோக்கம் என்ற வழியில் பின் தொடர்ந்து ஒசாமா பின்லேடன் வரை பழி தீர்த்துக் கொன்றாகிவிட்டது. இருப்பினும் அல்கொய்தா என்றாலே அமெரிக்கா சற்று அதிர்ச்சியடையத்தான் செய்கின்றது.


செப்.11 நினைவு நாளுக்கு இன்னும் ஒரு தினமே உள்ள நிலையில் இங்கு தாக்குதல் திட்டம் நடத்தவிருப்பதாக ஒரு தகவல் கிடைத்திருக்கின்றது.

இந்த தகவல் முக்கியத்துவம் வாய்ந்ததாகவும் நம்பத்தகுந்ததாகவும் இருந்தாலும் உறுதி செய்யப்படவில்லை என்று அதிகாரிகள் பூசி மெழுகுகின்றனர்.

இருப்பினும் நியூயோர்க், வோஷிங்டன் நகர் முழுவதும் பலத்த சோதனைக்குட்படுத்தப்பட்டு வருகிறது.

இந்த மர்ம தகவலில் அமெரிக்காவின் முக்கிய நகரான நியூயோர்க், வோஷிங்டன் பயங்கரவாதிகள் குறியாக இருக்கும். கார் மற்றும் டிரக்டர்களில் வெடி குண்டுகள் நிரப்பி பாலம் மற்றும் சுரங்க பாதைகளில் மோதச் செய்து பெரும் சேதத்தை ஏற்படுத்திட திட்டம். இதற்கென ஆப்கானில் இருந்து 2 அல்கொய்தா பயங்கரவாதிகளும் அமெரிக்காவை சேர்ந்த ஒருவரும் ஆக மொத்தம் 3 பேர் சேர்ந்து இந்த சதியை நிறைவேற்ற புறப்பட்டு இருப்பதாகவும் இந்த பீதி தகவல் தெரிவிக்கின்றது.

இந்த மிரட்டல் குறித்து வெள்ளை மாளிகையில் அதிகாரிகளுடன் ஜனாதிபதி ஒபாமா ஆலோசித்தார். ஆனால் வழக்கமாக நினைவு தினத்தில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள பாதுகாப்பு குறித்து விவா தித்ததாக அதிகாரி ஒருவர் கூறினார்.



இது குறித்து நியூயோர்க் மேயர் மைக்கேல் புளும்பெர்க் கூறுகையில்,

உறுதி செய்யப்படாத தகவல் என்று கூறினார். ஆனாலும் உச்சக்கட்ட பாதுகாப்பு நிலையை அறிவித்துள்ளார். எதற்கான பாதுகாப்பு என்று சொல்ல முடியாது. குறிப்பாக ஆண்டுதோறும் வரும் நினைவு தினத்தில் சோதனை, பாதுகாப்பு பணிகள் நடப்பது இயல்பான மாற்றம்தான். சிலவற்றை சொல்லமுடியும். சிலவற்றை சொல்ல முடியாது என்றார். பீதி குறித்து புலனாய்வு அதிகாரிகள் ஒருபுறம் விசாரித்த வண்ணம் உள்ளனர். (ஸ்ரீ)

# லிபியாவில் இடம்பெற்ற மோதலில் 30 ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் பலி

## இடைக்கால அரசு அறிவிப்பு

(டிரிபோலி)

லிபியாவில் கடந்த ஆறு மாதத்தில் நடந்த சண்டையில் 30 ஆயிரத்துக்கும் அதிகமானவர்கள் கொல்லப்பட்டுள்ளதாக இடைக்கால அரசு தெரிவித்துள்ளது.

லிபியாவில் அதன் தலைவர் கடாபிக்கு எதிராக அதிருப்தியாளர்கள் கிளர்ச்சியில் ஈடுபட்டனர். இவர்களை ஒடுக்க கடாபியின் படைகள் விமான தாக்குதல் நடத்தியது.

பதிலுக்கு நேட்டோ படைகள் தாக்குதல் நடத்தின. இந்த சண்டையில் 30 ஆயிரத்துக்கும் அதிகமானவர்கள் பலியாகியுள்ளதாகவும் 50 ஆயிரம் பேர் காயம் அடைந்துள்ளதாகவும் அந்நாட்டின் இடைக்கால சுகாதார அமைச்சர் ராஜி பர்கத் தெரிவித்துள்ளார்.

இது குறித்து பர்கத் மேலும் குறிப்பிடுகையில்,

மருத்துவமனை மற்றும் மசூதி நிர்வாகிகள் கொடுத்த தகவலின் பேரில் 30 ஆயிரம் பேர் கொல்லப்பட்டுள்ளதாக தெரிகின்றது. இன்னும் 4 ஆயிரம் பேரை காணவில்லை.

சிறையில் இருந்த பலர் கொல்லப்பட்டுள்ளனர். கடாபியின் இராணுவம் பலரை கொன்று புதைத்துள்ளது. புதைக்கப்பட்ட இடங்களை மீண்டும் தோண்டி கொல்லப்பட்டவர்களை அடையாளம் காணும் பணி இடம் பெறுகின்றது.

எனவே இந்த ஆறு மாதத்தில் பலியானவர்களின் எண்ணிக்கை மேலும் அதிகரிக்கக்கூடும். கடாபி இராணுவ வீரர்களே 9 ஆயிரம் பேர் வரை பலியாகியுள்ளனர். அதிருப்தியாளர்கள் தரப்பில் 2 ஆயிரம் பேர் கொல்லப்பட்டுள்ளனர். இவர்களில் 900 பேர் கை, கால்களை இழந்துள்ளனர் என்றார். (ஸ்ரீ-4)




லிபியாவில் கடாபிக்கு எதிராக நடைபெற்ற போராட்டம் முடிவுக்கு வந்துள்ளதால் நைஜீரியாவில் தஞ்சம் புகுந்த லிபிய மக்கள் மீண்டும் நாடு திரும்புகின்றனர்.




# பயங்கரவாதிகளுக்கு சாதகமான சூழல் அமெரிக்காவில் இல்லை

## அமெரிக்க பாதுகாப்பு ஆலோசகர் தெரிவிப்பு



(வோஷிங்டன்)

பயங்கரவாதிகளுக்கு ஏற்ற சூழ்நிலை அமெரிக்காவில் தற்போது இல்லை என அமெரிக்க பாதுகாப்பு ஆலோசகர் தெரிவித்துள்ளார். அமெரிக்காவின் நியூயோர்க் நகரில் இரட்டைக் கோபுரம் தகர்க்கப்பட்ட 10 ஆம் ஆண்டு நினைவு தினம் நாளை அனுஷ்டிக்கப்படவுள்ளது.

இது குறித்து அமெரிக்க தேசிய பாதுகாப்பு துணை ஆலோசகர் ஜான் பெர்னான் தெரிவிக்கையில்,

அல்கொய்தா தலைவர் ஒசாமா பின்லேடன் சுட்டுக் கொல்லப்பட்ட போது அவர் தங்கியிருந்த வீட்டிலிருந்து சில ஆவணங்கள் கண்டெடுக்கப்பட்டன.

இரட்டைக் கோபுரம் தகர்க்கப்பட்ட 10 ஆம் ஆண்டு நினைவு தினத்தன்று மீண்டும் ஒரு தாக்குதலை நடத்த அவர் திட்டமிட்டது அந்த ஆவணங்கள் மூலம் தெரிய வந்துள்ளது.

மீண்டும் அவர்கள் தாக்குதல் நடத்துவார்கள் என்பது எங்களுக்கும் தெரியும். அவர்கள் இல்லாவிட்டாலும் மற்ற பயங்கரவாத அமைப்புகள் அமெரிக்கா மீது தாக்குதலை நடத்தலாம் என்பதால் பாதுகாப்புக்கு முதலிடம் கொடுத்து வருகின்றோம். இதற்காக பொலிஸாரும் புலனாய்வுத்துறையினரும் அதிகபட்ச கண்காணிப்புடன் செயற்படுகின்றனர்.

இதனால் பயங்கரவாதிகளுக்கு ஏற்ற சூழ்நிலை தற்போது அமெரிக்காவில் இல்லை. பயங்கரவாத நடவடிக்கை அமெரிக்காவில் மட்டுமல்ல உலகின் எப்பகுதியிலும் இருக்கக் கூடாது என்பதால் இது தொடர்பாக மற்ற நாடுகளுடனும் நாங்கள் ஒப்பந்தம் மேற்கொண்டுள்ளோம். இவ்வாறு பெர்னான் கூறினார். (ஸ்ரீ-4)

# சிரியாவில் இராணுவத் தாக்குதலில் 23 பேர் பலி

(அம்மான்)

சிரியாவில் ஆட்சியாளர்களுக்கு எதிராக 6 மாதங்களாக புரட்சி நடந்து வருகின்றது. புரட்சிக்காரர்களை ஒடுக்குவதற்காக இராணுவம் மூலம் தாக்குதல் நடத்தப்பட்டு வருகிறது.

ஹாம்ஸ் நகரில் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள் மீது இராணுவம் துப்பாக்கியால் சுட்டது.

இராணுவம் ஹெலிகொப்டர்கள் மூலம் வானத்தில் வட்டமிட்டபடி குண்டு வீசி தாக்கினார்கள். இராணுவ வீரர்கள் வீட்டு கூரைகளில் நின்றபடி ஆர்ப்பாட்டக்காரர்களை நோக்கி துப்பாக்கியால் சுட்டனர். இந்த தாக்குதலில் 23 பேர் பலியானார்கள்.

இதேபோன்ற தாக்குதல் மற்ற நகரங்களிலும் நடத்தப்பட்டு உள்ளன. இந்த நகரங்களிலும் உயிரிழப்பு ஏற்பட்டு உள்ளது. (ஸ்ரீ-4)

# ஜேர்மனியில் குண்டு வைப்பதற்கு சதித்திட்டம் தீட்டிய இருவர் கைது

(பெர்லின்)

ஜேர்மனியில் குண்டு வைக்க சதி திட்டம் தீட்டியதாக இரண்டு பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். ஜேர்மனியின் பெர்லின் நகரில் உள்ள மசூதியில் லெபனான் நாட்டை சேர்ந்தவரும் பாலஸ்தீனத்தைச் சேர்ந்தவரும் அடிக்கடி சென்று வந்தனர்.

இவர்கள் ஜேர்மன் குடியுரிமை பெற்றவர்கள். சமீபத்தில் இவர்கள் இரசாயன பொருட்கள் அதிகளவில் வாங்கியுள்ளனர்.

இதனால் சந்தேகமடைந்த கடைக்காரர் இவர்கள் குறித்து பொலிஸுக்கு தகவல் தெரிவித்துள்ளார்.

இவர்களை கண்காணித்த பொலிஸார் நேற்று முன்தினம் இருவரையும் கைது செய்தனர்.

அமெரிக்க இரட்டை கோபுர தாக்குதலின் 10 ஆம் ஆண்டு நினைவு தினத்தையொட்டி இவர்கள் பெர்லின் நகரில் குண்டு வெடிப்பு சம்பவங்களை நடத்த திட்டமிட்டதாக தெரிய வந்துள்ளது. (ஸ்ரீ-4)

# மார்ஷ்–ஹசி இணைபிரியா ஆட்டம் ஆஸி அணி வலுவான முன்னிலை

(பல்லேகல)

ஷோன் மார்ஷ் – மைக்கெல் ஹசியின் இணைபிரியா ஆட்டத்தின் மூலம் அவுஸ்திரேலிய அணி முதலாவது இன்னிங்ஸில் 3 விக்கெட்டுக்களை மாத்திரமிழந்து 264 ஓட்டங்களை எடுத்து முன்னிலையிலுள்ளது.

இலங்கைக்கு சுற்றுப் பயணம் வந்துள்ள அவுஸ்திரேலிய அணி 3 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் விளையாடி வருகிறது. இதில் முதலாவது டெஸ்டில் அவுஸ்திரேலிய அணி வெற்றி பெற்று தொடரில் 1:0 என்ற கணக்கில் முன்னிலை பெற்றது. இந்நிலையில் இரண்டாவது டெஸ்ட் நேற்று முன்தினம் பல்லேகல விளையாட்டரங்கில் ஆரம்பமானது.

இப்போட்டியில் நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்று முதலில் துடுப்பெடுத்தாடிய இலங்கை அணி முதலாவது இன்னிங்ஸில் 174 ஓட்டங்களை எடுத்து சகல விக்கெட்டுக்களையும் இழந்தது.

இதில் அஞ்சலோ மத்யூஸ் 58, குமார் சங்கக்கார 48, பிரசன்ன ஜெயவர்த்தன 18, திலான் சமரவீர 17 ஓட்டங்களை எடுத்தனர்.

பந்துவீச்சில் ரியான் ஹரீஸ் 3 விக்கெட்டுக்களையும் ஹோப்லாண்ட், ஜோன்சன், லியோன் தலா 2 விக்கெட்டுக்களையும் மைக்கெல் ஹசி ,ஒரு விக்கெட்டையும் வீழ்த்தினர்.

தொடர்ந்து முதலாவது இன்னி ல் துடுப்பெடுத்தாடிய அவுஸ்திரேலிய அணி நேற்று முன்தினம் முதல்நாள் ஆட்ட நேர முடிவில் விக்கெட் இழப்பின்றி 60 ஓட்டங்களை எடுத்தது.

இந்நிலையில் இரண்டாம் நாளான நேற்று தொடர்ந்து துடுப்பெடுத்தாடிய அவுஸ்திரேலிய அணி ஆரம்பத்திலேயே முதலாவது விக்கெட்டை இழந்தது. ஆரம்ப துடுப்பாட்ட வீரர் ஷேன் வோட்ஷன் 57 பந்துகளில் (6 பவுண்டரிகள் உட்பட) 36 ஓட்டங்களுடன் லக்மலின் பந்தில் ஆட்டமிழந்தார்.

அடுத்து ஹேக்ஸூடன் இணைந்த அறிமுக வீரர் மார்ஷ் நிதானமாக ஆடி கை கொடுத்தார். இதில் ஹக்ஸ் 36 ஓட்டங்களுடன் ரான் டீவின் சுழலில் ஆட்டமிழந் தார்.

தொடர்ந்து களமிறங்கிய அணித் தலைவர் மைக்கெல் கிளார்க் 13 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்க அவுஸ்திரேலிய அணி 43.4 ஓவர்களில் 116 ஓட்டங்களை எடுத்து 3 –வது விக்கெட்டை இழந்தது.



எனினும் 4வது விக்கெட்டுக்காக மார்ஷுடன் இணைந்த மைக்கெல் ஹசி பொறுப்பான ஆட்டத்தை வழங்கி நம்பிக்கை அளித்தார். அதில் அறிமுக வீரர் ஷோன் மார்ஷ் 133 பந்துகளில் தனது முதலாவது அரைச் சதத்தை பூர்த்தி செய்து அசத்த அவுஸ்திரேலிய அணி 200 ஓட்டங்களை தாண்டியது. மறுமுனையில மைக்கெல் ஹசியும் 109 பந்துகளில் அரைச் சதம் கடந் து கைகொடுத்தார்.

இந்த ஜோடியின் இணைபிரியா ஆட்டம் வலுச்சேர்க்க அவுஸ்திரேலிய அணி நேற்றைய இரண்டாம் நாள் ஆட்ட நிறைவில் அதன் முதலாவது இன்னிங்ஸில் 3 விக்கெட்டுக்களை இழந்து 264 ஓட்டங்களை எடுத்தது.

இதில் தனது முதலாவது டெஸ்ட் போட்டியில் விளையாடும் ஷோன் மார்ஷ் 87 ஓட்டங்களுடனும் மைக்கல் ஹசி 76 ஓட்டங்களுடனும் ஆட்டமிழக்காமல் களத்தில் உள்ளனர். பந்து வீச்சில் வெல கெதர, லக்மல், ராண்டீவ் ஆகியோர் தலா ஒரு விக்கெட்டை சாய்த்தனர்.

இப்போட்டியின் 3–ம்நாள் ஆட்டம் இன்றாகும்.

இந்நிலையில் அவுஸ்திரேலிய அணி முதலாவது இன்னிங்ஸில் 7 விக்கெட்டுக்கள் கைவசமுள்ள நிலையில் 90 ஓட்டங்கள் வித்தியாசத்தில் முன்னிலையிலுள்ளது.

# யு.எஸ்.ஓபன் டென்னிஸ் தொடர்; பெடரர், வோஸ்னியாக்கி அரையிறுதியில்

(நியூயோர்க்)

யு.எஸ்.ஓபன் டென்னிஸ் தொடரின் ஒற்றையர் பிரிவு அரையிறுதிக்கு சுவிட்சர்லாந்தின் ரோஜர் பெடரர், டென்மார்க்கின் கரோலின் வோஸ்னியாக்கி உள்ளிட்ட முன்னணி நட்சத்திரங்கள் முன்னேறியுள்ளனர்.

அமெரிக்காவின் நியூயோர்க் நகரில், கிராண்ட்ஸ்லாம் தொடரில் ஒன்றான யு.எஸ். ஓபன் டென்னிஸ் தொடர் நடக்கிறது. இதன் ஆண்கள் ஒற்றையர் காலிறுதியில் சுவிட்சர்லாந்தின் ரோஜர் பெடரர், பிரான்சின் ஜோ–வில்பிரிட் டோங்காவை சந்தித்தார். இதில் அபாரமாக ஆடிய பெடரர் 6:4, 6:3, 6:3 என்ற நேர் செட்டில் வெற்றி பெற்று அரையிறுதிக்கு முன்னேறினார்.

மற்றொரு காலிறுதியில் செர்பியாவின் நோவக் டோகோவிச், சக நாட்டைச் சேர்ந்த ஜான்கோ டிப்சரிவிச்சை சந்தித்தார். டோகோவிச் 7:6, 6:7, 6:0, 3:0 என முன்னிலை வகித்திருந்தபோது டிப்சரிவிச் காயம் காரணமாக விலகுவதாக தெிவித்தார். இதனால் டோகோவிச் வெற்றி பெற்றதாக அறிவிக்கப்பட்டார். அரையிறுதியில் பெடரர் – டோகோவிச் மோதுகின்றனர்.

**காலிறுதியில் நடால்**

ஆண்கள் ஒற்றையர் நான்காவது சுற்றில் ஸ்பெயினின் ரபெல் நடால் லக்சம்பர்க்கின் கில்லஸ் முல்லரை சந்தித்தார். இதில் நடால் 7:6, 6:1, 6:2 என்ற நேர் செட்டில் வெற்றி பெற்று காலிறுதிக்கு முன்னேறினார்.

மற்ற நான்காவது சுற்றுப் போட்டிகளில் இங்கிலாந்தின் ஆன்டி முர்ரே அமெரிக்காவின் ஆன்டிரோடிக், ஜான்இஸ்னர் வெற்றி பெற்று காலிறுதிக்கு தகுதி பெற்றனர். காலிறுதியில் நடால் – ரோடிக், முர்ரே – இஸ்னர் மோதுகின்றனர்

**அரையிறுதியில் செரினா**

பெண்கள் ஒற்றையர் பிரிவு காலிறுதி யில் அமெரிக்காவின் செரினா வில்லியம்ஸ், ரஷ்யாவின அனஸ்டாசியா பவுலிசென்



கோவாவை சந்தித்தார். இதில் அசத்தலாக ஆடிய செரினா 7:5, 6:1 என்ற நேர் செட்டில் வெற்றி பெற்று அரையிறுதிக்கு முன்னேறினார்.

மற்றொரு காலிறுதியில் உலகின் நம்பர் –1 வீராங்கனையான டென்மார்க்கின் கரோலின் வோஸ்னியாக்கி, ஜேர்மனியின் ஆன்ட்ரியா பெட்கோவிச்சை சந்தித்தார். இதில் வோஸ்னியாக்கி 6:1 7:6 என்ற நேர் செட்டில் வெற்றி பெற்று அரையிறுதிக்கு தகுதி பெற்றார்.

மற்ற காலிறுதிப் போட்டிகளில் அவுஸ்திரேலியாவின் சமந்தா ஸ்டோசுர் , ஜேர்மனியின் கெர்பர் வெற்றி பெற்று அரையிறு திக்குள் நுழைந்தனர் .

அரையிறுதியில் செரினா – வோஸ்னியாக்கி ஸ்டோசுர் – கெர்பர் மோதுகின்றனர்

# வெற்றி முதல்வன் பொன்டிங்

சர்வதேச கிரிக்கெட் அரங்கில் அதிக வெற்றிகளை ருசித்த பெருமை அவுஸ்திரேலிய முன்னாள் அணித்தலைவர் ரிக்கி பொன்டிங்கை சேரும். இவர் டெஸ்ட் மற்றும் ஒருநாள் போட்டிகளில் அதிக வெற்றிகள் கண்ட வீரர்கள் வரிசையில் முதலிடம் வகிக்கிறார்.

இலங்கைக்கு சுற்றுப்பயணம் வந்துள்ள அவுஸ்திரேலிய அணி 3 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் பங்கேற்கிறது. சமீபத்தில் காலியில் நடந்த முதல் டெஸ்டில் அவுஸ்திரேலிய அணி 125 ஓட்டங்கள் வித்தியாசத்தில் அசத்தல் வெற்றிபெற்றது.

இது ரிக்கி பொன்டிங் பெற்ற 100ஆவது டெஸ்ட் வெற்றி. இவர் இதுவரை 153 டெஸ்டில் (12ஆயிரத்து 411 ஓட்டங்கள், 39 சதம், 56 அரைச்சதம்) விளையாடியுள்ளார்.

இதில் 100 போட்டிகளில் அவுஸ்திரேலிய அணி வெற்றிபெற்றது. இதன் மூலம் டெஸ்ட் அரங்கில் அதிக வெற்றிகளைக் கண்ட வீரர்கள் வரிசையில் பொன்டிங் முன்னிலை வகிக்கிறார். இந்த 100 வெற்றியில் 48இல் அணித் தலைவராக செயல்பட்டுள்ளார்.

இதில் 28 சதம், 36 அரைச்சதம் உட்பட 8 ஆயிரத்து 375 ஓட்டங்கள் எடுத்துள்ளார். தவிர இத்தரவரிசையில் அவுஸ்திரேலிய வீரர்



களின் ஆதிக்கம் மேலோங்கியுள்ளது. முதல் பத்து வரிசையில் 8 அவுஸ்திரேலிய வீரர்கள் இடம்பெற்றுள்ளனர்.

இந்தியா சார்பில் நட்சத்திரத்துடுப்பாட்ட வீரர் சச்சின் அதிகபட்சமாக 61 வெற்றியை ருசித்துள்ளார். இவர் 13–வது இடத்தில் உள்ளார்.

அதிக டெஸ்ட் வெற்றி கண்டவர்கள் பட்டியலில் முதல் 5 வீரர்கள்.

| வீரர் | போட்டி | வெற்றி |
|---|---|---|
| பொன்டிங் (ஆஸி) | 153 | 100 |
| வோர்ன் (ஆஸி) | 145 | 92 |
| ஸ்ரீவோ (ஆஸி) | 168 | 86 |
| மெக்ராத் (ஆஸி) | 124 | 84 |
| கில்கிறிஸ்ட் (ஆஸி) | 96 | 73 |


**ஒருநாள் முதல்வன்**

ஒருநாள் போட்டி அரங்கிலும் அதிக வெற்றிகள் கண்ட வீரர்கள் வரிசையில் பொன்டிங் முன்னிலை வகிக்கிறார். இவர் இதுவரை 367 ஒருநாள் போட்டியில் (13 ஆயிரத்து 602 ஓட்டங்கள், 30 சதம், 81 அரைச்சதம்) விளையாடியுள்ளார்.

இதில் 257 போட்டியில் அவுஸ்திரேலிய அணி வெற்றிபெற்றது. இவரைத் தொடர்ந்து இலங்கையின் ஜெயசூரிய (233 வெற்றி, 445 போட்டி) இந்தியாவின் சச்சின் டெண்டுல்கர் (230 வெற்றி, 453 போட்டி) பாகிஸ்தானின் இன்சமாம் (215 வெற்றி, 378 போட்டி) அவுஸ்திரேலியாவின் கில்கிறிஸ்ட் (202 வெற்றி, 287 போட்டி) இலங்கையின் முரளிதரன் (202 வெற்றி, 350 போட்டி) ஆகியோர் முதல் 5 வரிசையில் உள்ளனர்.

மஹாராஜா Food நிறுவனத்தின் மற்றும் ஒரு சேவை
G.T.V.யும் Aramex இணைந்து நடத்தும் உள் நாட்டு கடிதங்கள் பொதிகள் விநியோகம் செய்தல் கொழும்பு /யாழ்ப்பாணம் ஆகிய இடங்களுக்கு ஒப்படைத்த அடுத்த தினமே முகவரியில் ஒப்படைக்கப்படும்.
MAHARAJA FOOD PRODUCT
கொழும்புக்கான கட்டணம் ரூபா 200/= மட்டுமே
மேலதிக விபரங்களுக்கு:-
கொழும்பு
# 18/3 Dr.E.A coory Mawatha, Wellawathte.
T.P:-0112360926,0112259849
யாழ்ப்பாணம் aramex
No.225, Kasturiyar Road, Jaffna T.P.: 021 222 4338
No.272, K.K.S. Road, Jaffna. T.P.: 021 222 4825

உல்லாசம் உங்கள் கண்முன்னே...
TILKO JAFFNA CITY HOTEL
No.70/6, K.K.S Road, Jaffna.
Tel: 021 2225969
web:www.cityhoteljaffna.com
e-mail: info@cityhoteljaffna.com



## பளு தூக்கலில் யாழ்.மாணவன் மூன்றாமிடம்

(யாழ்ப்பாணம்)

தேசிய மட்ட பாடசாலைகளுக்கிடையலான பெரு விளையாட்டுப் போட்டிகளில் நேற்று நடைபெற்ற 20 வயது கீழ் பிரிவு பளு தூக்கும் போட்டியில் யாழ். மத்திய கல்லூரி மாணவன் ஏ. விதன் மூன்றாமிடத்தைப் பிடித்து வெள்ளிப்பதக்கம் பெற்றார்.

மேற்படி போட்டியில் 80 முதல் 85 கிலோ கிராம் எடை பளு தூக்கும் இப்பிரிவில் ஏ. விதன் 170 கிலோகிராம் வரை பளுதூக்கி மூன்றாமிடத்தைப் பிடித்தமை குறிப்பிடத்தக்கது. (ச-5)

## புத்தூரில் ஆணின் சடலம் மீட்பு

(யாழ்ப்பாணம்)

புத்தூர் மீசாலை வீதியில் உருக்குலைந்த ஆணின் சடலம் ஒன்று மீட்கப்பட்டுள்ளது.

மிகவும் உருக்குலைந்த நிலையில் காணப்பட்ட இச்சடலத்தை அச்சுவேலி பொலிஸார் மீட்டு யாழ். போதனா வைத்தியசாலையில் ஒப்படைத்துள்ளனர்.

ஆள்நடமாட்டமற்ற இடத்திலிருந்து வந்த துர்நாற்றத்தையடுத்து பொது மக்கள் வழங்கிய தகவலையடுத்தே பொலிஸார் சடலத்தை மீட்டுள்ளனர்.

சடலம் உருக்குலைந்த நிலையில் காணப்படுவதால் அடையாளம் காணப்படவில்லை. (ச-5)

## 40 ஆயிரம்...

நீதிமன்றில் இந்த அடிப்படை உரிமை மீறல் மனுதாக்கல் செய்யப்பட்டுள்ளது.

சங்கானை, சாவகச்சேரி, கரவெட்டி, கோப்பாய் மற்றும் காரைநகர் ஆகிய பிரதேசங்களில் அமைந்துள்ள உயர்பாதுகாப்பு வலயங்களிலிருந்து வெளியேற்றப்பட்ட 11 ஆயிரத்து 648 குடும்பங்களைச் சேர்ந்த 42 ஆயிரத்து 505 பேர் இன்னமும் மீள்குடியேற்றப்படவில்லை என சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

தெல்லிப்பழையில் 6 ஆயிரத்து 928 குடும்பங்களை மீள்குடியேற்ற வேண்டியுள்ளதாக மாவட்ட செயலாளர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை 35 ஆயிரத்து 968 குடும்பங்களைச் சேர்ந்த ஒரு இலட்சத்து 11 ஆயிரத்து 199 பேர் அண்மையில் உயர்பாதுகாப்பு வலயங்களில் மீள்குடியேற்றப்பட்டுள்ளதாக யாழ்ப்பாண அரசாங்க அதிபர் இமெல்டா சுகுமார் கடந்த மாதம் உச்ச நீதிமன்றில் தெரிவித்திருந்தார். (எ-1)

## இலங்கைக்கு எதிரான...

ஜெனிவாவில் ஆரம்பமாகவுள்ள ஐ.நா. மனித உரிமைகள் பேரவைக் கூட்டத் தொடரின்போது இலங்கையின் நல்லிணக்க ஆணைக்குழுவிற்கு எதிரான விசேட அறிக்கையொன்றைத் தாக்கல் செய்வதற்கு சர்வதேச மன்னிப்புச்சபை திட்டமிட்டுள்ளது.

இந்தக் கூட்டத்தொடரில் கலந்து கொள்ளும் இலங்கை அரசு மனித உரிமை மீறல்கள் சம்பந்தமான சர்வதேசத்தின் குற்றச்சாட்டுகளை சமாளிப்பதற்கு நல்லிணக்க ஆணைக்குழுவைப் பயன்படுத்தலாம் எனக் கருதப்படுவதால் மன்னிப்புச்சபை இந்த விசேட அறிக்கையைத் தயார் செய்து வருகிறது என இராஜதந்திர வட்டாரங்கள் தெரிவித்தன.

இறுதிப்போரில் நடைபெற்ற மனித உரிமை மீறல் குற்றச்சாட்டுகள் குறித்து நல்லிணக்க ஆணைக்குழுவின் விசாரணைகளில் ஆராயப்படவில்லையென்று குறிப்பிட்டு தனது அறிக்கையைத் தயார் செய்து வரும் மன்னிப்புச்சபை இது தொடர்பில் இலங்கையின் மனித உரிமை ஆர்வலர்களிடம் கருத்தறியும் செயற்பாடுகளிலும் ஈடுபட்டது என அந்த வட்டாரங்கள் தெரிவித்தன.

இதேவேளை ஐ.நா. மனித உரிமைகள் சபைக்கூட்டத்தில் அரசுக்கு எதிரான பிரசாரங்களை முறியடிப்பதற்கான ஆதரவைத் திரட்டும் பேச்சுக்களில் இலங்கைத் தரப்பினர் ஈடுபட்டு வருகின்றனர் எனத் தெரிவிக்கப்படுகிறது. (ச-5)

## ஏழாலை...

போதும் மர்ம மனிதனை பிடிக்க முடியவில்லை.

இதேவேளை ஏழாலை மேற்குப் பகுதியில் சந்தேகத்திற்கிடமான முறையில் நடமாடிய சிலரை பொதுமக்கள் துரத்திச்சென்ற சம்பவங்களும் நேற்றிரவு இடம்பெற்றுள்ளன. (ச-5)

## அரசு சார்பானவனாக...

எனது சமூகக் கடமையாகும் இல்லாவிடின் இந்த விடயங்கள் மக்களின் சகஜ வாழ்விற்கு குந்தகத்தை ஏற்படுத்தும்.

எனவேதான் நான் மலையகத்தில் அமர்த்தப்பட்டுள்ள இராணுவம் மற்றும் அதிரடிப் படையினரை அப்புறப்படுத்துமாறு அரசை வற்புறுத்துகிறேன்.

இந்த நாட்டின் சர்வதிகார அடக்குமுறை ஆட்சியானது தமிழர்களுக்கு காலத்தால் மாறாத துன்ப வடுவை ஏற்படுத்தியதை எவராலும் மறுக்கமுடியாது.

இது தமிழர்களின் வாழ்வியல் வரலாறு கூறும் உண்மையாகும். அண்மையில் உருவான மர்ம மனிதன் விவகாரம் ஒரு பூதாகரமான விடயமாகும். ஆனால் இதன் உள் நோக்கம், பின்புலம் என்ன என்பதை புரிந்துகொள்ள முடியவில்லை.

இதன் பின்னணியில் மலையகத்தில் இன்று இராணுவத்தினரும் அதிரடிப்படையினரும் கடமையில் அமர்த்தப்பட்டுள்ளமை வியப்பும் வேடிக்கையும் நிறைந்த செயலாகும்.

மலையக வரலாற்றில் அவ்வப்போது நடைபெற்ற தொழிலாளர் போராட்டங்கள், அசம்பாவிதங்கள் ஆகியவற்றின் பின்னணியிலிருந்து செயற்பட்டு மக்களுக்கு துன்ப வடுவை ஏற்படுத்தியதும் இராணுவமே. வடக்குக் கிழக்கில் பல்வேறு வகையான அவலத்தை ஏற்படுத்தியதும் இராணுவத்தினரே.

எனவே மலையகத்தில் நிலவும் அமைதி, சமாதானம், சகஜ வாழ்விற்கு குந்தகத்தை ஏற்படுத்தி இங்கும் மக்கள் மீது அடக்குமுறையை திணிப்பதற்காக அமர்த்தப்பட்டுள்ள படையினரை மலையகத்திலிருந்து அகற்றுவது மலையக தலைமைகளின் தார்மீகக் கடமையாகும் என்றார். (ச-5)

## கேணல் கடாபிக்கு...

வெள்ளிக்கிழமை இன்டர் போலினால் வெளியிடப்பட்ட அறிக்கையிலேயே இந்த செவ்வறிக்கை பற்றி கூறப்பட்டுள்ளது. இந்த அறிக்கை தொடர்பாக சர்வதேச பொலிஸின் பொதுச்செயலாளர் றொனால்ட் கே.நொபிள் கருத்துத் தெரிவிக்கையில்,

இந்த செவ்வறிக்கையானது எமது 188 உறுப்பு நாடுகளின் பிரதிநிதிகளுக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

பொது மக்களுக்கு தீங்கு விளைவிக்கும் வகையில் லிபிய அதிபர் உட்பட அவரது சகாக்கள் ஈடுபட்டு வருகின்றனர். இது சட்டவிரோதமானதாகும். ஆகையினாலேயே இந்த செவ்வறிக்கை வெளியிடப்பட்டுள்ளது என்று குறிப்பிட்டுள்ளார்.

சர்வதேச பொலிஸாரினால் தேடப்படும் மிக முக்கிய நபர்களான கேணல் கடாபி உட்பட மேலும் இருவரும் எக்காரணம் கொண்டும் சர்வதேச எல்லைகளை தாண்ட முடியாது என்றும் சர்வதேச பொலிஸாரின் பொதுச் செயலாளர் மேலும் குறிப்பிட்டுள்ளார். (ச-5)

தரம் 4 வெற்றிக் கனி (நாவலர் வெளியீடு)
புலமைப் பரிசில் - 2012
ஆரம்பம் 11-09-2011 ஞாயிறு
பரீட்சை நேரங்கள்
காலை மாலை
8.00am 2.00pm
9.00am 3.00pm
10.00am 4.00pm
புதிய நாவலர் கல்வி நிலையம் ஆனைப்பந்தி யாழ்ப்பாணம்.

## அமைச்சர் பசில்...

பசில் யாழ்.இந்துக் கல்லூரியில் இன்று தொடங்கவுள்ள குடிசை கைத்தொழில் கண்காட்சியை ஆரம்பித்து வைக்கவுள்ளார். அத்தோடு யாழ்.மாவட்ட விவசாய பயிற்சி நிலையத்தில் நடை பெற்று வரும் விவசாயக் கண்காட்சியை பார்வையிடவுள்ளார்.

திருநெல்வேலியில் இயற்கையுடன் இணைந்த நிலைபேறான விவசாயத்தை நோக்கி எனும் தொனிப்பொருளில் கடந்த 5 ஆம் திகதி இந்த விவசாயக் கண்காட்சியை பாரம்பரிய கைத்தொழில் மற்றும் சிறு தொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் கே.என்.டக்ளஸ் தேவானந்தா ஆரம்பித்துவைத்தார்.

பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் வழிகாட்டலில் பாரம்பரிய கைத்தொழில் மற்றும் சிறு தொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சின் அறிவுறுத்தலுக்கமைய வடமாகாண ஆளுநரின் பணிப்பிற்கமைய இந்தக் கண்காட்சி ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. இந்தக் கண்காட்சியானது 5 நாட்கள் தொடர்ந்து நடைபெற்றது. இதன் இறுதிநாள் நிகழ்வில் கலந்துகொள்வதற்காகவும் அமைச்சர் பசில் இன்று யாழ்ப்பாணம் வருகை தரவுள்ளார். (எ-6)

## பொன்சேகாவின் கூற்...

வெள்ளைக்கொடி விவகாரம் இனங்களுக்கு இடையில் முரண்பாடுகளை ஏற்படுத்த வழிவகுக்கும் என தெரிவித்த அரச பிரதி வழக்கறிஞர், அதன் மூலம் சரத் பொன்சேகா அவசரகாலச் சட்டத்தின் கீழும், தண்டனை கோவைச் சட்டத்தின் கீழும் தவறிழைத்துள்ளதாக சுட்டிக்காட்டினார்.

இது தொடர்பில் சரத் பொன்சேகா மீது தொடரப்பட்டுள்ள வழக்கின் முறைப்பாட்டில் அவருடைய குற்றத்தை உறுதி செய்ய முடிவதாக புவனெகா அலுவிஹாரே குறிப்பிட்டுள்ளார்.

இந்நிலையில் வெள்ளைக் கொடி விவகார வழக்கு மீதான மேலதிக விசாரணைகள் எதிர்வரும் ஒக்டோபர் மாதம் 6ஆம் திகதிக்கு ஒத்தி வைக்கப்பட்டுள்ளன. (ச-5)

SPOKEN ENGLISH WITH DIPLOMA CERTIFICATE
A/L எழுதிய மாணவர்கள், பல்கலைக்கழக மற்றும் உயர்கல்வி மாணவர்கள், அரச, தனியார் அலுவலர்களுக்கான
சனி, ஞாயிறு புதிய பிரிவுகள் இன்று ஆரம்பம்
பிரிவு 1 : காலை 8.00 - 10.00 பிரிவு 2 : காலை 10.00 - 12.00
பிரிவு 3 : மாலை 2.00 - 4.00 பிரிவு 4 : மாலை 4.00 - 6.00
MyWay 182, STANLEY RD, JAFFNA
077 33 63 456 222 9505

## உடற்...

ஆண்டுக்கான பெரு விளையாட்டு விழாவின் முதல் கட்ட போட்டிகள் பதுளை பொது விளையாட்டரங்கில் நடைபெற்று வருகிறது.

இதில் நேற்று நடைபெற்ற பெண்கள் பிரிவு உடற் பயிற்சிப் போட்டியில் மாணிப் பாய் மகளிர் கல்லூரி அணி முதலாமிடம் பெற்று சம்பியனானது.

இப் பிரிவில் வவுனியா றம்பைக்குளம் மகளிர் மகாவித்தியாலய அணி இரண்டாமிடத்தைப்பிடித்தது.

இதேவேளை ஆண்கள் பிரிவு உடற் பயிற்சி போட்டியின் இறுதிப் போட்டி இன்று நடைபெறுகின்றது. (ச-5)

YAALH ENGLISH ACADEMY
வழங்கும்
SPECIAL ENGLISH COURSES
ஆசிரியர்: சண்முகம் முத்துலிங்கம்
வகுப்பிட அனுசரணை
புதிய உயர் கல்லூரி
ஆரியகுளம் சந்தி. யாழ்.நகர்.
✱ உத்தியோகத்தர்க்கு ✱ உயர்கல்வியினர்க்கு ✱ பள்ளிப்படிப்பு முடித்தவர்க்கு
ஆரம்பம்: 10.09.2011 சனிக்கிழமை பி.ப.3.00
மாதம் 16 மணிக்கல்வி 500/=. இலவசம் முதலிரு வகுப்புகள்
முழுவிபரங்கள்: 077 32 12 711
(6047)

திருமண நல்வாழ்த்துக்கள்

திவாகரன் கிரிஜா
இன்றைய தினம் (10.09.2011) திருமண பந்தத்தில் இணையும் திவாகரன்-கிரிஜா தம்பதியினர் சகல சௌபாக்கியங்களும் பெற்று இல்லறம் எனும் நல்லறத்தில் இனிதே வாழ மனமகிழ்ந்து வாழ்த்துகின்றோம்.
வாழ்த்துவோர்:- தசர், யது, தனு.

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 10.09.2011 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.